இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 210 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 10 சனிக்கிழமை 24.06.2017

## அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணமும் உயர்கிறது

கொழும்பு, ஜூன் 24
அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பஸ் கட்டணங்கள் சாதாரண பஸ் கட்டணங்களை விட 2.5 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு » 06

புதிய அரசமைப்பு உருவாக்கம்;

## அனைத்துக் கட்சிகளுமே தாமதத்துக்குக் காரணமாம்



கொழும்பு, ஜூன் 24
அரசமைப்புத் திருத்தப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியே காரணமென்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ள அந்தக் கட்சியின் பேச்சாளரும், அமைச்சருமான டிலான் பெரேரா அனைத்துக் கட்சிகளுமே தாமதத்துக்குக் காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். » 06

## இலங்கையில் கால் பதிப்பதற்கு பிரான்ஸ் நிறுவனங்கள் ஆர்வம்

கொழும்பு, ஜூன்24
இலங்கையில் கால்வைப்பதற்கு பிரான்ஸ் நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் மரின் சூ தெரிவித்துள்ளார்.
குறிப்பாக கொழும்புத் துறைமுகம் தொடர்பாக இடம்பெற்று வரும் மாற்றங்களைப் பிரான்ஸ் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.
கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள பிரெஞ்சுக் கடற்படையின் தரையிறக்க மற்றும் உலங்குவானூர்திக் கப்பலான மிஸ்ராலில், செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இலங்கைத் துறைமுகங்களில் » 06

## சட்டவிரோத மீன்பிடியை தடுப்பதற்கு சட்டவரைவு

ஜூலை 6 இல் சபைக்கு வரும்

கொழும்பு, ஜூன் 24
சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். » 06

## வன்முறைகளுக்குப் பின்னால் அரச சார்பற்ற நிறுவனங்கள்

சாடுகின்றார் நீதியமைச்சர் விஜேதாஸ

கொழும்பு, ஜூன் 24
தற்போது ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தைச் சிதைக்கும் முயற்சிகளுக்குப் பின்னால் டொலர்களைக் கையாளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் » 06


## சைட்டம் குறித்து மீண்டும் அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, ஜூன் 24
சைட்டம் குறித்த சிறப்பு அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பயங்கரவாதிகளாக மாறியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். » 06

## சிறிதரன் எம்.பியின் கடிதத்தால் பரபரப்பு

அது போலி என அவர் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, நான் அனுப்பிவைத்தாகத் தெரிவித்து, சமூக வலைத் தளங்களிலும், இணையத் தளங்களிலும் வெளியிடப்பட்டு வரும் கடிதம் போலியானது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். » 06



# சிவசக்தி ஆனந்தன் எம்.பி. நேற்று உண்மையை மறைத்து அறிக்கை

முதலமைச்சரை மீண்டும் ஆதரிக்க மாட்டோம் என்றுதான் கூறினார் என ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதிப்படுத்துகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண முதலமைச்சராக அடுத்த தடவைசி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்படுவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எதிர்ப்பு வெளியிட்டமையை மறுத்து, உண்மைக்குப் புறம்பாக விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தான் அப்படி எதுவும் தெரிவிக்கவில்லை என்று அவர் கூறினாலும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற » 25

# 13ஆவது திருத்தமே தீர்வுக்கு ஒரே வழி

கர்தினால் மல்கம் ரஞ்சித் யாழ்ப்பாணத்தில் உரை

கொழும்பு, ஜூன் 24
இனப்பிரச்சினைக்குத்தீர்வாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து நிரந்தர அரசியல்தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும் என கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.
1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச் சிங்களச் சட்டமே இன்று பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.
நேற்று வெள்ளிக்கிழமை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் » 06



# கூட்டமைப்புடன் சு.க. நேற்றிரவு முக்கிய பேச்சு

அரசமைப்பு உருவாக்கத்தில் முன்னேற்றமான நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24
அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நேற்றிரவு இரண்டரை மணி நேரம் நடைபெற்ற பேச்சு சுமுகமாக இணக்கமாக முடிவடைந்துள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் முன்னேற்ற கரமான நிலைப்பாடு » 06

## சுகாதார அமைச்சுக்கு ரூபா 9 லட்சம் நட்டம்

கொழும்பு, ஜூன் 24
சுகாதார அமைச்சின் சுவசிறிபாய கட்டடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக அமைச்சுக்கு 9 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவபீட மாணவச் செயற்பாட்டாளர்களால் சுகாதார அமைச்சின் சுவசிறிபாய கட்டடம் புதன்கிழமை சுற்றிவளைக்கப்பட்டது.
இதன்போது தாக்குதலும் மேற்கொள் » 06

## 300 மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி

கொழும்பு, ஜூன் 24
இலங்கையில் அரிசியின் இருப்பை நிலையாகப் பேணும் பொருட்டு அவசரமாக 300 மெற்றிக்தொன் அரிசி இறக்குதி செய்யப்படவுள்ளது என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
உள்ளூர் சந்தையில் அரிசியை நிலையாகவும், தட்டுப்பாடு இன்றியும் வைத்திருப்பதற்காக மூன்று நாடுகளிடம் அரிசியைக் கொள்வனவு செய்வது தொடர்பான பேச்சு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
முதற்கட்டமாக நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி வகைகளையே » 06

## வடக்கு இனவாதிகளை முதலிலே கைது செய்க

மகிந்த அணி வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன்24
ஞானசாரதேரரைக் கைதுசெய்யும் முன்னர் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் மற்றும் அசாத்சாலி போன்றோரைக் கைது செய்ய வேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்த தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக » 25

## அடிப்படைவாதிகள் விடயத்தில் மௌனம் காக்கக்கூடாது அரசு

அயலுறவு அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 24
அடிப்படைவாதிகள் சிலர் நாட்டு மக்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி ஜனநாயகத்தைச் சவாலுக்குட்படுத்தும் நிலையில், நல்லாட்சி அரசு மௌனம் காக்கக்கூடாது என்று அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.
எனவே, வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை » 06

# இணைந்த நேர அட்டவணை அடிப்படையில் சேவை ஒழுங்கு

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாணத்தில் இணைந்த நேர அட்டவணை மற்றும் 60:40 என்ற சேவை ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நியதிச் சட்டம் தற்பொழுது சீர் செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்த சேவை ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
எமது நியதிச் சட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்டதால் சில நடைமுறைகளை நடைமுறைப்படுத்தலில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது இணைந்த அட்டவணை நாம் தயார் செய்து உள்ளோம். அதன்படி பேருந்து சேவை நடைபெற வேண்டும். 60:40 என்ற சேவை விகித அடிப்படையில் அமைய வேண்டும். அவ்வாறு நடந்துகொள்ளாதவர்களின் மீது நியதிச் சட்டத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வெகுவிரைவில் வவுனியாவில் நடைபெறும். இதன் பொது பேருந்து சேவையில் ஈடுபடும் இரண்டு தரப்பினரும் அழைக்கப்பட்டு சுமுகமான முறையில் கலந்துரையாடப்படும். வவுனியாவில் 195 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டுப் பிரச்சினை காரணமாக பயன்படுத்தாமல் உள்ள புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டுக்கு வரும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்களின் 14 கிளைச் சங்கங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து தனியார் பேருந்து சங்கங்களின் இணையக் குழு தெரிவு இடம்பெறும். தனியார் போக்குவரத்தில் ஈடுபடும் உரிமையாளர்களின் ஆவணங்கள் தொடர்பாக உள்ள செலுத்த வேண்டிய பணம் தொடர்பாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு தொகை அறிவிக்கப்படும். நான் தனியார் துறைக்கு அதிக ஆதரவு கொடுக்கின்றேன் என குற்றம் சட்டுகின்றார்கள். ஆனால் அப்படி இல்லை - என்றார். (ற-10,ரி)

## காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 24
காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் ஐந்து மாவட்டங்களிலும் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. அவர்களின் போராட்டங்கள் 100 நாள்களைக் கடந்து தொடர்கின்றபோதும், அரசு அது தொடர்பில் பாராமுகமாக இருக்கின்றது. தங்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் உறுதியுடன் தெரிவித்தனர். (ற-10)

## கேப்பாபிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறது

முல்லைத்தீவு, ஜூன் 24
தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் நடத்தி வரும் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப்பட்டாத நிலையில் போராட்டம் நேற்றும் 115ஆவது நாளாகத் தொடர்ந்தது.

அதேவேளை, போராட்டம் மேற்கொள்ளும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு புதுக்குடியிருப்பு, கோம்பாவில் இளைஞர்கள் இணைந்து நேற்று கற்றல் உபகரணங்கள், வழங்கினர். (ற-10,7)

## பொலிஸ் ஊடகப் பேச்சாளராக ருவன் குணசேகர நியமனம்

கொழும்பு, ஜூன் 24
புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பொது உறவுகள், பொலிஸ் ஊடகம் மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு ஆகியவற்றின் பணிப்பாளரான பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ருவன் குணசேகர நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் நேற்று முதல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


இதுவரை பொலிஸ் ஊடகப்பேச்சாளராகக் கடமையாற்றி வந்த பொலிஸ் மா அதிபரின் அலுவலக பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி, சுகவீனம் காரணமாக பொலிஸ் பேச்சாளர் பதவியில் இருந்து விலகிக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## மகனை கிரிக்கெட் மட்டையால் அடித்துக்கொன்ற தந்தை கைது

கொழும்பு, ஜூன் 24
தந்தையொருவர் கிரிக்கெட் மட்டையால் தனது மகனை அடித்துக் கொலைசெய்துள்ள சம்பவமொன்று நேற்று அதிகாலை புத்தளத்தில் நடந்துள்ளது.

வாய்த் தர்க்கம் வலுப்பெற்றதையடுத்து, குறித்த தந்தை கிரிக்கெட் மட்டையால் மகனைத் தாக்கியுள்ளார். அதில் மயக்கமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

54 வயதான தந்தை கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



*கல்வி உரிமையைப் பெற போராட்டம் நடத்திய பல்கலைக் கழக மாணவர்களை நாகரிகமற்ற முறையில் தாக்கியதைக் கண்டித்தும் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யக் கோரியும் நேற்று கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.* *(ற-10)*

## பாக். தூதரக ஆலோசகருடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 24
இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றிய கேர்ணல் இர்ஷாத் கான் நேற்றுக் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தனவை சந்தித்தார். கேர்ணல் இர்ஷாத் கானின் பாதுகாப்பு ஆலோசகர் பதவி நிறைவடைவதை முன்னிட்டு இந்தச் சந்திப்பு கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது. (ற)

## பொதுமானிடப் பண்பை வெளிப்படுத்தும் ரமழான்

### அரசதலைவர் மைத்திரி வாழ்த்து

கொழும்பு, ஜூன்24
சமய எல்லைகளைக் கடந்து பொது மானிடத்தை இலக்காகக் கொண்ட வளமான தொலைநோக்குடைய ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடும் இலங்கை மற்றும் உலகெங்கிலும் வாழும் முஸ்லிம் மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள நோன்புப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,
உலகெங்கிலும் வாழும் முஸ்லிம் மக்கள் மிகுந்த பக்தியுடன் ரமழான் மாதத்தில் கடைப்பிடித்துவரும் பரஸ்பர கௌரவம், சமத்துவம், ஈகை மற்றும் ஏழைகளுக்கு உதவுதல் போன்ற பண்புகள், மனிதனது விடுதலை சுயநலத்திலன்றி பிறர் நலம் பேணுவதிலேயே தங்கியுள்ளது என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அந்தவகையில் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளின் மூலம் முழு மனித சமூகத்திற்கும் விடுக்கப்படும் முக்கிய செய்தி பிரபஞ்ச சமத்துவம் என்பதாகும்.

சமய, ஆன்மிக மற்றும் சமூக பெறுமானங்களின் அடிப்படையில் எல்லாவற்றிலும் சமத்துவத்தைப் பேணுவதே அதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தவர்களது கஷ்டங்களைப் புரிந்துகொள்வதுடன், தமக்குத் தாம் நேர்மையாக இருப்பதனால் மனிதம் வளம்பெறும் என்பதை ரமழான் நோன்பு எமக்கு நினைவுபடுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (த-ய)

## போராட்டத்தில் புலனாய்வு பிரிவு ஊடுருவுவதை ஏற்க முடியாது

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
மாணவர்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களில் புலனாய்வுப் பிரிவு ஊடுருவுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.



இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மாணவ தலைவர்களை கைது செய்வதால் ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்த முடியாது. போராட்டங்களுக்குள் ஊடுருவ வேண்டாமென அரசுக்கும், அரசில் பணி செய்யும் புலனாய்வுப் பிரிவுக்கும் நாங்கள் வலியுறுத்த விரும்புகின்றோம்.

புலனாய்வுப் பிரிவினர் எமது பாதுகாப்புக்காக போராட்டத்துக்குள் வரவில்லை. அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் புகைப்படங்களை பாதுகாப்புத் தரப்புக்கு கொண்டுச் சென்று கொடுக்கவே வந்தார்கள்.

ஸ்சைட்டம் நிறுவனம் தனிநபருக்குச் சொந்தமானதாக காணப்படுகின்றது என்றும், அதனை மாற்றியமைக்குமாறும் எம்முடன் நடைபெற்ற பேச்சில் நாங்கள் கூறினோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அது மிகப்பெரிய பொய். யார் அப்படிக் கூறியது என ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றோம். என்ன நடந்தாலும் எமது போராட்டம் தொடரும்.

அதேபோல் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை என அரச தரப்பு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. அது முற்றிலும் தவறு - என்றார். (ற)

# இரணைதீவு மக்கள் நேற்று சாலை மறியல் போராட்டம்

## பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி

கிளிநொச்சி, ஜூன் 24
கடற்படையினர் வசமுள்ள இரணைதீவை விடுவித்துத் தம்மை மீள்குடியமர்த்த வேண்டும் என்று வலியுறுத்தித் தொடர் போராட்டம் நடத்திவரும் மக்கள் நேற்று ஏ-32 மன்னார் சாலையை மறித்துப் போராட்டம் நடத்தினர்.

கடற்படை கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கடந்த மே மாதம் முதலாம் திகதி அந்த மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களின் கோரிக்கைக்கு இதுவரை எந்தவித பதிலும் வழங்கப்படாத நிலையில் நேற்று 54 ஆவது நாளாக அவர்களின் போராட்டம் தொடர்கின்றது.



சுமார் எழுநூறுக்கும் அதிகமான மக்கள் நேற்றுக் காலை பதாகைகளைத் தாங்கியவாறு பேரணியாக வந்து முழங்காவில் மகா வித்தியாலயத்துக்கு அருகில் ஏ-32 மன்னார் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"இவ்வாறு வீதியை மறித்துப் போராட்டம் செய்வது சட்டத்திற்கு முரணானது. போக்குவரத்துக்குத் தடையாக இருப்பவர்களைக் கைதுசெய்யவும் முடியும். போராட்டத்தை நிறுத்தத் தேவையான ஆயுதங்கள், கருவிகள், நீதிமன்ற உத்தரவு என்பன எம்மிடம் உள்ளன. நாம் எதனையும் செய்யவில்லை. சாலையின் ஒரு பகுதியில் போக்குவரத்துக்கு அனுமதியுங்கள்." என்று அங்கு வந்த கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் மக்களிடம் கோரினார்.

அதையடுத்துப் போராட்டம் சாலையின் ஒருபுறத்துக்கு மாற்றப்பட்டு தொடர்ந்தது.

இவ்வளவு நாள்களும் பொறுத்து விட்டோம். இனிமேல் எங்களால் பொறுக்க முடியாது. பொறுப்பான பதிலை மேல் நிலை அரச அதிகாரி ஒருவர் தரும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

போராட்டம் ஆரம்பித்து 3 மணித்தியாலங்களின் பின்னர் அந்த இடத்துக்கு வந்த பூநகரிப் பிரதேச செயலரின் உறுதி மொழிக்கமைய வீதிமறிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

"இரணைதீவு சம்பந்தமாக மேலிடங்களுக்கு மாவட்டச் செயலர் ஊடாகப் பல முறை அறிவித்துள்ளோம். எதிர்வரும் புதன்கிழமை எனக்கும் மாவட்டச் செயலருக்கும் கடற்படையினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் நடைபெற உள்ளது. அந்தக் கலந்துரையாடலுக்காக இரணைதீவு சம்பந்தப்பட்ட மேலதிக தரவுகளையும் வழங்க உள்ளோம். அதுவரை ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." என்று பூநகரி பிரதேச செயலர் மக்களை கேட்டுக் கொண்டார்.

இரணைதீவு மக்களால் முன்னெடுக்கப்பட்டுவந்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் தொடரும் எனவும் இந்த சந்திப்பில் தமக்குச் சாதகமான பதில் எதுவும் கிடைக்காவிடின் போராட்டம் வேறு வடிவத்துக்கு மாறும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் தெரிவித்தனர்.

(ற-10,35,6)

## ஏறாவூர் இரட்டைக் கொலை; சந்தேகநபர்களுக்கு மறியல்

மட்டக்களப்பு, ஜூன் 24
மட்டக்களப்பு ஏறாவூர் இரட்டைக்கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ஆறு பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.ஐ.எம் றிஸ்வி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாம் ஒழுங்கையிலுள்ள வீட்டில் படுத்துறங்கிய 56 வயதான என்.எம். சித்தி உசைரா மற்றும் அவரது திருமணமான மகளான 32 வயதுடைய ஜெனீரா பாணு மாஹிர் ஆகியோர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அதிகாலை பொல்லால் அடித்து கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 24 வயதுடைய முஹம்மது பாஹிர், வசம்பு என்றழைக்கப்படும் 28 வயதுடைய உசனார் முஹம்மது தில்ஷான், 23 வயதுடைய கலீலுர் ரகுமான் முஹம்மது றாசிம், 23 வயதுடைய புஹாரி முஹம்மது அஸ்ஹர், 30 வயதுடைய இஸ்மாயில் சப்ரின் மற்றும் 50 வயதுடைய அபூபக்கர் முகம்மது பிலால் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

(ற-10)

## அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு போராட்டம்

கொழும்பு, ஜூன்24
நமுனுகுல.கந்தஹேனதோட்டதொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு ஏதும் காணப்படவில்லை எனத் தெரிவித்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூட்டு ஒப்பந்தந்தின்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டியநாள் சம்பளமான 730 ரூபா இது வரை காலமும் வழங்கப்படவில்லை. 530 ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது. வேலை நாள்கள் குறைவாகவே வழங்கப்படுகின்றன. தோட்டக் காணிகள் சரியானமுறையில் பராமரிக்கப்படாமையால் நாளுக்கு நாள் தேயிலை உற்பத்தி குறைவடைகின்றது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கைகள் குறித்து குறித்து முகாமையாளரை தொழில் திணைகளத்துக்கு அழைத்த போதும் அதைப் பொருட்படுத்தாது முகாமையாளர் செயற்படுகின்றார் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

(ற-10)

## நிர்வாகக் கட்டடம் திறப்பு



கிளிநொச்சி, ஜூன் 24
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள் நிதி அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் நடத்திய பச்சிலைப்பள்ளியின் பனுவல் ஆவணப்பட வெளியீடும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மண்டப திறப்பு விழாவும் நேற்று இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் இரண்டாவது நிர்வாகக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திறந்தார்.

மக்களுக்கான சேவையைத் தடையின்றி வழங்கும் முகமாகவும் பிரதேச செயலகங்களின் வளங்களை விருத்தி செய்யும் முகமாகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் பிரதேச செயலகங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. பளைப் பிரதேச செயலகத்தில் மேற்படி அமைச்சின் நிதி உதவியுடன் 10 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் மாவட்டச் செயலர் இராசநாயகமும், மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் என பலர் கலந்து கொண்டனர்.

(ற-10, 35, 6)

## ஹற்றன் கழிவகற்றல் பிரச்சினை தோட்டங்களில் இடங்கள் தெரிவு

ஹற்றன், ஜூன் 24
ஹற்றனில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதற்கு ஹற்றன் பகுதியில் உள்ள 5 பெருந்தோட்டங்களில் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ராம் தெரிவித்தார்.

ஹற்றன் குப்பை விவகாரம் தொடர்பாக ஹற்றன் டிக்கோயா நகர சபையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பிர்களும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ராம் மாத்திரமே கலந்து கொண்டார்.



ஹற்றன் டிக்கோயா நகர சபையின் செயலாளர், அம்பகமுவ பிரதேச செயலகத்தின் செயலாளர், நுவரெலியா பிரதேச செயலாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"குப்பைகள் கொட்டுவதற்கு மவுன்ஜீன், டெம்பள்ஸ்டோவ், வெளிஓயா, அய்ற்றி, பழைய கொழும்பு வீதியில் பார்க்கப்பட்ட குறித்த ஒரு இடம் மற்றும் லொனெக் ஆகிய இடங்கள் பார்வையிடப்பட்டுள்ளது. இந்த 5 இடங்களில் பொருத்தமான ஒரு இடத்தைத் தெரிவு செய்து குப்பைகளை கொட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது தொடர்பில் தோட்ட நிர்வாகங்களுடன் பேச்சு இடம்பெறுகின்றது. தெரிவு செய்யப்பட்ட இடங்களில். குப்பைகளை கொட்டுவதால் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமா, சூழல் மாசடையுமா, குப்பைகள் கொட்டுவதற்கு பொருத்தமான இடமா என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக ஒரு வாரத்தில் இந்த விடயங்கள் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்." என்றார்.

(ற-10)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
வசந்தோற்சவ (தொட்டி திருவிழா) விஞ்ஞாபனம்
இன்று (24.06.2017)சனிக்கிழமை



கும்பபூஜை - மாலை 4.30 மணி
மூலஸ்தான பூஜை - மாலை 5. 00 மணி
தம்ப பூஜை - மாலை 5.30 மணி
வசந்த மண்டப பூஜை - மாலை 6.00 மணி

தொடர்ந்து அம்பாள் உள் வீதி வலம் வந்து தொட்டியிலே எழுந்தருளி விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று திருவூஞ்சல் பாமாலை ஓதப்படும். விஷேட தவில் நாதஸ்வர கச்சேரிகளும் இடம்பெறும். அடியவர்கள் அலையென திரண்டு வந்து அம்பாளின் அருள் பிரவாகத்தை பெற்றுக்கொள்வீர்களாக.

குறிப்பு:
நண்பகல் அன்னதானமும், இரவு - இரவு போசனமும் அடியவர்களுக்கு வழங்குவதற்கு அன்னை அருள் பாலித்துள்ளார்.

வீரமாகாளி அம்மன் கோயிலடி, அம்மன் வீதி.

தொட்டிதிருவிழா உபயகாரர்கள்
S.R.T.சண்முகநாதன் யோகினி
- குடும்பத்தினர்

# மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பு இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 24

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தால் மருத்துவ மனைகளின் வெளிநோயாளர் பிரிவுகள் இயங்காத நிலை காணப்பட்டது. சிகிச்சை பெறச் சென்ற நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நீண்ட தூரத்தில் இருந்து சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு வந்த மக்கள் தனியார் மருந்தகங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்குள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகளில் மருத்துவர்தள் சுமார் 4 தடவைகள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர். இதனால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவது பொது மக்களே என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவபீட மாணவச் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவ மனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் இணைந்துள்ளனர்.

மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவு செயற்படாத போதும், டெங்கு சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, அவசர விபத்துப் பிரிவு, புற்றுநோய்ப் பிரிவு, சிறுவர் மருத்துமனைகளின் சேவைகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10, 56)



# சரஸ்வதி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை

பொற்பதி அறிவாலயத்தால் நடத்தப்படும் சரஸ்வதி முன்பள்ளியின் 32ஆவது மெய்வன்மை போட்டி நாளை ஞாயிற்றுகிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பொற்பதி அறிவாலயத்தின் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக மாவட்ட செயலாளர் எஸ். முரளிதரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் க. விமலநாதன், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ். சுதர்ஜன், கௌரவ விருந்தினர்களாக வீதி அபிவிருத்தி திணைக்கள ஓய்வுபெற்ற முதன்மை முகாமைத்துவ உதவியாளர் எஸ். பரிபூரணன், யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் திருமதி ப. விஜயசொரூபி ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# இனந்தெரியாத கும்பலால் முதியவருக்கு அச்சுறுத்தல்

## யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24

மானிப்பாய், நவாலி மேற்குப்பகுதியில் வசிக்கும் முதியவர், தனக்கு கும்பல் ஒன்றால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி நவரட்ணராஜா (வயது - 72) என்பவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

"கடந்த 4ஆம் திகதி நள்ளிரவு 11 மணியளவில் எனது வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பல் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தியது. அதனால் நாம் கூக்குரல் எழுப்பினோம். ஆத்திரமடைந்த கும்பல் என்னைக் கடுமையாகத் தாக்கியது. புலம்பெயர் நாட்டில் வசித்துவரும் எனது மகன் தொடர்பில் தகவல்களைத் தருமாறு அந்தக் கும்பல் அச்சுறுத்தியது. தாக்குதலில் காயமடைந்த நான் அயலவர்களின் உதவியுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டேன். வைத்தியசாலைக்கு வந்த பொலிஸார் என்னிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர். எனது வாக்குமூலத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

வைத்தியசாலையில் தொடர்ந்து 3 நாள்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர், இரவு வேளைகளில் என்னை அச்சுறுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளில் அந்தக் கும்பல் நடமாடுகிறது. இதனால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது" என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் வழங்கிய முறைப்பாட்டில் முதியவர் தெரிவித்துள்ளார். (வ-21)

# குற்றச்சாட்டை நிரூபியுங்கள் இருமடங்கு பணம் தருகிறேன்

## அமைச்சர் டெனீஸ்வரன் சவால்

யாழ்ப்பாணம் ஜூன் 24

'என் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், ஊழல் செய்ததாகக் கூறப்படும் தொகையின் இரண்டு மடங்கு பணத் தொகையை நான் தருவேன்" இவ்வாறு சவால் விடுக்கிறார் வடக்குமாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் பா. டெனீஸ்வரன்.

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற >> 06

# அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத் தலைவர் கைது

கொழும்பு, ஜூன் 24

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவனத்துக்கு எதிரான போராட்டம், கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அதன்போது சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



மாளிகாகந்த நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-10)

# அதிகாரங்களைப் பயன்படுத்த தவறிவருகிறது வடக்கு அரசு

## நவசமசமாஜக்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 24

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ் வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபை தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் தேவையற்ற செயற்பாடுகளிலேயே ஈடுபடுவதாக >> 25



# மூக்குக் கண்ணாடி வழங்கல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 24

விழிசிட்டி மகளிர் ஒன்றியமும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விழிசிட்டி சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

விழிசிட்டி மகளிர் ஒன்றியத்தின் தலைவர் திருமதி சிவகரன் பரஞ்சோதியின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக விழிசிட்டி மகளிர் ஒன்றியததின் போசகர் சி. நவரட்ணம் , சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# பொதுக்கூட்டம்

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6மணிக்கு நிலைய கீழ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சனசமூக நிலையச் செயலாளர் கு. மதுசுதன் தெரிவித்துள்ளார். (21)

# கூட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பட்டுள்ளதுடன், இரு தரப்பும் பேச்சுக்களில் திருப்தி வெளியிட்டுள்ளன.

புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை தடங்கலைச் சீர் செய்வதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது. இதற்கமைவாக நேற்றுப் பேச்சு நடைபெற்றது.

அரச தலைவரின் இல்லத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் இரவு 10.30 மணி வரை நீடித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வழிநடத்தல் குழுவில் பங்குபெறும், கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமல்சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க, மகிந்த அமரவீர, லக்ஸ்மன் யாப்பா அபேவவர்த்தன, டிலான் பெரேரா, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## பண்டா - செல்வா உடன்பாடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டத்தின் ஆரம்பத்திலேயே சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார். பண்டா - செல்வா உடன்பாடே, தமிழர் பிரச்சினை குறித்து முதலாவதாகச் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை என்பதை அவர் தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனரான பண்டாராநாயக்க, தந்தை செல்வாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று இவ்வளவு தூரம் நாட்டில் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனை பலமுறை தெரியப்படுத்தியும் உள்ளோம். மங்கள முனசிங்க அறிக்கை, சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி, மகிந்த காலத்தில் அமைக்கப்பட்ட சர்வகட்சிக் குழு, இவற்றில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வை நாம் ஏற்கத் தயாராக இருக்கின்றோம் என்று இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## ஒற்றை ஆட்சி இல்லை

புதிய அரசமைப்பு ஒற்றை ஆட்சி என்ற சொல் நீக்கப்படக் கூடாது என்று வழிநடத்தல் குழுவில் வலியுறுத்தியிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றைய பேச்சுக்களின் போது தனது நிலைப்பாட்டில் தளர்வை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கூட்டாட்சி என்ற சொல் பதத்தை புதிய அரசமைப்பில் உள்ளடக்க வேண்டும் என்பதைக் கைவிடுவதால், ஒற்றை ஆட்சி என்ற சொல் உள்ளடக்கப்படுவதை கைவிடுவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆங்கிலத்தில், யுனைர்ரரி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏக்கிய ராஜ்ஜிய என்பது ஒரு பிளவுபடாத பிரிக்கமுடியாத நாட்டை மாத்திரமே குறிக்கும். அது ஆட்சிமுறையைக் குறிக்காது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இடைநடு நிலைப்பாடு

தேர்தல் முறைமை கலப்பு முறையாக இருக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது. தேர்தல் முறைமை தொடர்பில் கூட்டமைப்புக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அரசதலைவர் அதிகார முறைமை தொடர்பிலேயே நீண்ட நேரம் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, "நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை நீக்குவதாக மக்களுக்கு நான் வாக்குறுதி கொடுத்துள்ளேன். எனது நிலைப்பாடும் அதுதான். ஆனால் கட்சி, இதற்கு எதிர்மாறான நிலைப்பாட்டில் உள்ளது. நிறைவேற்று அரச தலைவர் முறையை நான் நீக்க முடியாது. மக்களும், நாடாளுமன்றமுமே அதனைச் செய்ய முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அரச தலைவர் முறைமை என்ற 'லேபிள்' தேவையா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கேட்டுள்ளார். அதற்கு சுதந்திரக் கட்சியினர் அப்படித் தேவையில்லை. அரச தலைவரிடம் சில அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். இறுதியில், நிறைவேற்று அரச தலைவர் முறைமையை முற்றாக நீக்குவது என்றும் இல்லாமல், தொடர்ந்து அதனை அதே வடிவத்தில் வைத்திருப்பது என்றும் இல்லாமல், இரண்டுக்கும் இடைப்பட்ட நடு நிலைப்பாட்டை எடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியுள்ளது.

## யு.என்.பி -ஜே.வி.பி பேச்சு

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கையில், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை தொடர்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு உள்ளடக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. அதற்கு கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு அமைவாக, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் பேச்சு நடத்தவுள்ளது. பெரும்பாலும் வழிநடத்தல் குழுவின் அடுத்த அமர்வுடன், இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிய வருகின்றது. (வ-5)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24
உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சி. சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் திருமதி நேசராணி தனபாலசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

## உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டம் நடத்தும் உண்ணீர் சொருவிக்கும் சிறப்பு வழிபாடும் உலக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாடும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடிகாமம் மீசாலை வடக்கில் ஆரம்பமாகியது.
உயிர்இரக்கத்தின்வழிநின்று உலக சகோதரத்துவத்தை வளர்த்தல் என்னும் கருப்பொருளில் நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை இடம்பெறும்.
தூர இடத்திலிருந்து வெளிநாடுகளிலிருந்தும் வந்து கலந்துகொள்கின்ற அன்பர்களுக்குத் தங்குமிட வசதியும் பசியாற்றுவித்தலும் இதர ஒழுங்குகளும் செய்து தரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (4)

## கற்கை நெறிகளைப் நிறைவு செய்தோருக்கு திங்கள் சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஜூன் 23
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கைநெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
இந்த நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயும், சிறப்பு விருந்தினராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தலைவர் எந்திரி (கலாநிதி) லயனல் பின்ரோ கலந்து கொள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

### தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு

# பலருக்கு அழைப்புக் கடிதம் கிடைக்காததால் சிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன்24
"வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றும் தமக்கு நிரந்தர நியமனத்துக்கான, நேர்முகத்தேர்வுக்காக் கடிதம் வலயக் கல்வி அலுவலகத்தால் இதுவரை அனுப்பப்படவில்லை. இது எமக்கான நிரந்தர நியமனத்தை வலயக்கல்வி அலுவலகம் புறக்கணித்துள்ளதாகவே உணர்கின்றோம். மாகாணக் கல்வி அமைச்சு, இது தொடர்பில் உடனடியாக உரிய நடவடிக்கை வேண்டும்."
இவ்வாறு வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட நேர்முகத்தேர்வுக்கான கடிதம் கிடைக்கப்பெறாது பாதிக் கப்பட்ட தொண்டராசிரியர்கள்.பலர் அவசர கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக பணியாற்றுபவர்களுக்கான நிரந்தர நியமனம் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நேர்முகத்தேர்வுக்கான கடிதங்கள் வலயக்கல்வி அலுவலங்களினாலும் அனுப்பட்டு வருகின்றன.
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட எமக்கு இந்த கடிதங்கள் அனுப்பப்படவில்லை. நாங்கள் 2012, 2013 ஆண்டுகளில் எமது கிராமத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றிவருகின்றோம். எந்தவித மான வருமானமும் இன்றி அர்ப்பணிப்புடனேயே நாம் பணியாற்றினோம். வீட்டில் வறுமை இருந்தாலும் என்றாவது ஒருநாள் எமக்கு நியமனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். வலயக்கல்வி அலுவலகம் கடிதம் அனுப்பவில்லை.
அலுவலகத்தில் ஒட்டப்பட்டுள்ள அறிவித்தலில் எமது பெயர் விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் பணியாற்றிய சில தொண்டராசிரியர்களுடைய பெயர்கள் அதில் உள்ளன. வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய வலயங்களிலும், அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (2012, 2013 காலப்பகுதியில் கடமையாற்றியவர்கள் உள்ளடங்கலாக) எமது வலயத்தில் மட்டும் நாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். இதற்கான காரணத்தை வயலக்கல்வி அலுவலகம் எமக்கு சரியான முறையில் தெரியப்படுத்தவில்லை. திட்டமிட்டு புறக்கணிக்கப் பட்டுள்ளோமா? என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.
அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் கடிதங்கள் அனுப்படும் போது எமக்கு அனுப்பாதமை வேதனையளிக்கின்றது. எமது பெற்றோருக்கும் மன உழைச்சலை ஏற்படுத்தியுள்ளது. நாம் ஏன் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்? என்பது இன்றுவரை எமக்கு தெரியவில்லை. எனவே நாம் தகுதியானவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு நேர்முகத்தேர்வுக்கு எம்மையும் உள்வாங்குங்கள். எமக்கு ஏன் கடிதங்கள் அனுப்பவில்லைஎன்பதை ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுங்கள்" என்று தொண்டராசிரியர்கள் பலரும் கோருகின்றனர்.
"மாகாண கல்வி அமைச்சினால் எமக்கு அனுப்பட்ட சுற்றிக்கையின் பிரகாரமே தொண்டராசிரியர்களுடைய பெயர் விவரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. கடிதங்கள் அனுப்படுகின்றன. வயலக்கல்வி அலுவலகத்தால் கடிதங்கள் அனுப்படாதவர்கள் மாகாண கல்வி அமைச்சினால் தரப்பட்ட சுற்றிக்கையின் நிபந்தனைகளுக்கு உட்படாதவர்களாக இருப்பார்கள். பாதிக்கப்பட்டதாக கூறும் தொண்டராசிரியர்கள் இது தொடர்பாக மாகாண கல்வி அமைச்சில் பேச முடியும்" என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (4-21)

## பொலிஸ் உத்தியோகத்தர் நினைவாக குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 24
விபத்தில் உயிரிழந்த உபபொலிஸ் பரிசோதகர் அமரர் ஆ.துரைராஜசிங்கத்தின் நினைவாக குருதிக் கொடைமுகாம் இடம்பெறவுள்ளது.
துரைராஜசிங்கம் இளவாலை பழனியானந்தன் சனசமூக நிலையத்தில் உறுப்பினராக பணியாற்றியவர். அவரது நினைவான குருதிக் கொடை
நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (4-21)

## துவிச்சக்கரவண்டி யாழ்.நகரில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாண நகரப் பகுதியில் வங்கி ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
சில நாள்களுக்கு முன்னர் சம்பவம் இடம்பெற்றது. வங்கியில் தனது தேவையை முடித்துக் கொண்டு வெளியேறியபோதே துவிச்சக்கரவண்டிதிருடப்பட்டமை உரிமையாளருக்குத் தெரிய வந்தது. அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. (4-23)

## வாள்வெட்டு கும்பலைச் சேர்ந்தவர் விளக்கமறியல் சாலைக்குள் அடைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
மானிப்பாயில் கடந்த வருடம் பல்கலைக்கழக மாணவன் ஒருவனின் கையை வெட்டிய சம்பவம் உள்ளிட்ட வன்முறைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவர் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்று உத்தரவிட்டது.
பல்கலைக் கழக மாணவன் ஒருவனின் கையை வெட்டியமை, கொக்குவில் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட வன்முறைகளுடன் தொடர்புடையவராக அசோக் மோகன் என்றழைக்கப்படும் நபரைக் கோப்பாய் பொலிஸார் தேடிவந்தனர். சுமார் ஒரு வருடமாகும் நிலையில் அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
"இவர் வாள்வெட்டு, வீடு உடைப்பு, அடிதடி போன்ற பல வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டிலும் ஆவாக் குழு என்னும் சமூக விரோத கும்பலுடன் இணைந்து செயற்பட்ட குற்றச்சாட்டிலும் நீண்டகாலம் தேடப்பட்டு வந்துள்ளார். பொலிஸாரின் கண்ணில் படாது தலைமறைவாக வாழ்ந்த இவர் பொலிஸாரால் இலக்கு வைக்கப்பட்டிருந்தார்.
இந்த நிலையில் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் ஓரிடத்தில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டார். இவர் யாழ்ப்பாணம் மற்றும் மானிப் பாய் பொலிஸ் பிரிவுகளில் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளார். அவர் மீதான விசாரணைகள் தொடரும்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-101)

## மகாஜனாவில் இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.
கல்லூரியின் முதல்வர் ம. மணிசேகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வைத்திய நிபுணரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய சி.நவரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் இ.ஶ்ரீ அருளானந்தன், தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரி மா.ஆனந்தகுமாரும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை சிறிதுர்க்கா தேவி அம்மன் ஆலயத் தின் தலைவர் காலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-422)

## வலி.மேற்கில் வறட்சி பாதித்த கிராமங்களுக்கு குடிதண்ணீர்

வலி.மேற்கில் வறட்சி பாதித்த இடங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி செ.சண்முகலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.
"வேள்விசன் லங்கா நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் இந்தத் திட்டம் அராலி உப அலுவலக பிரிவிற்கு வழங்கப்படவுள்ளது. வறட்சிபாதித்த இடங்களுக்கு ஆயிரம் லீற்றர் கொள்ளவுடைய நீர்த்தாங்கிகளுக்கு லொறி பவுசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.
வலி.மேற்கில் 25 கிராம அலுவலர் பிரிவில் வறட்சி அதிகம் பாதித்த பகுதிகள் இனம்காணப்பட்டு ள்ளன.
முதற்கட்டமாக அராலி உபஅலுவலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் பின்னர் ஏனைய பிரதேச பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும்" என்று செயலாளர் மேலும் தெரிவித்தார். (4-50)

## இணுவில் இந்துவின் முத்தமிழ் விழா இன்று

இணுவில் இந்துக்கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக பேராசிரியர் வ.மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவமும், வடக்கு மாகாண சபை ஓய்வு பெற்ற தலைமைக் கணக்காளர் வை.குகதாசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-28)

## வீட்டில் கள்ளு வைத்திருந்த 14 பேருக்குத் தண்டம்

அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் அதிகளவு கள் வைத்திருந்த 11 தொழிலாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
மேலும் 3 தொழிலாளர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகளை தனித்தனியாக விசாரணைக்கு எடுத்த நீதிமன்று, அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் இவ்வாறு தண்டம் விதித்தது. (4,9)

# கஞ்சா விற்றவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம்

### யாழ்.மேல்நீதிமன்று தீர்ப்பு

26 கிலோ 500 கிராம் கஞ்சாவை விற்பனை செய்யும் நோக்குடன் வைத்திருந்த ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்ப்பாண மேல்நீதிமன்று.
2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணம் சேந்தாங்குளத்தில் 26 கிலோ 500 கிராம் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளவாலைப் பொலிஸாரால் கிம்றி அர்ஜீன் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அன்றிலிருந்து ஒருவருடகாலம் விளக்க மறியலில் இருந்து 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
குற்றஞ்சாட்டப்பட்டவர்கூந்தவணை நீதிமன்றில் முற்பட்டிருக்க வில்லை. அவருக்கெதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எதிரி மன்றில் நேற்று முன்தினம் முன்னிலையானார்.
எதிரிக்கு எதிரான குற்றப்பத்திரம் தமிழ் மொழியில் வாசித்துக்காட்டப் பட்டது. குற்றவாளி தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து இருதரப்பு தொகுப்புரைகள் இடம்பெற்றன. தொகுப்புரைகளை கவனத்தில் எடுத்த நீதிபதி கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும், கஞ்சா போதைப் பொருளை விற்பனை செய்த குற்றத்துக்கு 50ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (4-12)

## அனைத்துக்...

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தவொரு கட்சியும் அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான தமது இறுதிக் கொள்கை விளக்கத்தை இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியின் கருத்தை வெளிப்படுத்தாமையாலேயே அரசமைப்புத் திருத்தப் பணிகள் தாமதமாவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் தெரிவித்திருந்ததை ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டிருந்தன.

அது பொய்யான தகவல். சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எந்தவொரு கட்சியும் தமது இறுதிக் கொள்கை விளக்கத்தை வெளியிடவில்லை. எனினும் இது தொடர்பில் கட்சி மட்டத்திலும், இரண்டு பிரதான கட்சிகளும் கடந்த வாரம் சந்தித்து கலந்துரையாடியிருந்தன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய திருத்தங்கள். அதேபோல் மக்கள் வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய திருத்தங்கள் எவை? தேர்தல் காலங்களில் கட்சிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் கலந்துரையாடி அரசமைப்புத் திருத்தக் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் அதனை செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்புத் தொடர்பிலான இறுதி வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக, இறுதி வரைவை உருவாக்குவதற்கான பின்னணி தொடர்பிலான வரைவு ஒன்றைச் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே அனைத்துக் கட்சிகளினதும் தாமதம் காரணமாகவே அரசமைப்பு உருவாக்கப் பணிகள் தாமதமடைகின்றன-என்றார். (த)

## இலங்கையில்...

சீனாவின் தலையீடு தொடர்பாக பிரான்ஸ் கவலை கொண்டுள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனையம் அபிவிருத்திகளை தமது நாடு உன்னிப்பாக பின்தொடர்ந்து வருகின்றது என்றும், இந்தியப் பெருங்கடலில், ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், கடற்கொள்ளை, தீவிரவாதம் என்பன இலங்கை உள்ளிட்ட பிராந்திய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (த-ய)

## சட்டவிரோத...

சட்டவிரோத மீன்பிடித்துறையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே குறித்த சட்டவரைவு கொண்டுவரப்படவுள்ளதுடன், டைனமற் வெடிப்பொருள் மூலம் மீன்பிடிப்போருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, வடக்கில் களப்புகளை அபிவிருத்தி செய்து

மீன்பிடித்துறையை மேலும் விருத்தி செய்யவுள்ளோம். வடக்கில் மன்னார் மாவட்டத்தில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் கடற்றொழில் வலயமொன்று உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(த)

## அடிப்படை...

தவறாகப் பயன்படுத்தி சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு, குழுக்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லை நேற்றுச் சந்தித்து நலம் விசாரித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அயலுறவு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, வைத்தியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் பின்னணியில் அரசியலுடன் தொடர்புடைய சில அதிகாரிகளே இருக்கின்றனர் எனவும் அவர் விமர்சித்தார்.

(த)

## சிறிதரன்...

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்து அவரது கடிதத் தலைப்புடன் கடிதம் ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வந்தது.

அந்தக் கடிதத்தில், வடக்கு மாகாண முதலமைச்சராக நீங்கள் பதவி வகிப்பதே பொருத்தமானது. எனது விருப்பமும் அதுதான். நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் தங்களுக்கு வெளிப்படையான ஆதரவை வழங்க முடியாத சூழலுக்குள் இருக்கின்றேன் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. அத்துடன், பதவி விலகிய அமைச்சர்களுக்கு மாற்றீடாக புதிய அமைச்சர்களைத் தெரிவு செய்யும்போது மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும் என்றோ கல்வி அமைச்சு கிளிநொச்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்றோ நான் வலியுறுத்த மாட்டேன். கல்வி அமைச்சர் பதவி கிளிநொச்சிக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு தங்களிடம் இருந்தால் அதனை தாங்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனைக் கேட்டபோது, இந்தக் கடிதத்துக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது. இங்கு ஓர் அமைச்சைக் குறி வைத்து எழுதுவதன் மூலம் எனக்கும், கிளிநொச்சி மாவட்ட மாகாண சபை உறுப்பினருக்கும் இடையில் சிண்டுமுடித்துவிடும் விசமத்தனமான செயல் இடம்பெறுகின்றது. இந்த அமைச்சை இலக்கு வைத்துச் செயற்படும் யாரோ ஒருவரே இதனைச் செய்திருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். முதலமைச்சருக்கு நான் எனது கடிதத் தலைப்பிலேயே எழுதுவேன். இங்கே நாடாளுமன்ற உறுப்பினரின் கடிதத் தலைப்பு பயன்படுத்தப் பட்டிருக்கின்றது.

இந்தக் கடிதத்தில் எனது கையெழுத்து மற்றும் எனது பெயர் பொறிக்கப்பட்ட இறப்பர் முத்திரை குத்தப்பட்டுள்ளது. இதுவும் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது. இது மிகப் பெரும் ஆபத்தானது. இவ்வாறான போலி ஆவணங்கள் தொடர்பில் ஆராய வேண்டும்.

இந்தக் கடிதத்துக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதுடன், இது தொடர்பில் முதலமைச்சர் கவனம் செலுத்த வேண்டியதில்லை என்பதையும் பகிரங்கமாகவே தெரிவிக்கின்றேன். இந்தன் குற்றவியல் செயற்பாடு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவுள்ளேன் -என்றார்.

(வ-5,101)

## குற்றச்சாட்டை...

செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கடந்த வாரம் அமைச்சர்கள் தொடர்பாக நடைபெற்ற பிரச்சினை பற்றி எல்லோரும் அறிந்திருப்பீர்கள். என்னை ஒரு மாதகால விடுப்பில் செல்லுமாறு எனக்கு பணிக்கப்பட்டது. ஆனால் நான் அவ்வாறு செல்லவில்லை. நான் ஊழல் செய்யவில்லை. அதனால் நான் விடுப்பில் போக தயாராக இல்லை. நீதியான முறையில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விசாரணைக் குழு அமையுமாயின் அந்த விசாரணைக்கு நான் தயார். அதற்கு ஒரு மாதகாலம் அல்ல, தேவை ஏற்படின் எனது அமைச்சு பதவியில் இருந்து விலகி இந்த விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பேன்.

### *சாட்சி*

என்மீது ஊழல் குற்றச்சாட்டுத் தொடுத்த சாட்சி வரவில்லை என்றும் என்னை ஒன்றும் கேட்கவில்லை என்று பலர் கூறுகின்றார்கள். அந்தச் சாட்சி அந்த நாளில் ஜெனிவாவில் உள்ளதாக சொல்லப்பட்டது. ஆனால் அந்தச் சாட்சி அந்த நாளில் யாழ்ப்பாணத்தில்தான் இருந்துள்ளார் என்பதனை நான் நன்கு அறிவேன்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றசாட்டு முறையான விசாரணைக் குழு மூலமாக நிரூபிக்கப்பட்டால் அந்தத் தொகையின் இரண்டு மடங்கை நான் தருவேன். இன்னமும் நான் பயன்படுத்தும் வாகனத்துக்கு எரிபொருள் செலவு போதாமல் உள்ளது. ஒரு மாதத்துக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது என்பதை யாரும் அறிய மாட்டார்கள். இது எனக்காக ஒதுக்கப்பட்ட எரிபொருள் செலவை விட அதிகமாகவே எனக்குச் செலவு ஏற்படுகின்றது. இது தொடர்பாக நான் முதலமைச்சரிடம் தெரிவிப்பேன்.

### *கட்சி மாறவில்லை*

நான் தமிழ் அரசுக்கட்சியுடன் இணைந்து விட்டேன், கட்சி மாறிவிட்டேன் என்று கூறுகின்றார்கள். அதில் எந்த உண்மையும் இல்லை. நான் இப்போதும் ரெலோ கட்சியில் தான் உள்ளேன். 2013ஆம் ஆண்டு நான் கட்சி மூலமாகத்தான் அமைச்சராகப் பதவிஏற்றேன். இன்றும் அதே கட்சியில் தான் உள்ளேன். எனது கட்சி ஜனநாயக முறையை விட்டு வழி தவறி நடந்தால் நான் கட்சி மாற வேண்டிய நிலை ஏற்படும். அமைச்சர்கள் மீது யாரும் எந்த குற்றச்சாட்டும் வைப்பார்கள். அதனை உரிய விசாரணைக்குழு மூலமாகப் பரிசீலனை செய்த பின்னர் அவர்கள் பற்றிய தகவல்களை விசாரணைக்கு உட்படுத்துங்கள். இல்லை என்றால் மக்களுக்காக செயற்படும் மாகாண சபை என்ற பெயர் இல்லாமல் போய் வடக்கு மாகாண சபை விசாரணை சபையாக மாறும்.

### *ராசியில்லாத ஆசனம்?*

அவைத் தலைவர் என்பவர் மரியாதைக்கு உரியவர். அதனால்தான் அவரின் ஆசனம் அண்மையில் புதிதாக வடிவமைக்கப்பட்டது. அது எமக்கு ராசி இல்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது. அந்தக் கதிரை வந்த பிறகு வடக்கு மாகாண சபையில் அமைதியின்மை காணப்படுகின்றது. ஆனால் கடந்த வடக்கு மாகாணசபை அமர்வு மிக அமைதியாக நடைபெற்றது மிகவும் வரவேற்கத்தக்கது" - என்றார்.

(4,ரி)

## 13ஆவது...

தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்:

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இல்லாததைப் பற்றி பேசுவதைவிட இருக்கும் விடயம் ஒன்றில் ஆம்பித்து முன்னோக்கிச் செல்லவேண்டும். சிலர் இல்லாததைப் பேசுகின்றனர். ஆகவே இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு தீர்வுக்கான வழியைத் தேட முடியும்.

1991ஆம் ஆண்டு போர் கடுமையாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பொன், வெள்ளி, பவள விழாவில் கலந்துகொள்வதற்காகச் சேறும் சகதியும் நிறைந்த கொம்படிப் பாதையால் பல சிரமங்கள் மத்தியில் யாழ்ப்பாணத்துக்கு வந்தேன்.

தமிழர்கள் தங்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதும் நிலையை தனிச் சிங்களச் சட்டமே ஏற்படுத்தியது. இதனால்தான் போர் ஆரம்பமாகியது.

ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய தீர்வை நோக்கி ஒன்றாகப் பயணிப்போம்.

கத்தோலிக்க திருச்சபையின் பாடசாலைகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும். சென் பற்றிக்ஸ் கல்லூரி கல்விமான்கள் பலரையும் சமூகப் பிரக்ஞையுடைய பலரையும் உருவாக்கியுள்ளது. இதையிட்டு பெருமைப்படுகிறேன் - என்றார்.

(த)

## சைட்டம்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவச் சபையானது அரசியல் பின்னணியில் செயற்பட்டுவருகின்றது. அந்த அமைப்பின் செயற்பாடுகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சைட்டத்தின் பங்குகளைப் பங்குச்சந்தையில் சமர்ப்பிக்கவேண்டியுள்ளது. மேலும் சைட்டத்துக்கு மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பம் கோருவதை நிறுத்தி யுள்ளோம். அதேநேரம் நெவில் பெர்னாண்டோவின் வைத்தியசாலையை நாம் அரச உடைமையாக மாற்றிப் பெறுவோம். அதற்கான பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பேன் - என்றார். (த)

## வன்முறைகளுக்குப்...

உள்ளதா என்று தாம் சந்தேகிப்பதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுப்பதற்கு மிகவிரைவில் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச நேற்று கண்டி தலதா மாளிகைக்கு சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இதன்போது அஸ்கிரியப் பீடம் தலைமையில் நடத்தப்பட்ட மாநாட்டில் ஞானசார தேரருக்கு ஆதரவாக வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக மிக நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நீதியமைச்சர்,

மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தின் அவசியம் இந்த நாட்டில் தற்போது உணரப்படுகின்றது. அதற்காக மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டேன்.

இன்று எமது நாட்டில் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை குழப்புவதற்கும் நாட்டின் உறுதித்தன்மையை இல்லாமல் செய்வதற்கும் பல்வேறு வழிகளில் செயற்படுகின்ற சக்திகள் உள்ளன.

அவை தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை குறித்தும் பேசப்பட்டது. தேசிய நல்லிணக்கத்தை குழப்புவதற்காகப் பல்வேறு ஊடகங்கள் வாயிலான சிலர் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

டொலர்களில் புரளும் அரசசார்பற்ற சில குழுவினரின் கொந்தராத்துக்களாகவும் இது இருக்கலாம்.

எனவே மகாநாயகர்களுடனும் அதேபோல ஏனைய மதத்தலைவர்களுடனும் பேச்சு நடத்தி நல்லிணக்கம் தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம் - என்றார்.

(த)

## அதிவேக...

தெரிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிமுதல் இந்தக் கட்டணங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன என அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர தெரிவித்தார்.

அதனடிப்படையில், அதிவேக நெடுஞ்சாலையில் மாத்தறைமஹரகம இடையேயான பயணக் கட்டணமான 500 ரூபா, 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

காலிமஹரகம இடையேயான பஸ்கட்டணம் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய கட்டணம் 410 ரூபாவாக அறவிடப்படும்.

இதேவேளை, கடவத்தை-மாத்தறை வரையான பஸ் பயணங்களுக்கான கட்டணம் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய கட்டணம் 540 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

கடவத்தை - காலி வரையான பயணக்கட்டணம் 20 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், புதிய கட்டணம் 440 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## சுகாதார...

ளப்பட்டது. தாக்குதலால் சுமார் 9 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால், அந்தப் பிரதேசமே அல்லோலகல்லோலப்பட்டது. 85 மாணவர்கள் காயமடைந்தனர். (த-ய)

## 300 மெற்றிக்...

இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கைத்தொழில் வர்த்தக அமைச்சில், இலங்கைக்கான தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

(த-ய)

# கடைகளின் உதவியாளர்களும் உணவு விநியோகிப்போருக்கும் மருத்துவ அறிக்கை கட்டாயம்

## சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தல்

தென்மராட்சி, ஜூன் 24
வர்த்தக நிலையங்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிப்போர் அந்தந்தப் பிரிவில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் வைத்திய அறிக்கை பெற்று வைத்திருக்க வேண்டும்.

உணவகங்களில் பணிபுரிபவர்கள் மருத்துவ பரிசோதனை அறிக்கையின்றி பணியாற்றினால் வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோர் கட்டாயம் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை வைத்திருக்க வேண்டும்.

கொடிகாமம் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் மருத்துவச் சான்றிதழின்றி பணியாற்றிய 5 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை பொது சுகாதார பரிசோதகரால் இனங்காணப்பட்டனர்.

அந்த உணவகங்களை நடத்துபவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதன்போது கருத்துரைத்த நீதிவான், "பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் விநியோகிப்போர், மருத்துவ பரிசோதனை அறிக்கை பெற்றிருக்க வேண்டும். அவ்வாறான அறிக்கை பெறாதவர்களால் உணவுகள் விநியோகிக்கும்போது பொதுமக்கள் பாதிப்படைய நேரிடும்" என்றார்.

"எதிர்காலத்தில் வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோருக்கு மருத்துவ பரிசோதனை அறிக்கையின்றி பணியாற்றினால் அதன் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்" என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

உணவு கையாளும் நிலையங்கள், அதனுடன் இணைந்த சமையலறைகளில் மருத்துவ பரிசோதனை அறிக்கையின்றி பணிபுரிவோர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்- என்றுள்ளது. (4-9)

# வறட்சியால் வடக்கு மாகாணத்தில்
# மேய்ச்சல் தரவைகள் காய்ந்தமையால் கால்நடைகள் உணவுக்காக அலைச்சல்

## சாலைகளையும் அடிக்கடிக் கடப்பதால் விபத்தில் இறக்கும் அவலம் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாணத்தில், கடும் வறட்சியால் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரைகளில்புற்கள் காய்ந்துதரை வறண்டு செல்கின்றன. அதனால் அநேகமான கால்நடைகள் உணவுக்காக அலைந்து திரிகின்றன.

சாலைகளிலும் அவற்றின் நடமாட்டம் அதிகரித்ததனால் விபத்துக்களாலும் அவை இறந்து போகின்றன. அதனால்கால்நடைகளை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் கடும்பாதிப்பைஎதிர்கொண்டுள்ளதாகக் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு உரிய தீர்வைத் தருமாறும் அவர்கள் கோருகின்றனர்.

"வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், பகுதிகளில் உள்ள இலட்சக்கணக்கான கால்நடைகள் மேய்ச்சல் தரவைகளில் புற்கள் காய்ந்ததனால் அல்லல்படுகின்றன. சருகுகளைஉணவாக்க வேண்டிய நிலையில் கால்நடைகள் அலைந்துதிரிகின்றன.

கால்நடைகள் காடுகளில் மேய்ச்சலுக்குச் சென்று இரவு வேளைகளில்முதன்மைச்சாலைகளில் படுத்து உறங்கி விடுகின்றன. அதனால்விபத்துக்கள் அதிகமாகி கால்நடைகள் இறக்கின்றனசிலவிபத்துக்களால்மனிதர்களுக்கும் உயிராபத்து ஏற்படுகின்றது. இந்தச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதற்கு அதற்கான நிலப்பரப்பு இன்மையால் சிலர் கால்நடைகளை இறைச்சிக்காக விற்றுவிடுகின்ற நிலையையும் சில இடங்களில் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக முல்லைத்தீவு கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உள்ளபோதிலும் அங்கு மேய்ச்சல் தரவைகள் இல்லை. மன்னாரிலும் இந்த நிலையே நீடிக்கிறது. பெரும்போகம், சிறுபோகம் ஆகிய வற்றில் பயிர்ச் செய்கை நடைபெறுவதன் காரணமாக கால்நடைகளை நீண்ட தூரம் கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

சில இடங்களில் கால்நடைகள் உணவுதேடி அலைந்து திரியும் போது சிறுத்தைகளின் தாக்குதல்களால் அவை உயிரிழக்கின்றன. வறட்சி தண்ணீர் பிரச்சினை யையும் தொற்றுவித்துள்ளது. நீண்ட தூரத்துக்குச் சென்று கால்நடைகளுக்குத் தண்ணீர் வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளன.


யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் மேய்ச்சல் தரவைகள் கருகியுள்ளன. கால்நடைகள் குடிதண்ணீர் பெறுவதில் சிக்கலை எதிர்கொண்டுள்ளன. இவ்வாறான காரணிகளாலும் வடக்கில் உள்ள கால்நடைகள் பல இறந்து போகின்றன.

வடக்கு மாகாணத்தில் முதன்மைத் தொழில்களில் ஒன்றான கால்நடை வளர்ப்புக்குத் தற்போது நிரந்தர மேய்ச்சல் தரவைகள் இல்லை என்றால் எவ்வாறு அந்தத் தொழிலை மேற்கொள்ள முடியும்" என்று கால்நடை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டனர். இது தொடர்பாக பலமுறை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மிக விரைவில் இதற்கான தீர்வைப் பெற்றுத் தாருங்கள்" என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

"கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் தொடர்பாக மாவட்டங்களில் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது பேசப்படுவது வழமை. அவ்வாறு பேசப்பட்டாலும் அந்த விடயம் பற்றிய கவனம் அந்த இடத்திலேயே முற்றுப்பெற்றுவிடும். அதற்கு பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா? என்பது பற்றி எவருக்கும் தெரியாது.

அதிகாரிகளும் இது தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்துவதில்லை. இது எங்களுடைய வாழ்க்கை தொடர்பான பிரச்சினை. துயரங்களைச் சந்தித்து வந்த நாங்கள் இப்போதுதான் மெல்ல மெல்ல புத்துயிர் பெறுகின்றோம். எமது தொழிலை சிறப்பாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது விடுவதன்மூலமாக அதிகாரிகளும் தடையாக அமையக்கூடாது. உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மேய்ச்சல் தரைவைகளை உருவாக்கித் தருமாறு கேட்டு கொள்கின்றோம். நடவடிக்கையை விரைவில் எடுங்கள்" என்றும் கால் நடைவளர்ப்போர் கோருகின்றனர்.

"கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் வன்னிப்பகுதியில் அநேகமான பல்வேறு தேவைகளுக்காக மக்களுடைய குடியிருப்பாகவும், வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தற்போது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளின் தேவை ஏற்பட்டுள்ளன. மேய்ச்சல் தரவைகளுக்கான இடங்கள் அடையாளப்படுத்தப்படும்போது அதில் பெரும்பகுதி வனவளத் திணைக்களத்தினரின் ஆளுகைக்குள் வருகின்றது. அவர்களிடம் அந்த நிலங்களை விடுவித்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது. விடுவிக்கப்ப டும்போது அவை உரிய முறையில் பேசி மேய்ச்சல் தரவைகளாக மாற்ற முடியும். இதற்கு வனவளத் திணைக்களத்தினர் எம்மால் அடையாப்படுத்திய, தமது ஆளுகைக்குஉட்பட்ட நிலங்களை விடுவித்து உதவ வேண்டும். அது தொடர்பில் பேச்சு நடத்தலாம்" என்று மாவட்டச் செயலர்கள் மற்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (4-21)



யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள காணியில் பசு நேற்றுக்காலை இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது. உரிமையாளரால் அவை மீட்கப்பட வில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (4,12)

# தொண்டராசிரியர் தெரிவுகளில் உண்மையைக் கண்டறியுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண தொண்டராசிரியர் நியமனத்துக்கான உறுதிப்படுத்தல் கடிதங்களுக்காக அதிபர்களால் கவனவீனமாகக் கடிதம் வழங்கப்படு வதும், பணம் பெற்றுக் கொண்டு போலி யான உறுதிப்படுத்தலை வழங்குவதன் மூலமாகவும் உண்மையான தொண்டர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"வடக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர்களாக பணிபுரிபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நோக்கில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வுக்காக மாகாண கல்வி அமைச்சினால் அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான உறுதிப்படுத்தலுக்காகப் பலர் பாடசாலை அதிபர்களை நாடும்போது, தொண்டராசிரியர்கள் எனப்படுபவர்களை தாம் இன்றுதான் பார்ப்பதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

"பாடசாலை ஒன்றின் அதிபர் தனது பாடசாலையில் கற்பிக்கின்றனர் என்று 11 தொண்டர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கியுள்ளார். மற்றொரு அதிபர் 9 ஆசிரியர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கியுள்ளார்" என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஒரு சில அதிபர்கள் அவசரத்தில் வழங்கிய கடி தத்தில் சேவைக்காலத்தை மட்டும் கவனத்தில் கொண்டபோதும் அவர்களின் வயதை கணிப்பிடத் தவறிவிட்டனர்.

அதாவது "தொண்டராசிரியர்கள் 01.12 2013ஆம்ஆண்டுக்கு முன்னர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகால சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும் என்று நிபந்தனையில்குறிப்பிட்டுள்ளபோதிலும் அந்த வருடமே உயர்தரப் பரீட்சை எழுதிய சிலருக்கும் இவ்வாறான கடிதங்களை வழங்கி யுள்ளதன் மூலமாகப் பலரின் மோசடி நிரூபிக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வின்போது இவை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

குறித்ததோர் இல்லத்தில் பணிபுரியும் பெண்களின்பெயரும்தொண்டராசிரியர் பட்டியலில் இணைக்கப்பட்டு நியமனத்துக்கான ஏற்பாடும் இடம்பெறுகிறது. இவ்வாறு இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்க அதிபர்களால் வழங்கப்பட்ட கடிதங்களில் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறு திப்படுத்தலையும் கோரும் சந்தர்ப்பத்தில் இதன் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்ள முடியும்" என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் பலராலும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

"நேர்முகத் தேர்வை நடத்தும் அதிகாரிகள் கொழும்பு கல்வி அமைச்சில் இருந்தே வருவார்கள். அவர்கள் பக்கச்சார்பாகச் செயற்படுவார்கள் என்று பயம் கொள்ளத் தேவையில்லை. குற்றஞ் சாட்டப்படுவது போன்று போலியான கடிதங்கள் வழங்கப்பட்டிருப்பின் வழங்கிய அதிபர்களுக்கு எதிராக நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை இடம்பெறும்.

தொண்டராசிரியர் பட்டியல் 2015ஆம் ஆண்டும் தயாரிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் பெயர் இல்லாது தற்போது புதிதாக இருக்க முடியாது.

அவ்வாறு இருப்பின் அந்த உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கிய அதிபரும் அதனை உறுதிப்ப டுத்தும் வலயக் கல்விப் பணிப்பாளருமே பொறுப் . பேற்கும் சூழல் ஏற்படும்" என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (4-101)

# மாகாண கல்விப் பணிப்பாளரும் தலைமைச் செயலருமே ஆசிரியர் மாநாட்டுக்கான செலவீனங்களுக்குப் பொறுப்பு

*வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார முறைகேடு, பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை் செய்த விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கல்வி அமைச்சர் த.குருகுலராசா முதலமைச்சருக்கு முன்வைத்த தன்னிலை விளக்க அறிக்கையின் நான்காம் பகுதி.*

எனவே 1ஏபி தரத்திலான கிளிநொச்சியின் ஒரே மகளிர் பாடசாலையான கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு சேவையின் தேவை கருதி உடனடியாக தரம் 1 இலுள்ள பெண் அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தரம் 1 இலுள்ள பெண் அதிபர்கள் வடக்கு மாகாணத்தில் மிகவும் அருகிக் காணப்பட்டமையால், அந்தக் காலப் பகுதியில் சங்கானைக் கோட்டக் கல்வி அலுவலராக இருந்த செல்வி.அன்ரனி சாந்தா- அவர்கள் இந்தப் பணியை முழு விருப்புடன் மேற்கொள்வதற்கு தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் NP/03/01/02/06/01 இலக்க 2015.06.23 திகதிய கடித மூலம், தம்மால் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான அதிபர்களின் பெயர்ப்பட்டியலை எனது ஆலோசனைக்காகவும், அனுமதிக்காகவும் சமர்ப்பித்திருந்தார். இந்தப் பட்டியலில் கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கான அதிபர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

எனவே சேவையின் தேவை கருதி செல்வி. அன்ரனி சாந்தா அவர்களை கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரிக்கு நியமனம் செய்யுமாறு என்னால் ஆலோசனை வழங்கப்பட்டது. இந்த ஆலோசனை அரசமைப்புச் சட்டத்தின் 154எவ் 1 பிரிவுக்கு அமைவானது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. இங்கு இது தொடர்பாக எதுவிதமான அழுத்தத்தையும் யார் மீதும் நான் பிரயோகித்திருக்கவில்லை. மேலும் சேவையின் தேவை கருதியும், நேர்முகப் பரீட்சையினதும் அடிப்படையிலேயே அதிபர்கள் நியமிக்கப்பட்டார்களே ஒழிய எனக்கு வேண்டியவர்கள் எனக் குறிப்பிடுவது முற்றிலும் தவறானதாகும்.

எனவே இக்குற்றச்சாட்டு வெற்றும் வெறிதானதுமாகும்.

### முறைப்பாடு 3.7இற்கான விளக்கங்கள்

3.7 வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி வீண்விரயம் செய்தமை.

நிதி விடயம் தொடர்பான வடக்கு மாகாண சபையின் தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தர் தலைமைச் செயலாளர் ஆவார். செலவினத் தலைப்பு 440இற்குரிய கணக்கீட்டு உத்தியோகத்தர் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆவார். செலவினத் தலைப்பு 441இற்குரிய கணக்கீட்டு உத்தியோகத்தர் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆவார்.

எனவே அரச நிதிப் பிரமாணங்களின் படி இந்த விடயம் தொடர்பாக வகை கூற வேண்டியவர்கள் தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தர்களுமே ஆவர்.

மாகாண கல்வி அமைச்சர், தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரோ அன்றி கணக்கீட்டு உத்தியோகத்தரோ அல்லர். எனவே இந்தக் குற்றச்சாட்டை மாகாண கல்வி அமைச்சர் மீது சுமத்துவது எந்தவிதத்திலும் பொருத்தமானது அன்று என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே என்மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு வெற்றும் வெறிதானதுமாகும். எனினும் இந்த விடயம் தொடர்பாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறேன்.

இந்த நிதியானது நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டு, திறைசேரி மூலம் தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரான தலைமைச் செயலாளருக்கும், அவரிடமிருந்து 441 செலவுத்தலைப்புக்குரிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டது. எனவே அரச நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் இந்த நிதிக்கான முழு வகை கூறலுக்குரியவர்கள் மாகாண கல்விப் பணிப்பாளரும், தலைமைச் செயலாளருமே ஆவர்.

வடக்கு மாகாண சபையின் 2015ஆம் ஆண்டுக்கான கல்வி அமைச்சுக்கான வரவு செலவு திட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக 969 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை நிதி ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கமையவே ஒதுக்கீடு செய்யப்படபட முடியும். அந்த வகையில் 2016ஆம் ஆண்டுக்காக 969 மில்லியன் ரூபா எவ்வாறு செலவு செய்யப்பட வேண்டும் என்கிற விவரம் நிதி ஆணைக்குழுவின் 2015.11.26 ஆம் திகதிய FC/03/02/2016 இலக்க கடிதம் மூலம் அனுப்பப்பட்டிருந்தது. இங்கு ஆசிரிய மாநாட்டுக்காக ரூபா 80 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து இந்த மாநாடு எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்கிற வழிகாட்டி நிதி ஆணைக்குழுவின் 10.12.2015 ஆம் திகதிய FC/3/2/2016 இலக்க கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கமைய திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவுக்கு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் வேறு பல தேவைகள் முன்னுரிமை பெறுவதால் ஆசிரிய அதிபர் மாநாட்டுக்கு ரூபா 40 மில்லியன் மட்டுமே ஒதுக்கீடு செய்வதற்காக திட்ட வரைவு நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் போது ஆசிரிய அதிபர் மாநாட்டுக்கான ஒதுக்கீடு ரூபா 24 மில்லியனாக மேலும் குறைக்கப்பட்டிருந்தது.

மிகுதி ஆசிரியர்களுக்கான கதிரை மேசைகள் மாணவர் தளபாடங்கள் ஏனைய கட்டுமானங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கமைய ஆசிரியர் மாநாடு நடைபெற்றதா? என்பது மாகாண திட்டமிடல் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு செயற்பாட்டு அறிக்கையும் பெறப்பட்டிருந்தது.

நிதி நடைமுறைகள் சிக்கனத்தன்மை என்பன பேணப்பட்டு மொத்தமாக ரூபா 23.5 மில்லியன் மட்டுமே ஆசிரிய, அதிபர் மாநாட்டுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. வலய ரீதியான செலவு விபரம் வருமாறு.

| இல. | விபரம் | ஆசிரியர் மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி | ஆசிரியர் மாநாட்டிற்கான செலவீனம் | அதிபர் மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி | அதிபர் மாநாட்டிற்கான செலவீனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | மாகாணக்கல்வித் திணைக்களம் | - | - | 16000000.00 | 417475.00 | 417475.00 |
| | யாழ்ப்பாணம் | 2990000.00 | 2326945.58 | | 207170.00 | 2534115.58 |
| | வலிகாமம் | 3040000.00 | 2650706.23 | | 262162.00 | 2912868.23 |
| | வடமராட்சி | 1910000.00 | 1859185.00 | | 221350.00 | 2080535.00 |
| | தென்மராட்சி | 1310052.00 | 1310042.00 | | 193615.00 | 1503657.00 |
| | தீவகம் | 840000.00 | 811923.00 | | 211010.00 | 1022933.00 |
| | கிளிநொச்சி | 2000000.00 | 1370098.90 | | 196451.90 | 1566550.80 |
| | முல்லைத்தீவு | 2700000.00 | 2438202.78 | | | 2438202.78 |
| | துணுக்காய் | 1300000.00 | 1103107.00 | | 153960.00 | 1257067.00 |
| | வவுனியா வடக்கு | 1700000.00 | 1668893.50 | | 192070.00 | 1860963.50 |
| | வவுனியா தெற்கு | 2730000.00 | 1889034.60 | | 85392.50 | 1974427.10 |
| | மடு | 1250000.00 | 1250000.00 | | 166815.00 | 1416815.00 |
| | மன்னார் | 2750000.00 | 2359193.00 | | 235855.00 | 2595048.00 |
| | மொத்தம் | 24520052.00 | 21037331.59 | | 2543326.40 | 23580657.99 |

ஆசிரியர் மாநாடு என்பது வெறும் இரண்டு நாட்களில் நடாத்தி முடிக்கப்படும் விடயமல்ல. ஒரு ஆசிரியர் மாநாடு என்பது பின்வரும் பல விடயங்களை உள்ளடக்கியது.

- முன்னாயத்தப்படுத்தல் மாகாண வலய ரீதியாக
- விளக்கக் கூட்டங்கள் நடாத்துதல் மாகாண வலய ரீதியாக
- கண்காட்சி நடாத்துதல் தொடர்பான ஏற்பாடுகள்
- ஆசிரியர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பெறல்
- கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல்
- பேருரைகள்
- துறைசார்ந்த நிபுணத்துவம் உடையோரிடமிருந்து ஆய்வுக்கட்டுரைகள் பெறல்
- ஆய்வரங்கு ஒழுங்கு செய்தல்
- மண்டப ஒழுங்குகள்
- சஞ்சிகை வெளியிடல்

என பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒன்றாகும். அத்துடன் இது 12 வலயங்களிலும் நடாத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும்.



இந்த மாநாட்டை நடாத்துவதற்கு பல நாள் பலரது கடின உழைப்பு தேவைப்பட்டது. முதலில் ஒவ்வொரு வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் அழைத்து அவர்களுக்கு மாநாட்டின் நோக்கம், அது எவ்வாறு நடாத்தப்பட வேண்டும், என்ன நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டும் போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டன.

தொடர்ந்து வலயக்கல்விப்பணிப்பாளர்களால் பலதடவைகள் ஆசிரியர்கள் அதிபர்களையும் அழைத்து பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பும் நிறைவேற்ற பல நாட்கள் எடுத்தன. உதாரணமாக கண்காட்சி நடத்து வதற்கு ஒவ்வொரு பாடத்துக்குமான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொரு பாடத்துக்குமான காட்சிப்பொருளை தயாரிக்கும் பணியில் அமர்த்தப்பட்டனர். இதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் அவர்கள் சென்று காட்சிப்பொருள்களை உருவாக்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர்.

பெரிய கண்காட்சி ஒன்றுக்கான காட்சிப் பொருள்கள் செய்வதற்கு மட்டுமே எம்மால் ஒதுக்கப்பட்ட ரூபா 2 மில்லியன் போதாதென்பதே உண்மையாகும். ஏனெனில் எல்லா பாடசாலைகளும் தமது காட்சிப்படுத்தலை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கி அதே நேரம் எல்லாப்பாட விடயங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கி அவற்றை செயற்படுத்துவற்கு ஏற்பட்ட செலவை பாடசாலைகளுக்கு வழங்கி குறித்த நாளில் காட்சிப்படுத்திய பொருள்களை கண்காட்சி நடைபெறும் இடத்துக்குக் கொண்டு செல்லுதல், அதற்கான மண்டபங்களை ஒழுங்குபடுத்தல், உணவு, மின்சார வசதிகள் வழங்கல், நிகழ்வு நிறைவேய்திய பின் குறித்த பொருள்களை மீளவும் கொண்டு செல்லல் எனப்பலசெயன்முறைகளுக்குட்பட்டதாகும். இதே போன்று சஞ்சிகை வெளியீடுசெய்வதற்கு ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டு அவை சரிபார்க்கப்பட்டு அச்சேற்றி வெளியிடுவதற்கு பலரின் பல நாட்கள் கடின உழைப்பும் தேவைப்பட்டது.

கலை நிகழ்வுகள் பாடசாலைகளில் பல நாட்கள் ஒத்திகை பார்க்கப்பட்டு பல ஆசிரியர்கள், மாணவர்கள், வாத்தியக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டு இறுதி நிகழ்வை ஆசிரியர் மாநாட்டில் அரங்கேற்றியிருந்தனர்.

மண்டப ஒழுங்கு பேருரைகள் ஒழுங்குபடுத்தல் போன்றனவும் பலநாள் செயன்முறைகளின் ஊடாகவே ஒழுங்குபடுத்தப்பட்டது.

### பலரின் கடின உழைப்பை குழு கொச்சப்படுத்த முயற்சி

இந்தச் செயற்பாட்டில் ஆசிரியர்கள் அதிபர்கள், கல்வி, கல்வி சாரா அலுவலர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் என பல தரப்பட்டவர்களின் உழைப்பின் வெளிப்பாடே இரண்டு நாள் ஆசிரிய மாநாடாகும்.

இவ்வாறு பல நாள் செயன்முறையிலும் கடின உழைப்பிலும் நடைபெற்ற இந்த நிகழ்வை இரண்டு நாள்களில் பெரும் தொகைபணம் செலவு செய்யப்பட்டு வீண்விரயமாக்கப்பட்டது என அறிக்கையிடுவது இந்த மாநாட்டை கொச்சைப்படுத்தும் ஒரு கருத்தாகவே கருத வேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பான எந்த விதமான கள ஆய்வையும் விசாரணைக் குழு மேற்கொள்ளவில்லை. இந்த நிகழ்வில் பங்குபற்றுநர்கள் ஒழுங்கமைப்பாளர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறியாமலும் கள ஆய்வினை மேற்கொள்ளாமலும் அறிக்கையிட்டிருப்பது அறிக்கையின் நம்பத்தகு தன்மையற்றது என்பதனையே காட்டுகிறது.

### மிகப் பெரிய சாதனையாகும்

மொத்தமாக நோக்கின் 12 வலயங்களுக்கும் 23.5 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு சராசரியாக ஒரு வலயத்துக்கு இரண்டு மில்லியன் ரூபா செலவில் தூர நோக்குடன் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டது மிகப்பெரிய சாதனை என்றே நான் கருதுகிறேன்.

மிகவும் சிக்கனமான முறையில் நிதி நடைமுறைகளை பின்பற்றி இதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இத்தகைய நிகழ்வுகள் ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியில் தொடர்ச்சியாக மாற்றமுறும் கல்விப்புலம் சார் போக்கு களுக்கு ஏற்ப தொழில்சார் அபிவிருத்தி செய்முறைகளை முன்னேற்றும் நோக்குடன் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் பின்வரும் விடயங்களை கொண்டிருக்கப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது.

- ஆசிரியர்கள் மத்தியில் தொடர்ச்சியான கற்றல் செயன்முறைகளை முன்னேற்றுதல்
- மாறுகின்ற கல்விப்புலம்சார் போக்குகளுக்கு ஏற்றவாறு தம்மை தயார்படுத்தி சீராக்கிக் கொள்வதற்கு எல்லோருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கல்
- ஆசிரியர்கள் தமது நோக்கங்கள் அறிவு மற்றும் புலமைகளை ஒருவரோடோருவர் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பத்தை வழங்கல்
- ஆசிரியர்களை கல்விப்புலம் சார்ந்த ஆய்வுக்கற்கைகளில் ஊக்குவித்தல்
- கற்றல் கற்பித்தலில் உள்ள சவால்களை வெல்வதற்கு அவர்களை தொழில் தகமைக்கு வலுவூட்டல்

மேலும் இதனோடு இணைந்த பல்வேறு விடயங்களையும் நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. இது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டியில் உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மாநாடு வடிவமைக்கப்பட்டது.

மேலும் இந்த வழிகாட்டியில் இந்த மாநாடு மாகாண மட்டத்திலும் கல்வி நிர்வாக மட்டத்திலும் நடத்தப்பட வேண்டும் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இணைப்பாளராக செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வருடமும் இத்தகைய ஒரு மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்பாடசாலை விடுமுறைநாளில் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவேண்டும் எனவும் ஒரு ஆசிரியர் மாநாட்டில் ஆகக் கூடியது ஐந்நூறு பேர் வரை பங்குபற்ற முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விதியின் பிரகாரம் மாநாடு நடத்தப்பட்டிருந்தால் பல வலயங்களில் ஒரு மாநாடு என அல்லாமல் பல மாநாடுகள் நடத்த வேண்டியிருந்திருக்கும். ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாகவும் கல்விப்புலத்தில் பல்வேறு நிதித்தேவைகள் இருப்பதனாலும் அவற்றிற்கு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டியிருந்ததனாலும் மிகவும் சிக்கனமான முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(நாளை தொடரும்)



# "பியர் அருந்துவதை ஊக்குவிக்க வேண்டும்"

*இப்படிக் கூறுகிறார் மங்கள*

கொழும்பு, ஜூன்24
உடலுக்குப் பெரும் தீங்கிழைக்காத பியர் மற்றும் வைன் போன்றவற்றைப் பருகுவதற்கான சந்தர்ப்பத்தைக் அதிகரிக்கவேண்டும் என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இல்லையேல் செறிவுகூடிய மதுபானங்கள் மற்றும் கசிப்பைப் பருகும் செயற்பாடுகள் அதிகரித்துவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்களைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மதுபான வகைகளுக்கான கட்டணங்களையும், வரிகளையும் அதிகரிக்க அதிகரிக்க, சட்டவிரோத மதுப் பாவனை அதிகரித்துகொண்டே செல்கின்றது. கசிப்புப் பருகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நாட்டில் 61 சதவீதமான கசிப்பு பாவனையாளர்கள் உள்ளனர்.

கசிப்பு பயன்பாடு, வர்த்தகம் மற்றும் உற்பத்தி ஆகியன அதிகரித்துள்ளன. போயாவுக்கு முதல்நாளன்று மதுபான வகைகளின் விற்பனை அதிகரித்துள்ளது. மதுபானச் சாலைகளின் உரிமையாளர்கள் வீடுகளுக்குப் போத்தல்களைக் கொண்டுசெல்வதுடன், போயாதினத்தன்று இரண்டு மடங்கான விலைக்குப் போத்தல் ஒன்றை விற்கின்றனர். போயா தினத்தன்று மதுபானச் சாலைகளை மூடுவதால் மதுபானங்களை பருகுவோர் மட்டுமன்றி விற்பனையும் அதிகரித்துள்ளது. சட்டவிரோதமான கசிப்புப் பாவனையும் அதிகரிக்கின்றது. இவை உடலுக்கு கேடு விளைவிக்கின்றன.

ஆகையால், பியர் மற்றும் வைன் விற்பனையில் நெகிழ்வுத் தன்மைகளை ஏற்படுத்தும் வகையிலான சட்டங்களை அறிமுகப்படுத்தவேண்டும். இது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். நாட்டில் வீரியமான மதுபானங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவுள்ளது. இதேவேளை, நத்தார் தினத்தில் மதுபான விற்பனைக்குத் தடை விதிப்பதால் சுற்றுலாத் துறை பாதிக்கப்படுகின்றது என்றார். (த-ய)

# தொழில்நுட்பப் பல்கலை இலங்கையில் உருவாக்கம்

கொழும்பு, ஜூன்24
க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் பட்டங்களை வழங்கும் வகையில் புதிதாக தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பல்கலைக்கழக்தில் பட்டங்களை வழங்குவதற்கு உயர்கல்வி அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் இல் உயர்தரத் தேர்வில் சித்தியடைந்து இந்தப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பட்டக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

பிரிட்டனின் லன்காஸ்டர் பல்கலைக்கழகம், ஆஸ்ரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் மாணவர்களைப் பரிமாறிக் கொள்ளும் உடன்பாட்டிலும் இந்தப் புதிய பல்கலைக்கழகம் கைச்சாத்திட்டுள்ளது என அவர் மேலும் கூறினார். (த-ய)


# விலைக்கேள்விக்கானகோரல்
# முதலமைச்சரின் அமைச்சு
# வடக்குமாகாணம்
# 2017

01. தலைவர் மாகாண அமைச்சின் பெறுகைக்குழு உள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் வடக்கு மாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டுமாண வேலைகளுக்கான தகவுடையோரும், தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

02. விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை வடக்குமாகாண நிர்வாகஎல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.

03. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புபட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) இலக்க 30.09.2016 ஆந்திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA)கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழேஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்குமாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் பகுதி 5 இல்(Schedule / Bidding Data & Contract Data) உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிகதகவல்களை திட்டமிடல் கிளை, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாண சபை, A9வீதி, கைதடி எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே021 205 7114) அத்துடன் அலுவலக நாட்களில் மேற்படி முகவரியில் 9.00 மணியிலிருந்து 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப்பார்வையிடலாம்.

06. எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9வீதி, கைதடி எனும் முகவரிக்கு சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான ஒரு முழுமையான கேள்வி ஆவணத்தினை 27.06.2017 ஆம் திகதியிலிருந்து 14.07.2017 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாள்களிலும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா2000/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். (கொடுப்பனவு முறைகாசாக இருக்கும்)

07. விலைக்கேள்வியானது இரு பிரதிகளில் (மூலப்.பிரதி, இணைப்பிரதி) தயாரித்து 17.07.2017 ஆம் திகதியன்று 10.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாகாண அமைச்சின் பெறுகைக்குழு, முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A9வீதி, கைதடி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடனேயே மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77நாட்கள் (எழுபத்தேழு – 02.10.2017) வரை செல்லுபடியாகும்.

09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. கேள்விகோரல் தொடர்பானமுன்னோடி கூட்டம் மாநாட்டுமண்டபம், முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 05.07.2017 ஆந் திகதி அன்று மாலை 2.30 மணிக்கு நடைபெறும்.

| Se. No | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| 1 | NP/05/04/03/Jaf/PSDG/2017/01 | நெடுந்தீவு மணற் கடற்கரையினை அழகுபடுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 2.56 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 26,000.00 | 30.10.2017 வரை |
| 2 | NP/05/04/03/Man/PSDG/2017/05 | மன்னார் பேசாலை கடற்கரையை அழகுபடுத்தல், மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 3.83 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 38,000.00 | 30.10.2017 வரை |
| 3 | NP/05/04/03/Man/PSDG/2017/06 | கிளிநெச்சி மருதுநகர் பகுதியை அழகுபடுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் | 3.30 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 33,000.00 | 30.10.2017 வரை |
| 4 | NP/05/04/02/MOT/01/2017 | ஆண் பெண் * குளியலறை கூடம் அமைத்தல்- கீரிமலை | 2.08 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 21,000.00 | 30.10.2017 வரை |
| 5 | NP/05/04/02/MOT/02/2017 | வாகனகொட்டகை மற்றும் நிழற் கூடாரங்கள் அமைத்தல் -அக்கரை | 2.60 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 26,000.00 | 30.10.2017 வரை |
| 6 | NP/05/04/02/MOT/03/2017 | மணத்தறை ஓய்வெடுக்கும் பகுதிக்கான வசதிகளை மேம்படுத்தல், மற்றும் தளபாடங்கள் உபகரணங்ளை வழங்கல் -நெடுந்தீவு | 2.06 | 3மாதம் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 21,000.00 | 30.10.2017 வரை |
| 7 | NP/05/04/02/MOT/04/2017 | திருமுறிகண்டி பகுதியை அழகுபடுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்கல் - முல்லைத்தீவு | 7.74 | 4மாதம் | C7 (கட்டடங்கள்) | 78,000.00 | 30.10.2017 வரை |
| 8 | NP/05/03/67 - Kaithady | பாரம்பரிய உணவு விற்பனை நிலையம் அமைத்தல் - கைதடி | 6.00 | 4மாதம் | C7 (கட்டடங்கள்) | 60,000.00 | 30.10.2017 வரை |
| 9 | NP/05/03/67 - Kerimalai | பாரம்பரிய உணவு விற்பனை நிலையம் அமைத்தல் - கீரிமலை | 5.20 | 4மாதம் | C7 (கட்டடங்கள்) | 52,000.00 | 30.10.2017 வரை |

**திருமதி.ரூபினிவரதலிங்கம்**
**தலைவர்,**
**மாகாணஅமைச்சுபெறுகைக்குழு**
**முதலமைச்சரின் அமைச்சு**
**வடக்குமாகாணம்.**
**23.06.2016**

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசலிங்கம் நந்தகுமார் (ராசு)
தோற்றம் 10.05.1963
மறைவு 16.07.2015
திதி: பிரதமை

ஈராண்டு சென்றாலும் தீராது உங்கள் பிரிவின் வலி
கால் நூற்றாண்டு கடந்தாலும் உங்கள் கருணை முகம் காணாது
அடங்காது நாம் கதறி அழும் ஒலி. வானுறையும் தெய்வ சந்நிதியில்
ஆன்ம ஈடேற்றம் பெற உங்கள் மனத்தில் நிலைத்து நிற்கும்!

கோண்டாவில். (சி.எஸ்.5084) குடும்பத்தினர்.

முடிவில்லாத் துயரலையின்
17ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 . 06 . 1933
உதிர்வு 03 . 07 . 2000



திதி: பிரதமை
(24.06.2017)

அமரர் கந்தையா மயில்வாகனம்
(பொலிஸ் பப்பா)

உங்களையே உலகமென உறுதியோடு இருந்தேன்
பாதியிலேயே என்னைப் பரிதவிக்க விட்டுப் பரமனடி சென்று 17 ஆண்டாச்சு
நீங்கள் சென்ற பாதை தெரியாது தவிக்கிறேன்
என் உயிர் உள்ளவரை உங்கள் அன்பையும் பாசத்தையும்
மறக்க முடியவில்லை
நித்தம் நித்தம் நினைத்துக் கலங்குகிறேன்
என் தனிமைக்கு உங்கள் ஆத்மாவின் துணையில்தான் வாழ்கிறேன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை வேண்டுகிறேன்

பழைய பாலத்தடி,
தொண்டைமானாறு.
திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தங்கச்சியம்மா தில்லைநடராசா
மலர்வு 03.03.1936
உதிர்வு 24.06.2015

அம்மா எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பின் திருவுருவமாய் வாழ்ந்து நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து இரண்டாண்டு
ஆனாலும் எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கிறீர்கள் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இலகடி வசிரி,
கரவெட்டி.
குடும்பத்தினர்

# சிங்கள இனத்துக்கும் பௌத்த மதத்துக்கும் துரோகமிழையோம்

## அமைச்சர் சஜித் திட்டவட்டம்



கொழும்பு, ஜூன்24

சிங்கள இனத்துக்கும் பௌத்த மதத்துக்கும் அரசு ஒருபோதும் துரோகமிழைக்காது என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்தை இழந்து மீளவும் ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கும் சிலரே இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக ஒவ்வொரு விகாரைக்கும் இரண்டு ஏக்கர் காணி வழங்கவேண்டுமென தாம் முன்மொழிந்த யோசனையை அப்போதைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறானவர்கள் இப்போது பௌத்த மதம் பற்றி பேசி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தலதா மாளிகைக்குத் தங்கக் கூரை அமைத்த தலைவரின் புதல்வர் என்ற ரீதியில் பௌத்த மதத்திற்கு ஏதேனும் நெருக்கடிகள் வரதாம் எந்த வகையிலும் இடமளிக்கப் போவதில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ய)

# அஸ்கிரியபீடம் மீது பிக்குகள் அதிருப்தி

## ஞானசாரருக்கு ஆதரவு வழங்கி வருவதால்

கொழும்பு, ஜூன்23

பொதுபலசேனா பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு ஆதரவாக கண்டி அஸ்கிரியப் பௌத்த பீடம் எடுத்திருந்த முடிவுக்கு பௌத்த பிக்குகள் தரப்பிலிருந்து எதிர்ப்புகள் வெளியாகியுள்ளன.

ஞானசார தேரர் போன்றவர்களின் நடவடிக்கைளை மாத்திரமன்றி அவரது கொள்கைகளையும் ஒதுக்கிவைக்கவேண்டிய அஸ்கிரியபீடம், அவருக்கு ஆதரவு தெரிவிப்பது பௌத்த தர்மத்திற்குச் செய்யும் இழுக்கு என்று இலங்கை பௌத்த பிக்குகள் அமைப்பின் தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்ட அமில தேரர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அஸ்கிரியப் பீட மகாநாயகர் உட்பட சங்கப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஞானசார தேரரின் கொள்கைகளுக்கு இணக்கம்என்று கூறப்பட்டுள்ளது. ஒருவர் எவ்வாறு நடந்துகொள்கின்றார் என்பது முக்கியமல்ல அவர் முன்வைக்கும் கொள்கைகளே முக்கியத்துவம் பெறுகின்றன.

அந்தக் கொள்கைகள் கொடூரமானதாக இருப்பின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே அஸ்கிரிய மகாநாயக்கர் தேவையற்ற ஒன்றையே கூறியுள்ளார்.

30 வருட போருக்கு முகங் கொடுத்த எமக்கு நல்லிணக்கச்சந்தர்ப்பமே தேவை. ஞானசார தேரரின் சுயரூபம் உங்கள் அனைவருக்கும் தெரியும். பௌத்த தர்மம் கூறுவது அதனையல்ல. பள்ளிவசல், முஸ்லிம், தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துமாறு ஞானசார தேரர் கூறுவரெனில் அதனால் பௌத்தர்மம் பிரகாசமடையாது. இதனால் மேற்குலகில் பௌத்தத்தின் மதிப்பு குறையும்.

பிக்குகள் காவிச் சீருடை அணிந்துகொண்டு இவ்வாறான இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் பொலிஸாரும் சிக்கல்களை சந்திக்கின்றனர்.

எனவே, பௌத்த மதத்தை மேலோங்கச் செய்ய வேண்டுமானால் புத்தபெருமானின் போதனையை முழுமையாகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயகர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஆதரவு தெரிவித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. (த-ய)

# பக்கத்து வீட்டு மதிலுக்கு ரூபா நான்கரை லட்சம் இழப்பீடு

## மேர்வின் சில்வா இணக்கம்

கொழும்பு, ஜூன்24

அமைச்சுப் பதவியில் இருந்த காலத்தில் அடாவடித்தனமாக ஒருவரின் வீட்டு மதிலை இடித்துத்தள்ளிய விவகாரத்தில் இழப்பீடு செலுத்த மேர்வின் சில்வா இணங்கியுள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் களனி தேர்தல் தொகுதி அமைப்பாளராக இருந்த அமைச்சர் மேர்வின் சில்வா, வீதி சீரமைப்பின்போது ஒருவரது வீட்டு மதிலைப் பலவந்தமாக இடித்துத் தள்ளியிருந்தார்.

இதற்கு எதிராகப் பாதிக்கப்பட்ட நபர் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய நீதிமன்றம் பாதிக்கப்பட்ட நபருக்கு அமைச்சர் மேர்வின் சில்வா தனது சொந்தப் பணத்தில் இருந்து நாலரை இலட்சம் ரூபாவை வழங்கவேண்டும் என்று தீர்ப்பளித்திருந்தது.

அத்துடன் அவருக்கு ஒத்தாசை வழங்கிய அப்போதைய பொலிஸ் பொறுப்பதிகாரியும் தனது சொந்தப் பணத்தில் இருந்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கவேண்டும் என்றும் பணிக்கப்பட்டிருந்தது.

எனினும், மேர்வின் சில்வா இழப்பீட்டை வழங்கத் தாமதித்த காரணத்தினால் நேற்றுமுன்தினம் அவருக்கு உயர்நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து உயர்நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையான மேர்வின், எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் இழப்பீட்டை வழங்குவார் என உறுதியளித்துள்ளார். (த-ய)

# கிழக்கு தொண்டராசிரியர்களுக்கு தனியான அமைச்சரவைப் பத்திரம்

மூதூர், ஜூன்24

கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு தனியான அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கக் கல்வி அமைச்சர் உடன்பட்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவத்தார்.

அமைச்சருடன் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே உள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் திருத்தமொன்றினை கொண்டுவந்து தொண்டராசிரியர்களுக்கு நியமனங்களை பெற்றுக்கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஏற்கனவே இருக்கும் அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாகவே இந்த உடன்பாடு எட்டப்பட்டிருகின்றது. (த-ய-40)

# குமார் குணரட்ணத்துக்கு இலங்கைக் குடியுரிமை

கொழும்பு, ஜூன்24

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணத்துக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

பன்னிப்பிட்டியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்துக்கு இது தொடர்பான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நொயல் முதலிகே எனப்படும் குமார் குணரட்னத்துக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதாகக் கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது ஆஸ்திரேலியக் குடியுரிமையை நீக்கிக் கொண்டார் எனக் குமார் குணரட்னம் இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நுழைவிசைவு இன்றி நாட்டில் தங்கியிருந்தமைக்காகக் குமார் குணரட்னம் கைதுசெய்யப்பட்டு ஓராண்டுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# அமைச்சர் ஹக்கீமிடம் விசாரணைவேண்டும்

## கோருகிறார் பிரதியமைச்சர் மனுச

கொழும்பு, ஜுன்24

நாவலப்பிட்டியில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான தேயிலைச் தொழிற்சாலைக்குச் சிங்களவர்களே தீ வைத்தனர் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பிரதியமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் இடம்பெற்றுவரும் இனவாத செயற்பாடுகள் கவலைக்குரிய விடயங்களே. ஞானசார தேரரின் செயற்பாடுகள் பாரதூரமானவையாக இருக்கலாம். ஆனாலும், அவர் முன்வைக்கும் விடயங்களை கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

நாட்டில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இனவாத அமைப்புகள் செயற்படவே செய்யும். இனவாதச் சக்திகளை இயக்குவது பன்னாட்டு அரசுகளே.

இனவாதச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் அவற்றின் வேலைகளைத் தொடங்கியுள்ளன. சிறு சிறு சம்பவங்களையும் பெரிதுபடுத்தி பன்னாடுகளுக்கும் அறிக்கைகளை அனுப்புகின்றன.

இந்தச் சதிக்குள் நாம் சிக்கிவிடக்கூடாது. சிங்களவர்களும், முஸ்லிம்களும், தமிழர்களும் மோதிக்கொள்ளும் நிலைக்கு நாம் சென்றுவிடக்கூடாது.

நாவலப்பிட்டித் தேயிலைச் தொழிற்சாலைக்கு சிங்களவர்களே தீ வைத்தனர் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தமைக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்"- என்றார். (த-ய-3)

# மியன்மார் பெண்ணைக் கடத்தி வைத்தியசாலைக்குள் பலாத்காரம்

## குற்றவாளியைக் கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஜுன்23

கொழும்பு தெற்கு, களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத்திரும்பிய மியன்மார் பெண்ணை, வைத்தியசாலை வளாகத்துக்குள் வைத்துக் கடத்திச்சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய நபரைக் கைது செய்யுமாறு நுகேகொடை பிரதம நீதிவான் வை. ஆர். பி. நெலுந்தெனிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மிரிகான தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த 21 வயதான இந்த பெண் சுகவீனமுற்றதால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். கடந்த திங்கள்கிழமை சிகிச்சை முடிந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேற முயன்ற இவரை நபரொருவர் அழைத்துச் சென்றுள்ளார். மறுநாள் இவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் வைத்தியசாலை வளாகத்துக்குள் கொண்டுவந்து விடப்பட்டதுடன் சந்தேகநபர் தலைமறைவாகியிருக்கிறார்.

இது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (த-ய)

# வீரவன்சவின் மனைவி சசிக்கு ஆவணமேதுமின்றி அ.அட்டை

## நீதிமன்றில் பிரதி ஆணையாளர் சாட்சியம்

கொழும்பு, ஜுன்24

விமல் வீரவன்சவின் மனைவிக்கு ஒருநாள் சேவையினூடாக அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரமே அவருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது என ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இந்திக குமார லியனகே கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தார்.

இது தொடர்பான ஆவணங்கள் பின்னர் தரப்படும் என்றும் ஆணையாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

சசி வீரவன்ச, போலிப் பெயர் மற்றும் போலியான பிறந்த தினத்தைக் கொண்டு இரண்டு அடையாள அட்டைகளை எடுத்துள்ளமை மற்றும் இராஜதந்திர மற்றும் சாதாரண கடவுச்சீட்டுகளைப் பெற்ற குற்றச்சாட்டில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 2015 பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு, பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கின் ஏழாவது சாட்சியாளரான ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இந்திக குமார லியனகே மன்றில் சாட்சியமளித்தார்.

விமல் வீரவன்சவின் மகனான விபோதி வீரவன்ச மற்றும் மகள் ஆகியோரின் அடையாள அட்டைகளுக்காக விண்ணப் பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களும் மன்றில் சோதிக்கப்பட்டன. மகனின் அடையாள அட்டைக்கு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழில் தந்தையான விமல் வீரவன்சவின் பிறந்த ஆண்டும் தாயின் பெயரும் பிறந்த ஆண்டும் திருத்தப்பட்டுள்ளமை மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

மகளின் பிறப்புச்சான்றிதழில், தாயின் பிறந்த ஆண்டு மீண்டும் திருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

வழக்கு ஜுலை 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-ய)


### அறைகள் நாள் வாடகைக்கு

குறைந்த விலையில் அறைகள் நாள் வாடகைக்கு, ரூபா 650 முதல் 3900 வரை. AC, TV இணைந்த குளியலறை வசதிகளுடன் உண்டு.
Hotel Villa City
422/1, Galle Road, Wellawatte இராமகிருஷ்ண Shed அருகில்
077 796 7878

### குளிரூட்டிகள் விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள கண்ணாடி பிறிஜ் அதிவேக உறைவிப்பிகள் (பிறிசர்) பெரிது. சிறிது உடன் விற்பனைக்குண்டு.
078 721 2272

### தவறிவிட்டது

சுன்னாகத்திலிருந்து K.K.S. வீதியூடாக யாழ்ப்பாணம் சென்று கொண்டிருக்கும்போது ஒரு பவுண் சங்கிலி தவறுதலாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
077 226 7172

### வீடு வளவு விற்பனைக்கு

இராசபாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3பரப்புக் காணி புதிய வீட்டுடன் மின்சாரவசதி குழாய்க்கிணறு. பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துடன் விற்பனைக்கு உண்டு.
077 978 3206/076 978 9016

### ஆள் தேவை

யூஸ் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆள் தேவை.
077 833 6501, 077 469 4249

### மணமகன் தேவை

வடமராட்சிப் பிரிவு, கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த உத்தர நட்சத்திரம் 1ஆம் பாதம், சிங்கராசி 02.08.1973 இல் பிறந்த செவ்வாய் குற்றம் இல்லாத சங்கீதப் பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. (தாரம் இழந்தவர், விவாகரத்துப் பெற்றவர் வேண்டாம்) பொருத்தமான வரன் அரச உத்தியோகம், தனியார் நிறுவனத்தில் வேலை, பஸ் நடத்துனர், கடை முதலாளி விரும்பத்தக்கது.
076 6275 362

### பெயர் மாற்றம்

சிலாபம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த **Zeenathul Jazeema** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **Sawmiya** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
- Sawmiya -

### தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட சிகைஅலங்கார நிலையத்துக்கு (சலூன்) முடிவெட்டுபவர்கள் (ஆண்கள்) தேவை.
தங்கி நின்று வேலை செய்யலாம்.
50% கமிசன் வழங்கப்படும்.
தொடர்பு:
0767593357



### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985 பூரட்டாதி கும்பராசி 1 இல் செவ்வாய் 40 கிரகபாவம் 5' 8" (BSc Nursing) பட்டதாரி அரசபணி புரிபவருக்கு மணமகன் தேவை.
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
No.A112/1, 3வது ஒழுங்கை பூந்தோட்டம், வவுனியா.
T.P: 077 969 4009

### மல்லாகத்தில் காணிகள் விற்பனைக்கு உண்டு

மல்லாகம் K.K.S. வீதியிலுள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகிலுள்ள பாடசாலை ஒழுங்கையில் 7 பரப்புடன் சேர்ந்த வீடும், மற்றும் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 871 4374
021 321 9802

ஸ்ரீ காளியம்மன் துணை

### பண்டித் - குமார் சாஸ்த்திரி ஸ்ரீ காளியம்மன் ஜோதிட நிலையம்

தொடர்புகளுக்கு
077 251 8305 / 077 467 0325

இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்துப்பலன் சொல்லுவார். கணவன், மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள் வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். கண்திருஸ்டி, செய்வினை கோளாறு (Black Magoc) போன்றவற்றுக்கும் தீர்வு கிடைக்கும்.

நாதன் இன், 394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலின்ரன் சந்தியில் இருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் பாதையில்)

### அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம் பண்டித் துளசிராம் சுவாமி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள். வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த திகதி நட்சத் திரம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை, நடக்கப் போகின் றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை, லட்சுமிகடாச்சப் பூஜைகள், எல்லா தோசங்க ளுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக் கும் பரிகாரம் செய்யப்படும். படிப்பு, தொழில், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், , கணவன் மனைவி ஒற்றுமை, ககல்யாண யோகம், எதிரிகள் கண்திருஸ்டி, கோட் வழக்குகள், வசிகரம் செய்யப்படும். எண்கணிதப்படி மண மக்கள் பொருத்தம் பார்க்கப்படும். நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள்.

நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலவைச் சந்தி அருகில்) T.P: 077 2186 324

### தேவை

சொர்க்கம் திருமணசேவை கனடாவில் வசிக்கும் 28 வயதுடைய யாழ் இந்து மதத்தைச் சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கு படித்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். வடமராட்சி மணமகன்கள் விரும்பத்தக்கது. கனடாவில் வசிக்கும் 30வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகளை தேடுகிறோம் கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய மணமகனுக்கு மணமகளை தேடுகின்றோம்.
T.P & Viber : 001 416 666 1855 & 001 647 504 3336

### வீடு வளவும், தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு

- ஏழாலை தெற்கு, சூராவத்தை மயிலங்காடு வீதியில் அமைந்துள்ள 5பரப்புக் காணியுடன் கூடிய முற்றிலும் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட பல அறைகளைக் கொண்டதும், நவீன மின் இணைப்புக்கள், புதிய குழாய் நீர் வசதிகள், புதிய கூரை, இணைந்த குளியலறைகள், வெளிக்குளியலறை, உட்புற வெளிப்புற சமையலறைகள், எல்லை மதில்கள், தனிக் கிணறு, பயன்தரு பயிர்கள் இவை எல்லாம் கொண்ட வீடு வளவும் .
- மயிலங்காடு விவசாய வீதியில் 13 பரப்பு பயிர் செய்யும் தண்ணீர் வசதியுடனான தோட்டக்காணியும் வீடு கட்டுவதற்கும் உகந்தது விற்பனைக்குண்டு.

T.P : 078 231 9303


### பகிரங்க கேள்வி அறிவித்தல்

வ/புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் பழைய வகுப்பறைக் கட்டடத்தை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடத்தை 23.06.2017 ஆம் திகதியிலிருந்து 28.06.2017 ஆம் திகதி வரை நேரில் பார்வையிட்டுக் கேள்விக்குரிய விண்ணப்பக் கட்டணமாக ரூபா 500.00ஐ அலுவலக நாள்களில் பி.ப 03.00 மணிக்கு முன் வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்திக் கேள்விப் பத்திரத்தை வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு அலுவலகப் பாடசாலை வேல்லைகள் பகுதியில் 28.06.2017 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக் கூடிய வைப்புத்தொகையினை வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டினை 29.06.2017 ஆம் திகதி முற்பகல் 11.30 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றையதினம் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரருக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உரிய தொகையினை அலுவலகத்தில் செலுத்தி 07 நாள்களுக்குள் குறித்த வேலையினைப் பாடசாலை நிர்வாகத்துக்கும் பாடசாலை கற்றல் செயற்பாட்டுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையூறு இன்றி முடிவுறுத்திப் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.

| விவரம் | கட்டடத்தின் அளவு | மீளளிப்புவைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| வ/ புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் பழைய கட்டடத்தை இடித்து அகற்றல் | 100'x20'வகுப்பறைக் கட்டடம் | 5,000.00 |

**திரு.வ.ஸ்ரீஸ்கந்தராசா**
**தலைவர், கேள்விச் சபை**
**வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## இடத்தை மாற்றிய டெங்குநுளம்புகள்

கொழும்பு, ஜூன்24
டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தேடித்தேடி அழிக்கப்பட்டு வரும் நிலையில், இப்போது டெங்குநுளம்புகள் தாம் இனப்பெருக்கம் செய்வதற்கான இடங்களை மாற்றிவிட்டன எனத் தகவல் வெளியாகியுள்ளது.
பூச்சியியல் ஆய்வுப்பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
தற்பொழுது நுளம்பின் பெருக்கம் வீட்டின் உட்பகுதியில் இடம்பெறுவதாக நுண்ணுயிரியல் சங்கத்தின் தலைவர் நயித் சுமனசேன தெரிவித்தார்.
வீடுகளின் உட்பகுதியில் அதாவது சிறிய அளவில் தண்ணீர் உள்ள கொள்கலன்கள், குளிர்சாதனப் பெட்டிகள், செல்லப்பிராணிகள் குடிக்கும் தண்ணீர்க் கொள்கலன்கள் ஆகியவற்றில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் இடம் பெறுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
உணவுகள் மூலம் டெங்கு நுளம்பின் பெருக்கம் இலகுவாக இடம்பெறு கின்றது. இனப்பெருக்கத்துக்காக வீடுகளையும், கொள்கலன்களையும் தெரிவு செய்துள்ளது. டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்கு முக்கிய காரணம் அதிகரித்துள்ள கட்டட நிர்மாணப் பணிகளே என்றும் அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, டெங்கு நுளம்பின் அடர்த்தி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-ய)

# காணாமற்போனோர் அலுவலகம் ஊடாக ஆபத்து வரக்கூடாது

### அரசை எச்சரிக்கிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூன்23
காணாமல்போனோர் அலுவலகத்தின் ஊடாக அரசு திரைமறைவிலான விடயங்களைச் செய்து நாட்டை மீண்டும் பயங்கரவாதத்துக்கு இட்டுச் செல்லுமாயின் அதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
குறித்த அலுவலகத்தின் அதிகாரிகளுக்கு எதிராக எந்த வழக்கும் தொடரமுடியாத அளவுக்குச் சட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதன் உள்நோக்கம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.
நாடாளுமன்றத்தில் காணாமல்போனோர் அலுவலகம் பற்றிய திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
நீதிமன்றம், பொலிஸாருக்கு கிடைக்காத அதிகாரங்கள் இந்த அலுவலகத்திற்குவழங்கப்படவுள்ளன. 13ஆவது திருத்தத்தை கொண்டுவந்த அரசு அரச தலைவரைக்கூட நீதிமன்றத்திற்கு அழைத்துவர முடியும் என்று கூறியது. ஆனால் இந்தச் சட்டத்தின் மூலம் காணாமல்போனோர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளைச் சிவில் அல்லது குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்திற்கு அழைத்துவர முடியாது. அவர்களது செயற்பாடுகள் தொடர்பாகவும் கேள்வி எழுப்பமுடியாது.
காணாமல் போனோர் தொடர்பான தகவல்களை தேடியறியும் செயற் பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.
88, 89களில் காணாமற்போனோர் பற்றியும் தேடியறிய வேண்டும். ஆனால் இதன் ஊடாக ஏதேனும் உள்நோக்கங்கள் இருந்தால் முழு நாட்டையும் மீண்டும் நெருக்கடிக்கு இட்டுச்செல்வதாயின் அதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம்- என்றார். (த-ய)

> “ காணாமல் போனோர் தொடர்பான தகவல்களை தேடியறியும் செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 88, 89களில் காணாமல் போனோர் பற்றியும் தேடியறிய வேண்டும்.

## நாமல் எம்.பி. மீதான விசாரணை தொடரும்

கொழும்பு, ஜூன்24
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிரான விசாரணைகள் இன்னமும் நிறைவடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கன் விமான நிறுவனத்திற்குச் சேவையாற்றிய நிறுவனம் ஒன்றைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் அவருக்கெதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டி ருந்தன.
இந்த நிலையில், பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் துலானி அமரசிங்க முன்னிலையில் விசாரணைகள் நிறைவு பெறவில்லை என்பதைத் தெரிவித்துள்ளனர்.
அத்துடன், நாமல் ராஜபக்சவின் பெயரில் ஆஸ்திரேலிய மற்றும் அமெரிக்க வங்கிகள் சிலவற்றிலுள்ள கணக்குகள் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டும் இதுவரை அது கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விசாரணைகளை நிறைவுசெய்து நவம்பர் 11ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (த-ய)

## பல்கலை மாணவருக்கு அரசியல் தூண்டுதல்கள்

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்24
முறையற்ற அரசியல் துண்டுதல்களால் பல்கலைக்கழக மாணவர்கள் தவறான பாதையில் இட்டுச் செல்லப்படுகின்றனர். எனவே அவர்களைக் குறைகூற முடியாது என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பொலனறுவை நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அரசதலைவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு அநீதி இழைத்து, அவர்களது வரப்பிரசாதங்களை இல்லாமல் செய்வதுடன் இலவசக் கல்வியை ஒழிப்பதற்கு அரசு முயற்சிப்பதாகச் சிலர் சித்திரிக்க முனை கின்றனர். தனியார் பல்கலைக்கழகங்களைப் போன்று ஏனைய கல்வி நிறுவனங்களும் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் தரத்திற்கு ஏற்ப கல்வியை வழங்கவேண்டும் என்ற கொள்கை ரீதியான தீர்மானத்தை அரசு மேற்கொண்டுள்ளது. மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர்களது வேண்டுகோள்களுக்கேற்ப பல திருத்தங்களை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். (த-ய)

## தகவலறியும் உரிமை: இணையம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன்24
தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
மும்மொழியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இணையத்தளத்தை http://www.rticommission.lk/. என்ற முகவரி மூலம் பொதுமக்கள் பார்வையிட முடியும். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், அரச கருத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சர்களினால் வெளியிடப்படும் தகவல்கள் மற்றும் அமைச்சுகளின் செயற்பாடுகள் உட்பட அரச இயந்திரத்தின் அனைத்து தகவல்களையும் அறிந்துகொள்ள முடியும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த-ய)

## அமைதிக்கு பங்கம் விளைவித்த பிக்கு சிறை வைப்பு

கொழும்பு, ஜூன்23
அமைதிக்குப் பங்கம் விளைவித்ததுடன் ஏனைய மதங்களை இழிவுபடுத்தும் விதத்தில் நடந்துகொண்ட குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட பிக்கு ஒருவருக்கு பாணந்துறை நீதிமன்றத்தால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத்தண்டனையும் 6000 ரூபா அபராமும் விதிக்கப்பட்டது.
அரச அதிகாரிகளுக்குப் பொய்யான தகவல்களை வழங்கி குழப்ப நிலையை ஏற்படுத்தியமை, பொதுமக்களுக்குக் கோபமூட்டி பிறரின் உடைமைகளுக்குச் சேதம் விளை வித்தமை, ஏனைய மதங்களை நிந்திக்கும் கருத்துகளை வெளியிட்டதன் மூலம்அவர்களுக்குமனவேதனையை ஏற்படுத்தியமை, பௌத்த தர்மத்தை இழிவுபடுத்தும் முறையில் நடந்துகொண்டமை, பொதுமக்களின் அமைதியைக் குலைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின்கீழ் இவர் கைதுசெய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)


## 5 ஆம் ஆண்டு நினைவு

மண்ணில்
16 . 11 . 1935



விண்ணில்
24 . 06 . 2012

திருமதி மேரிறீற்றா ஆசீர்வாதம்
(றஞ்சிதம்)

நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திடுவேன் (தி.பா.23:6C)
வஞ்சமில்லா உன்முகம் கண்டு
பஞ்சாக பறந்ததுவே ஆண்டுகள் ஐந்து
பிரிவென்னும் துயருக்குள் அம்மா உந்தன்
பாசமதை நாம் தொலைத்து விட்டோம்
நிலையான வாழ்வை நீவீர் தேடியதால்
நிழல் படத்தில் உம்மை வைத்தே
நிமலன் பாதம் நித்தியமாய் இளைப்பாற
நிதமும் நாம் இறைஞ்சுகின்றோம்

மாரீசன் கூடல்,
இளவாலை.

கணவர், பிள்ளைகள்
மற்றும் உறவுகள்.

(CS 5006) (14)


## இலஞ்ச ஊழல் வலையில் 22 அதிகாரிகள் மாட்டினர்

கொழும்பு, ஜூன் 24
இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் 22 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இலஞ்சம் கோரப்படுவதாகக் கிடைத்த 29 முறைப்பாடுகளில் 20 முறைப்பாடுகள் தொடர்பில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களுள் பெரும்பாலானோர் பொலிஸ் துறையையும், கல்வித் துறையையும் சேர்ந்தவர்கள் எனவும், இலஞ்சம் கோருவோர் தொடர்பான தகவல்களை ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலமாகவோ 1954 எனும் தொலைபேசி மூலமாகவோ பொதுமக்கள் அறிவிக்கலாம் எனவும் ஆணைக்குழு கூறியுள்ளது. (த)



ரஷ்யா மீது ஜேர்மனின் நாஜி படைகள் 1941ஆம் ஆண்டு மத்திய பகுதியில் படையெடுத்தன. இந்தப் போரில் பல நூற்றுக்கணக்கான ரஷ்யச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ரஷ்ய அதிபர் புடின் நிகழ்வில் கலந்துகொண்டு தனது அஞ்சலியைச் செலுத்தினார். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது நிகழ்வுகள் நடந்து முடிந்தன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# ட்ரம்ப் மனநலம் பாதிக்கப்பட்டவர்

## புதிய சர்ச்சையை ஏற்படுத்தியது வடகொரியா ஊடகம்

பியாங்யாங், ஜூன் 24

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று வடகொரிய அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

வடகொரியாவை உளவு பார்த்தார் எனத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு பின் உடல் நிலை மோசமடைந்ததால் விடுவிக்கப்பட்ட அமெரிக்க இளைஞர் ஒட்டோ வார்ம்பியர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்ததை அடுத்து வடகொரியாவுக்கு ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

வடகொரியா ஒட்டோவை சித்திரவதை செய்துள்ளது. “வடகொரியாவில் நடப்பது காட்டுமிராண்டித்தனமான ஆட்சி. சட்டத்தின் ஆட்சியையும் தனிமனித ஒழுக்கம் மற்றும் நாகரிகத்தையும் கடைப்பிடிக்காத ஆட்சியாளர்களின் கையில் சிக்கும் அப்பாவி மக்கள் சந்திக்கும் இதுபோன்ற துயரகரமான நிகழ்வுகளை தடுக்க வேண்டும் என்னும் எனது தலைமையிலான ஆட்சி நிர்வாகத்தின் கொள்கைக்கு வலிமை சேர்க்கும் விதமாக ஒட்டோவுக்கு நேர்ந்த அவலமுடிவு அமைந்துள்ளது” என ட்ரம்ப் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார்.



> “மனநிலை பாதிக்கப்பட்ட ட்ரம்பின் ஆலோசனைகளைப் பின்பற்றினால், அது பேரழிவிற்குதான் கொண்டுசெல்லும் என்பதை தென்கொரியா உணர வேண்டும் என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டது.

இந்த நிலையில் ட்ரம்பின் கருத்துக்கு வடகொரிய ஊடமொன்று பதிலடி கொடுத்துள்ளது.

அமெரிக்கஅதிபர்டொனால்ட் ‘ட்ரம்ப் தனது சொந்த நாட்டில் கடினமான சூழ்நிலையில் உள்ளார். உள்நாட்டு அரசியல் விமர்சனங்களை திருப்புவதற்காக வடகொரியா மீது தேவையற்றவிமர்சனங்களை முன்வைக்கிறார். ஒட்டொவின் விவகாரத்திலும் இதுவே நடந்தது.

மனநிலை பாதிக்கப்பட்ட ட்ரம்பின் ஆலோசனைகளைப் பின்பற்றினால், அது பேரழிவிற்குதான் கொண்டுசெல்லும் என்பதைத் தென்கொரியா உணர வேண்டும்’ என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டது. (ம)



# ஆண்களுக்காக பெண்களை இடம் மாற்றுதல் ஏற்புடையதல்ல

## எல் அல்லுக்கு மன்று உத்தரவு

டெல் அவிவ், ஜூன் 24

பெண் பயணிகளுக்கு அருகே அமர மறுக்கும் தீவிர யூத பழமைவாத ஆண்களுக்காக, பெண் பயணிகளை இடம்மாறி அமருமாறு நிர்பந்தப்படுத்தக் கூடாது என இஸ்ரேல் நீதிமன்றம் ஒன்று, அந்த நாட்டின் வானூர்தி நிறுவனமான எல். அல்லுக்கு உத்தரவு பிறப்பித்தது.

யூத இனப் படுகொலையிலிருந்து தப்பித்து உயிர் பிழைத்தவரான, 83 வயதான ரெனீ ராபினோவிட்ஸ் என்ற பெண், 2015ஆம் ஆண்டு எல்.அல். நிறுவனத்தின் வானூர்தியில் பயணம் செய்த போது, தீவிரமான யூத பழமைவாதத்தை கடைபிடிக்கும் ஒரு நபருக்காக, தன்னுடைய உயர் வகுப்பு இருக்கையிலிருந்து வேறு இருக்கைக்கு இடம் மாறிக்கொள்ளுமாறு கேட்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து வானூர்தி நிறுவனத்தின் நடவடிக்கையை எதிர்த்து, அவர் இஸ்ரேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

ராபினோவிட்ஸ்க்கு ஏற்பட்ட அழுத்தத்துக்காக, அவருக்கு ஆயிரத்து 800 டொலர்களை இழப்பீடாக வழங்க மன்று உத்தரவிட்டது. மட்டுமல்லாது பெண் பயணிகளுக்கு அருகே அமர மறுக்கும் தீவிர யூத பழமைவாத ஆண்களுக்காக, பெண் பயணிகளை இடம்மாறி அமருமாறு நிர்பந்தப்படுத்தக்கூடாது எனவும் உத்தரவிட்டது. (ம)

# இளவரசர் பிலிப் வீடு திரும்பினார்

லண்டன், ஜூன் 24

பிரிட்டன் ராணி எலிசபெத்தின் கணவரும் எடின்பரோ கோமகன் என்றழைக்கப்படும் அந்த நாட்டின் இளவரசருமான பிலிப் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் நலமுடன் வீடு திரும்பினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# 840 ஆண்டுகள் பழமையான மசூதியை அழித்தது ஐ.எஸ்.

## ஈராக் அரசு கடும் கண்டனம்

பக்தாத், ஜூன் 24

ஈராக்கின் புராதன அடையாளங்களில் ஒன்றாக இருந்த சுமார் 840 ஆண்டுகள் பழமை வாய்ந்த நூரி மசூதியை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தரை மட்டமாக்கியுள்ளது. இதற்கு ஈராக் அரசு கடும் கண்டனம் விடுத்தது.

ஈராக் சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் மோசூல் நகரமும் இருந்தது. மேற்கு மோசூலில் உள்ள நூரி மசூதி ஈராக்கின் புராதன சின்னங்களில் ஒன்றாகும். இது கிட்டத்தட்ட 840 வருடங்கள் பழமை வாய்ந்தது. இந்த மசூதியை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அழித்துள்ளது என்று ஈராக் இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது. அது தொடர்பிலான செய்மதிப் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் இந்தத் தாக்குதல் குறித்து ஈராக் தலைமை அமைச்சர் ஹைதர் அல் அபாதி தனது கீச்சகப் பக்கத்தில், ‘ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மோசூலில் நடத்த போரில் தோற்றுவிட்டது’ என்று பதிவிட்டுள்ளார்.


எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மறுத்துவிட்டது. ‘அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலிலேயே இந்த மசூதி தரைமட்டமாக்கப்பட்டது’ என்று அந்த அமைப்பு தனது இணையப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஐ.எஸ்ஸின் குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

‘ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறிப்பிட்டது போல அந்த நேரத்தில் எந்த வான்வழித் தாக்குதலையும் நாங்கள் நடத்தவில்லை’ என அமெரிக்கா இராணுவம் தெரிவித்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் மோசூல் நகரை 2014ஆம் ஆண்டு கைப்பற்றியபோது இந்த மசூதியிலிருந்துதான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபுபக்கர் அல்பக்தாதி அந்த அமைப்பு கைப்பற்றிய இடங்களை ஈராக், சிரிய இஸ்லாமிக்ஸ்டேட் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) தேசம் என்று பெயரிட்டார். (ம)





# வரணி – சிட்டிவேரம் கண்

# தேர்த்திருவிழ

## ஆலய வரலாறு

ஈழத்திருநாட்டின்சிரசுஎனவிளங்கும்யாழ்ப்பாணத்தில்நீண்டுயர்ந்தபனை, தென்னை, நெல்வயல்கள், களனிகள் தோட்டங்கள் என வளம் பல கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில் ஏறத்தாள 05 கிலோ மீற்றர் தூரத்தில் வரணி எனும் பழமை பேணும் பழம்பெரும் கிராமத்தில் சோலைகள், வாவிகள் சூழ்ந்து காணப்படும் இடத்தில் வீதியின் மேற்குப் புறமாக இந்தச் சுட்டிபுரம் ஆலயம் அமைந்துள்ளது. முற்காலத்தில் இப்பகுதியில் சித்தர்கள் பலர் வாழ்ந்து வேதித்த இடமாதலால் இந்த இடம் சிட்டிவேரம் எனப் பெயர்பெற்றது. சிட்டி+வேரம் என்பதே காலக் கிரமத்தில் மருவி சுட்டிபுரம் என வந்ததென அறியப்படுகின்றது. இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பைத் தருகின்றது. மூர்த்தி. சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தலம் : வரணி சிட்டிவேரம் (சுட்டிபுரம்) தீர்த்தம்: தும்புருவில் தல விருட்சம்: பாலை முன்னொரு காலத்தில் தும்புரு எனும் முனிவர் இத்தீர்த்தத்தில் நீராடி அம்பாளை பூசித்ததாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பல சித்தர்களும் யோகிகளும் இத் தீர்த்தத்தில் நீராடி அம்பாளை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் வெண்தாமரை, செந்தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் போன்றவற்றையும் பல மூலிகை அம்சங்களும் உள்ளன. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டுக்கு தனித்துவமான இடம் உண்டு. இவ்வழி பாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்ததென வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி தாம் கொண்ட சினத்தால் மதுரையை எரித்து, சினம் தணிந்து, கடல் கடந்து இலங்கைக்கு வந்ததாகவும், இங்கு 10 இடங்களில் கோயில் கொண்டதாகவும் அவ்வாறாக கோயில் கொண்ட ஐந்தாவது இடமே சுட்டிபுரம் எனவும் கூறப்படுகின்றது. இந்த ஆலயத்தில் புராதன காலம் தொடக்கம் கோவலன் கண்ணகி கதைபடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காப்புச் செய்யுள் கேட்கும்போது வடமராட்சி கிழக்கு குடாரப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர் வெற்றிவேல் என்பவரால் எழுதப்பட்ட ஏடாக கொள்ளப்படுகிறது. இன்னும் பல சிறப்புக்களும் அற்புதங்களும் வாய்ந்த இவ்வாலயத்தில் கண்ணகித் தாயார் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றார். நாமும் கண்ணகித் தாயை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்திபெறுவோமாக.

ஆலய பரிபாலன சபை

## ஆசியுரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான
சிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்தில் கண்ணகி வழிபாட்
தலமாக சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்று தொட்டு விளங்குகின்றது. தி
வளர்ச்சியும் ஒருங்கே அமைந்த பெருமைக்குரியது. இவ்வாலயத்தில் பன்னிரு நாள்க
விழாக்கள் நடைபெற்று பதின்மூன்றாவது நாளான இன்று தேர்த்திருவிழாவும் தொடர்ந்
தோற்சவமும் இடம்பெறும். யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் பல்ல
அடியார்கள் வருகை தருவதும். தத்தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதும் அம்
பெரும் பக்தியை வெளிக்காட்டி நிற்கின்றது இவ்வாலயம்.

ஈழவள நாட்டில் முதன்முறையாக தென்னிந்திய இசைமேதை டாக்டர் சீர்காழி கோவிந்தரா
"சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே கட்டியுந்தன் கால் பிடித்தேன் கருணைக் க
பாடல் பாடி அம்பிகையை மெய்மறக்கச் செய்த மகிமை என்றுமே எம் எல்லோர் அடி மனத்தி
சோலை நடுவே சோபித்திருக்கும் சோதியாய் ஒளிர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும்
துக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

அம்பிகை அருள் அனைவருக்கும் கிட்டட்டும்!

மஹோற்சவங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாப் பொலிவு காண்பது
அம்பிகை மெய்யடியார்கள் அனைவரும் அன்னையின் ரதோற்சவத்தினை கண்ணாரக் க
அம்பாளின் திருவருளைப் பெற்று உய்வீர்கள் என நல்லாசி கூறி அமைகின்றேன்.

"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

சிட்டிவேரம் கண்ண

IT Solution



#08, Point Pedro Road,
Kodikamam Junction.
P.N: 021 227 1400
M.N: 077 406 0010
F.B: VKITSOLUTIONS
Gmail: vkit2015@gmail.com

மாருதி
ரெக்ஸ்



A9 வீதி, பழைய பஸ் நிலையம் முன்பாக,
கொடிகாமம்.
T.P: 077 109 6064

கிருஷ்ணா
கூல்பார்



பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

கஜமுகன்
களஞ்சியம்



பருத்துறை வீதி,
கொடிகாமம்.

நரசிங்கம்
களஞ்சியம்



கால்நடை மருந்து மற்றும்
தீவனங்கள் விற்பனை நிலையம்
கண்டிவீதி, கொடிகாமம்.
077 500 6965

சிறி
வெற்றிலைக்கடை

கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும்
வாசனை திரவியங்கள்,
வாழைப்பழம், வெற்றிலை
பாக்கு ஆகியன மொத்த
மாகவும் சில்லறை
யாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.



மாக்கற் உட்புறம்,
கொடிகாமம்.
077 278 4730

Sun View Sunmax
Mobile Phone Accessories,
Phone Repairing,
Photo copy & DVD
Movies CD



Point Pedro Road, Kodikamam.
T.P: 077 757 4685,
Fax: 021 205 0302
Sunview290@yahoo.com
Sunview290

அம்பாள்
ஐஸ்கிறீம்



பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
T.P: 077 348 4322



# ...ணகை அம்மன் தேவஸ்தான
# ...ழா சிறப்பிதழ் - 2017

...ஸ்தான தேர்த்திருவிழாவுக்கு அருளா ...வழிபாட்டில் மிகவும் முக்கியம் பெற்ற ...றது. திருவிழாச் சிறப்பும், கலைகளது ... நாள்கள் அலங்கார உற்சவத் திரு ...தொடர்ந்து பதின்நான்காம் நாள் தீர்த் ...ம் பல்லாயிரக் கணக்கான அம்பிகை ...ம் அம்மன் பால் அவர்கள் கொண்ட

...விந்தராஜன் அவர்கள் வருகை தந்து ...ணைக் கண்ணால் பாருமம்மா" எனப் ...மனத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளது. ...ருக்கும் அம்பிகையின் இரதோற்சவத்

...ண்பது பெரும்பேறாகும். ஆகையால் ...ாரக் கண்டு, மனமாரவழிபாடுசெய்து

**தலைவர்,**
**...ண்ணகை அம்மன் தேவஸ்தானம்.**

## ஆசிச் செய்தி

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினாலவிர் நல்விழாப் பொலிவு கண்டர்தல்
உண்மை யாமெனினுகர்முன் வருகென வுரைப்பார்"

மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் அண்ணலாரது விழாக்களை மனவுறுதியோடு நடத்துதல் தரிசித்தல் ஆகும்" விதிப்படி உற்சவங்களை செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானம் உண்டாகும்.

ஆலயங்களில் உற்சவங்கள் செய்யப்படுவது சிவபெருமானின் பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும் பொருட்டே ஆகும். அதாவது ஆன்மாக்களது பக்குவத்தன்மைக்கேற்ப மலங்களை நீக்கி முத்திகொடுத்தற் பொருட்டேயாகும். பஞ்சகிருத்தியங்களாவன சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் எனும் ஐந்துமாகும். உற்சவ காலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலான ஐந்தொழிலையும் குறிப்பதாகும். இரதோற்சவமானது சங்காரத்தினைக் குறிப்பதாகும். சங்காரமாவது ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களை பக்குவப்படுத்தல் என்று பொருள்படும்.

சங்காரத்தினை உணர்த்தும் தேர்த்திருவிழாவில் இறைவன் அண்டசராசரங்களை எல்லாம் தேராக்கி ஆன்மாக்களைப் பற்றியுள்ள மலங்களை எல்லாம் நீக்குதற் பொருட்டு அதன்மீது அமர்ந்து வீதிவலம் வருகின்ற காட்சி ஒப்பற்றதிருக்காட்சி ஆகும். பசுபதிஆகிய இறைவன்சூரிய, சந்திரர்களை உருள்களாகவும், நான்குவேதங்களைகுதிரைகளாகவும், மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அவ் அம்பின் கூர்மையாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுரசங்கார உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் கெடுத்தற்காக செய்யப்படுவதே இரதோற்சவமாகும்.

**ஸ்ரீசக்தி கிரியா குருமணி**
**ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்**

**தேர்த்திருவிழா ஆனி மாதம் 24.06.2017 சனிக்கிழமை**

**தேரில் எழுந்தருளல் மு.ப 10.30 மணி**

**தேர் இருப்பு மதியம் 12.00 மணி**

Arulnayaki
Book Depot




A-9 Road, Bus Stand,
Kodikamam.
Tel: 077 493 7585

Siva Super
Market




Point Petro Road,
Kodikamam.

மணியம்
களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்




கண்டி வீதி,
கொடிகாமம்.

வதனி ஜுவலறி
Kandy Road,
Chavakachcheri.




Kandy Road,
Kodikamam.
Tel: 021 227 1300
Mob: 077 800 2724

Dish TV, பிளாஸ்ரிக் கதிரை, மெத்தை, கட்டில்
கோயிற் பொருள்கள், அலங்காரப் பொருள்கள்,
அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

வீ.ரீ.மொடேர்ண்ஸ் மார்ட்
V.T Moderns Mart
No.280, Point pedro Road,
Kodikamam.
Reg No – TN/DS/PS/0473
Prop.K.K.V.Hithen
– 077 315 1454




ஷேத்ரபாலகா
புத்தகச் சோலை



சகல விதமான பாடசாலை
உபகரணப் பொருள்கள்
புத்தக வகைகள் மற்றும்
அழகுசாதனப் பொருள்கள்
என்பன மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

கண்டிவீதி, கொடிகாமம்.
T.P: 077 220 8366
Kandy Road, Kodikamam.
Email: s.niruban77@gmail.com



நிலா
உணவகம்



மத்திய கல்லூரி முன்பாக, வரணி.
T.P: 077 116 7552

ஸ்ரீ கருணா
மல்ரி சொப்
(பத்திரிகை முகவர்)
மத்திய கல்லூரி முன்பாக,
வரணி
T.P: 077 077 3504




உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கசப்பான யதார்த்தம்

இலங்கையில் என்னதான் நல்லிணக்கம் பேசினாலும் சிங்கள, பௌத்த இனவாதத்தில் ஊறிப்போயிருக்கும் அதன் தன்மையை அவ்வளவு இலகுவில் மாற்றிவிட முடியாது. தாம் ஊறியிருப்பது சிங்கள, பௌத்த இனவாதத்திற்குள்தான் என்பதை உணர முடியாதவர்களாகவே பலர் அதற்குள் ஊறித்திளைத்திருக்கிறார்கள் என்பதுதான் மிகக் கொடுமை.

இதற்கு மிகச்சிறந்த பிந்திய உதாரணம் பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்திருக்கும் கருத்து. சிங்கள அரச இயந்திரத்தின் அச்சாணி எது என்பதை அச்சொட்டாக வெளிப்படுத்துகிறது அவரது கருத்து. தமிழர்களின் அச்சம் கொள்ளும் ஆணிவேர் எது என்பதையும் அதுவே வெளிப்படுத்திவிடுகிறது.

''பொதுமகன் ஒருவரைக் கைது செய்வதற்கும் தேரர் ஒருவரைக்கைது செய்வதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. விசாரணைக்காகப் பொது மக்களின் இடங்களுக்குச் சர்வ சாதாரணமாகச் செல்ல முடியும். இந்த நடைமுறை விகாரைகளுக்குள் சாத்தியப்படாது'' என்றார் ஜயக்கொடி.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் அதனைத் தெரிவித்தார். இலங்கையில் சட்டத்தின் முன்பாக பொதுமகனும் தேரர்களும் ஒன்றாக மதிக்கப்படுபவர்கள் அல்லர் என்பதை அவரது கருத்துத் தெளிவாக விளக்குகிறது.

பௌத்த சிங்களவரிலும் பார்க்க பௌத்த தேரர்கள் எப்போதுமே ஒருபடி மேலேதான் என்பதையே அவர் சொல்லாமல் சொல்கிறார். தேரர்கள் என்ன தவறு செய்தாலும் விகாரைகளுக்குள் நுழைவதோ தேரர்களைக் கைது செய்வதோ இலகுவான காரியம் அல்ல என்பதையே அவர் தெளிவுபடுத்துகிறார்.

பொதுமகன் ஒருவரைக் கைது செய்வதற்கும் சமயத்தலைவர் ஒருவரைக் கைது செய்வதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது என்று அவர் கூறவில்லை. இங்கேதான் சிங்கள, பௌத்த இனவாதத்தின் கூறத் தெளிவாக இனங்காண முடிகிறது.

இலங்கையில் சட்டம் ஒழுங்கைப் பேணும் ஒரே அமைப்பு பொலிஸ்தான். அப்படியிருக்கையில் இலங்கைப் பொலிஸாரின் முன் அனைவரும் சமமானவர்களே. சாதாரண மக்களைக் கையாள்வதிலும் தலைவர்களைக் கையாள்வதிலும் வேறுபாடுகள் இருந்தால் அதுவும் ஒரு பொதுப் பண்பு நிறைந்ததாகவே இருக்க வேண்டும். அதாவது எந்த மதத் தலைவராக இருந்தாலும் அவர்கள் மீது பொலிஸாரால் இலகுவில் கைவைக்க முடியாது என்று பொலிஸ் பேச்சாளர் கூறியிருந்தால் அதனை ஓரளவுக்காகவது ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கும்.

ஆனால் அவரோ, தேரர்களை மட்டுமே குறிப்பிட்டார். ஏனெனில் அதுதான் இலங்கையின் யதார்த்தம். பௌத்தமும் தேரர்களும்தான் இங்கே முக்கியம். இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு தேரர்களுக்கு நிகரான இடம் கிடையாது. பௌத்த சிங்கள பொதுமகனுக்குக் கிடைக்கும் மரியாதையிலும் பார்க்க குறைந்த மதிப்பே அவர்களுக்குக் கிடைக்கும்.

போர்க்காலத்தில் இதனை நேரடியாகவே பார்க்க முடிந்தது. அனுபவிக்க முடிந்தது. போர் முடிந்த பின்னரும் மகிந்த ராஜபக்ச கோலோச்சிய காலத்திலும் அந்த நிலமை அப்படியே இருந்தது. ஏனெனில் மகிந்தவிற்கும் பௌத்த சிங்களம் மட்டுமே முக்கியமாக இருந்தது. ஆனால், தற்போதைய அரசின் காலத்திலும் அது அப்படியேதான் இருக்கிறது என்பதன் யதார்த்தம்தான் பொலிஸ் பேச்சாளரின் வாய்க்கூடாக வெளிப்பட்டிருக்கிறது.

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் பெற்றுத்தான் நாட்டின் அரசதலைவரும் அரசும் பதவிக்கு வந்தாலும் அடிப்படை மனோநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே பொலிஸ் பேச்சாளரின் கருத்துப் புடம்போட்டுக் காட்டுகிறது.

இதனால்தான் இலங்கையின் பொலிஸ் மீதும் நீதியின் மீதும் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் அவற்றால் முன்னெடுக்கப்படும் எந்த விசாரணையையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும் உள்ளூரில் நடக்கும் எந்தவொரு விசாரணையாயினும் அதன் ஊடாகத் தமக்கு நீதி கிடைக்காது என்றும் பன்னாட்டளவில் நடைபெறும் விசாரணை ஒன்றின் ஊடாகவே நீதி கிடைக்கும் என்று தமிழர்கள் எண்ணுகிறார்கள். அதன்படி நடக்கிறார்கள்.

கடந்த இரண்டரை ஆண்டுகளிலும் இந்த நிலமையில் மாற்றம் ஏதுமில்லை என்பதே கள யதார்த்தம். நல்லிணக்கம் பற்றியும் தீர்வு பற்றியும் பேசப்படும் [illegible] துவொரு கசப்பான யதார்த்தமே!



# திட்டமிட்டுப் பயணித்தால் கதிர்காமம்; தவறினால் இடைவழி அந்தரிப்பு

சிங்கள மூலம்
காசியப்ப பண்டார
■ தமிழில் வீ.எஸ்.ரீ

சிங்கள மொழியில் அமைந்த இந்த முதுமொழி, பாரம்பரிய சிங்களக் கலாசாரத்துக்குப் பொருத்தமாய் அமைந்ததொன்று என்பது மட்டுமன்றி இன்றைய நாட்டு மக்களது வாழ்வியல் மற்றும் அரச நிர்வாக இயந்திரத்தின் செயற்பாடுகளுக்கும் பொருத்தமானதொன்றாக அமைகிறது. திட்டமிட்டுப்பயணித்தால் கதிர்காமத்தைச் சென்றடைய முடியம். அவ்வாறில்லாவிடில் இடைநடுவில் அந்தரிக்க நேரிடும் அல்லது போக வேண்டிய இடத்தைச் சென்றடைய இயலாது போய்விடும் என்பதே அந்த முதுமொழியின் விளக்கமாகும். அது இன்றைய அரசின் செயற்பாடுகள் குறித்து எம்மைச் சிந்திக்க வைக்கும் வகையிலானது.

அண்மைய அமைச்சரவை மாற்றத்தையடுத்து அமைச்சர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட திணைக்களங்கள் குறித்த விவரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதையடுத்து கடந்த வாரம் முழுவதும் அரசு பல்வேறு விமர்சனங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. 2015 ஜனவரி 8ஆம் திகதிய அரச தலைவர் தேர்தல் வெற்றியையடுத்து வெளியிடப்பட்ட கொள்கை விளக்க அறிக்கையில் அமைச்சரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும்பல கொள்கைநிலைப்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வெளியுறவு அமைச்சர் மற்றும் நிதி அமைச்சு என்பவற்றின் கீழான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் உரிய விதத்தில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. உயர் கல்வி அமைச்சருக்கு பெருந்தெருக்கள் அமைச்சு ஒதுக்கப்பட்டிருந்தது. தேர்தல் கொள்கை விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டவற்றை நூற்றுக்கு நூறு வீதம் நிறைவேற்ற வேண்டுமென எவரும் எதிர்பார்க்க இயலாது. குடிசார் சமூக அமைப்புக்களது தேவைக்கேற்ற வகையில் அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதென்பதை அரச தலைவர் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டிருப்பினும் அந்த அமைப்புக்கள் இத்தகைய மாற்றத்தைத் தான் எதிர்பார்த்தார்கள் எனக் கொள்ள இயலவில்லை.

## பிணைமுறி விவகாரம்

இதனிடையே மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் தொடர்பிலான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில் அதில் அரசதரப்புக்கு பின்னடைவே காணப்படுகிறது. வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு கணக்காய்வாளர்நாயகம் வழங்கிய பதில் கூட்டு எதிரணியின் பரப்புரைக்கு நல்ல தீனி வழங்கியுள்ளது. ஆயினும் கணக்காய்வாளர் நாயக்கத்தால் தவறான தகவல்களை வெளியிட இயலாது. ஆயினும் அந்த விவரங்கள் பகிரங்கப்படுத்தப் படவும் வாய்ப்பில்லை. ஏனெனில் தகவல் வழங்கும் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

அதேபோன்று அமைச்சர்கள் அமைச்சு அலுவலகத்துள் அறைகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள இயலாத சிரமத்தில் உள்ளனர். ஏனெனில் இது தேசிய அரசாக உள்ளதே இதற்கான காரணமாகும். இத்தகைய முரண்பாடுகளுக்குத் தீர்வு காண அரச தலைவராலோ தலைமை அமைச்சராலோ இயலாது. கூட்டு அரசின் இயல்பான சுபாவம் இது. இந்த நிலை ஒரு வகையில் ஒரே வீட்டில் வாழும் அண்

"அமைச்சர்கள் அமைச்சு அலுவலகத்துள் அறைகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள இயலாத சிரமத்தில் உள்ளனர். ஏனெனில் இது தேசிய அரசாக உள்ளதே இதற்கானகாரணமாகும். இத்தகைய முரண்பாடுகளுக்குத் தீர்வு காண அரச தலைவராலோ தலைமை அமைச்சராலோ இயலாது. கூட்டு அரசின் இயல்பான சுபாவம் இது. இந்த நிலை ஒரு வகையில் ஒரே வீட்டில் வாழும் அண்ணன் தம்பியை ஒத்ததொன்று.




ணன் தம்பியை ஒத்ததொன்று. அவர்கள் இருவரும் எப்போதுமேதம்மிடையே முரண்பட்டுக் கொண்டாலும் ஒருவரில்லாமல் மற்றவரால் செயற்பட இயலாது. அதே போன்று தான் அரசு செயற்பட வேண்டுமானால் அரசில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளைச் சேர்ந்தோரும் ஒன்றிணைந்து செயற்பட்டாக வேண்டும். ஆனால் தத்தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தவும் வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் தம் மத்தியில் மோதல்கள் நிலவுவதாக வெளியில் காட்டிக் கொண்டாக வேண்டும்.

**ரணிலின் கருத்து**

இதனிடையே மருத்துவ சிகிச்சையை முடித்துக் கொண்டு வெளிநாட்டிலிருந்து திரும்பிய தலை அமைச்சர் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அந்தமருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறியதால் சமூக வலைத்தளங்களில் கடும் கண்டனக்கருத்துக்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான படிகளை அதிகரிப்பது தொடர்பாகவும் அண்மையில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய நிலை மூலம் அரசின் பெயர் நலிவு காண்பது மட்டுமன்றி மீதமிருந்த மக்கள் ஆதரவும் மெது மெதுவாக குறைவடைய ஆரம்பித்துள்ளது.

மறுபுறத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சின் அமைச்சருக்குக் கூடத் தெரியாத வகையில் அமைச்சின் நிறைவேற்றுச் சபையால் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக நிறைவேற்றுச் சபை உறுப்பினர்கள் அமைச்சரவைக்கு விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. அதே சமயம் அரச மருத்துவர்கள் சங்கம் கல்வி அமைச்சால் இரசாயன விசம் கலந்து தயாரிக்கப்பட்ட கடதாசி பயன்படுத்தப்பட்டு அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இது அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தத்தக்கதொன்றாகும்.

இதேவேளை மற்றொரு புறத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கமும் வாழ்க்கைச் செலவினம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் பணவீக்கம் ஏற்படுவதாக அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளது. கடந்த தேர்தலில் இன்றைய அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதற்காக கடுமையாக உழைத்த தரப்பு இது என்பதால் அரசுக்கு இவையாவும் பின்னடைவுகளை ஏற்படுத்துவனவே. அதேவேளை மின்சாரக் கட்டணத்தை அரசு உயர்த்தப் போவ தாக செய்தியொன்று கடந்த வாரம் முதல் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அதேவேளை எரிவாயுவின் விலையைக் கூட அரசு அதிகரிக்க விருப்பதாகவும் கூறப்படுகிறது. நாட்டில் அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்தால் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையைச் சமப்படுத்தவே அரசு இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள விருப்பதாகக் கூறப்படுகிறது.



தபால் துறை ஊழியர்கள் பழைய தபாலகங்களை ஹோட்டல்களாக மாற்றும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டமொன்றுக்கான முயற்சிகளில் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

1994 ஆம் ஆண்டின் பின்னர் ஐ.தே. கட்சிக்கு நாட்டை ஆட்சி செய்த அனுபவம் கிடையாது என்பதைச் சகலரும் அறிவர். அதன் காரணமாகத் தான் இன்றைய கூட்டு அரசின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும் விதத்தில் ஐ.தே. கட்சியின் அமைச்சர்கள் செயற் பட்டு வருகின்றனர். அரசொன்றை நிர்வகிப்பதென்பது இலேசானதொரு காரியமல்ல என்பதை இவர்கள் மனதில் கொண்டாக வேண்டும்.

**ஆட்சி அனுபவம்**

1994 ஆம் ஆண்டின் பின்னர் ஐ.தே. கட்சிக்கு நாட்டை ஆட்சி செய்த அனுபவம் கிடையாது என்பதைச் சகலரும் அறிவர். அதன் காரணமாகத் தான் இன்றைய கூட்டு அரசின் செயற்பாடுகள் முடங்கிப் போகும் விதத்தில் ஐ. தே. கட்சியின் அமைச்சர்கள் செயற்பட்டு வருகின்றனர். அரசொன்றை நிர்வகிப்பதென்பது இலேசானதொரு காரியமல்ல என்பதை இவர்கள் மனதில் கொண்டாக வேண்டும்.

அரசொன்றை நிறுவ வாய்ப்புக் கிட்டினால் அந்தத் தரப்பினர் அரசின் நிர்வாகம் என்ற பயணத்தை மெதுவான வேகத்தில் ஆரம்பிக்க வேண்டும். அதன் பின்னர் அதற்குத் தேவையான தயாராதல் மற்றும் பயிற்சிகளை முன்னெடுத்தல் வேண்டும். இல்லையேல் பயிற்சி எடுத்துக் கொள்ளாது ஓட்டப் போட்டியொன்றில் பங்குபற்றும் விளையாட்டு வீரரொருவருக்கு ஏற்படும் கதியே குறித்த அரசுக்கும் ஏற்படும் அத்தகைய பின்னடைவு நிலையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமானால் பயணம்குறித்தசகலவிடயங்களையும் தெளிவாகத் தெரிந்து கொண்டு பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் இல்லையேல் இடைநடுவில் சிரமப்படவோ சிக்கல்களைச் சந்திக்கவோ அல்லது இடமுண்டு. இதனாலேயே தெரிந்து கொண்டு பயணித்தால் கதிர்காமத்துக்கான பயணம் சிறக்கும் இல்லையேல் இடைநடுவில் அந்தரிக்க நேரிடும் என எமது முன்னோர்கள் சொல்லி வைத்திருப்பார்களோ?



## ஆசிரியருக்கான கடிதம்

### எல்லைக் கற்களை ஒழுங்கு முறையில் நிலைநிறுத்துவது கட்டாயமான கடமை

குடாநாட்டின் ஒவ்வொரு பிரதேச சபைகளின் எல்லைகளில் அதனை உறுதிப்படுத்தும் வகையிலும் வரவேற்புத் தெரிவிக்கும் வகையிலும் குறித்த பிரதேசசபைகளால் எல்லைக் கற்கள் நிறுவப்பட்டு வருடா வருடம் வர்ணம் பூசி ப்ராமரிக்கப்பட்டன. அவை புதிதாக வருபவர்களுக்கும் வழிகாட்டிகளாக விளங்கி வந்தமை யாவரும் அறிந்ததொன்றே. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இவை எந்தவொரு பிரதேசசபைகளாலும் எந்தவித பராமரிப்பும் மேற்கொள்ளப்படாதது மட்டுமன்றி யாழ் குடா நாட்டின் திரை அரங்குகளில் காண்பிக்கப்படும் திரைப்படங்க ளுக்கான வியம்பர பலகையாகவும் இங்குள்ள கல்வி நிலையங்களின் விளம்பர பலகைகளாகவும் காட்சி அளிக்கின்றன. இந்த எல்லைக் கற்களின் அவசியத் தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளது கௌரவம் என்பவற்றைக் காப்பாற்ற பிரதேசசபை நிர்வாகத் தரப்பினர் முன்வருவார்களா?

வலிகாமத்தான்

### தனியார் பேருந்துகளில் பயணிகளின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்

இ.போ.ச பேருந்துகளில் பயணம் செய்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் வந்து இறங்கிச் செல்லும் பயணிகளை தனியார் சேவை பேருந்து நடத்துனர்கள் ஒரு சிலர் ஏசுவதை அவதானிக்க முடிகிறது. பலர் நடமாடும் இடத்தில் இவ்வாறான முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்தல் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அண்மையில் சாவகச்சேரியில் இருந்து இ.போ.ச பேருந்தில் பயணம் செய்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இறங்கி வந்த என்னை கொடிகாமம் தனியார் பேருந்து நடத்துனர் ஒருவர் ஏசினார். தமது பேருந்தில் பயணம் செய்யவில்லை என்ற ஆதங்கத்தில் அவர் என்னை ஏசியதை அவரது வார்த்தைப் பிரயோகங்களில் இருந்து அறிய முடிந்தது. நாம் எந்தப் பேருந்தில் பயணம் செய்கிறோம் என்பது அவருக்கு அவசியமற்றது.

ஏனைய தனியார் பேருந்துகளிலும் பயணிகளுடன் வாக்குவாதம், அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லல், போட்டி போட்டுக்கொண்டு வாகனங்களைச் செலுத்துதல் என்பன பல்வேறுபட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னரும் இன்னும் தொடர்ந்துகொண்டே தான் உள்ளன.

சாந்தினி
தென்மராட்சி

## 'சேவ் யுவர் மங்கி' காப்புறுதி இணைய சேவை ஆரம்பம்


காப்புறுதியின் அனுகூலங்கள், பெறுமதி மற்றும் சேவை தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்தவும், காப்புறுதியின் பெறுமதியை உணர்த்தும் விதமாகவும் அவை சார்ந்ததான பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்கும் நோக்கில் "சேவ் யுவர் மங்கி" காப்புறுதி இணைய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படு கிறது.

காப்புறுதியை இணையம் ஊடாக ஒப்பிட்டுப் பார்க்கும் மேற்படி புதிய இணையத்தளம் காப்புறுதித் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கி காப்புறுதிச் சேவையை இலகுவாக்கியுள்ளதுடன் அனைவரையும் சென்றடையக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவையின் விசேட அம்சம் யாதெனில் இலங்கையிலுள்ள அனைத்து காப்புறுதிச் சேவைகளையும் ஒப்பிட்டு மக்களுக்குத் தேவையான காப்புறுதியை இலகுவாகவும், நம்பிக்கையாகவும் தமக்கு தேவையான விலைக்கும் பெற்றுக் கொள்ள முடிகிறது.

மேலும் இந்த சேவையானது பாவனையாளர்கள் பல்வேறு காப்புறுதி நிறுவனங்கள் விநியோகிப்பதான விலைப்புள்ளிகளை ஒப்பிட்டுப் பார்க்கவும், காப்புறுதித் திட்டங்களைத் துரிதமாகப் பெறவும் உதவிபுரிகிறது.

இந்தச் சேவையின் இன்னொரு விசேட அம்சம் எதுவெனில் காப்புறுதியைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து அனைத்து நடவடிக்கைகளையும் அதுசார்ந்த காப்புறுதி ஆவணங்களையும் பாவனையாளர்களின் வீட்டுக்கே கொண்டு வந்து வழங்குகிறது.

உலகம் முழுவதும் மக்கள் அனுபவிக்கும் இந்தச் சேவையை இலங்கையர்களுக்கு வழங்குவதே பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது. இவை தவிர பாவனையாளர்களின் தேவைக்கேற்ப பெறுமதி சேர்க்கக்கூடிய மேலும் தன்னிறைவான உற்பத்திகளையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகிறது.



# தேசிய கல்வியியற் கல்லூரி நிர்மாணப் பணிகளுக்கு கொரிய அரசு நிதி உதவி

தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சிப்போக்கோடு போட்டி போடும் விதமாகவும், வினைத்திறன் மிக்க தொழிற்படையை உருவாக்கிக் கொள்ளும் நோக்கோடும் கொரிய அரசின் நிதியுதவியுடன் குளியாப்பிட்டியவில் புதிய தொழில்நுட்பத்திற்கான தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்று அமையவுள்ள தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரிய அரசுக்கும் கல்வி அமைச்சுக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி மற்றும் கொரிய குடியரசின் விசேட பிரதிநிதி லீ டொங் கு ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வானது கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் மற்றும் கொரிய குடியரசின் விசேட பிரதிநிதி லீ டொங் கு ஆகியோரின் பங்களிப்பில் கல்வி அமைச்சில்இடம்பெற்றுள்ளதென கூறப்படுகிறது.

மேலும் புதிதாக அமையவுள்ளதான தொழில்நுட்பத்துக்கான தேசிய கல்வியியற் கல்லூரியானது தொழில்நுட்பத் திறனுடன் கூடியதான தொழிற்றுறையை உருவாக்குவதில் சிறந்த பங்களிப்பை வழங்குவதுடன் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான தேசிய மட்டத்திலான தொழில்நுட்ப தேசியகல்வியியற் கல்லூரியாகவும் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “ தேசிய கல்வியற் கல்லூரியை அமைக்கும் மேற்படி திட்டத்திற்கு கொரிய அரசானது 1911 மில்லியன் ரூபா தொகை மதிப்பீட்டு நிதியை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளது. ”

# 'சுவசக்தி' வேலைத்திட்டத்தில் நிதி மூலங்கள் பெற அனுமதி

நாட்டில் 10 லட்சம் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான 'சுவசக்தி' தேசிய வேலைத்திட்டத்தில் கடன் மற்றும் நிதி உதவி வசதிகளை மத்திய வங்கியின் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

10 லட்சம் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதற்கான 'சுவசக்தி' தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சு இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து செயற்படவுள்ளது.


தவிர,சிறு மற்றும் மத்திய வியாபார துறைகளில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் புதிய வணிகம் சார் தொழிற்றுறையினுள் வியாபாரிகள் 25 ஆயிரம் பேரை உள்வாங்குவதற்கும், தொழில்முறை சார்ந்து அவர்களை விருத்திசெய்வதற்கும் பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் வணிக வங்கி ஆகியவற்றின் மூலம் கடன் வசதிகளை பெற்றுக் கொடுப்பது இவ்வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாக சொல்லப்படுகிறது.

இதன் மூலம் சிறந்த வியாபார திட்டங்களின் முன்மொழிவுத்திறனை கருத்திற்கொண்டு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்டதான நிதி மூலங்களைப் பெற்றுக்கொடுப்பதுடன் அத்தொகையினுள் வியாபாரிகளுக்கான 50 ஆயிரம் ரூபா நிதியுதவியும் 2 லட்சம் ரூபா பெறுமதியான கடன் தொகை மதிப்பீடும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

இதனடிப்படையிலே மேற்படி கடன் மற்றும் நிதியுதவி ஆகிய யோசனை முன்மொழிவுகளை இலங்கை மத்திய வங்கியின் ஊடாக செயற்படுத்துவது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் என்ற அடிப்படையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருந்தமை நோக்கத்தக்கது.

| CSE COLOMBO STOCK EXCHANGE | | | | | கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 23/6/2017 | | | கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
| | | www.cse.lk | | | கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 148.90 | 7,323,929 | 1,090,528,958 |
| [illegible] | | இன்று | நேற்று | | டோக்கியோ சிமேன் | TKYO.N | 72.40 | 11,516,971 | 802,940,783 |
| ASPI | 0.60 | 6,715.33 | 6,714.73 | | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.50 | 1,788,277 | 319,975,599 |
| S&P SL20 | 1.68 | 3,915.30 | 3,913.62 | | சிலோன் ஹோல் எஸ்ரோஸ் | CCS.N | 850.00 | 132,012 | 112,212,665 |
| வியாபாரப்புரள்வு | | 2,686,024,450 | 495,493,792 | | பான் ஏசியன் பவர் | PAP.N | 3.00 | 23,994,984 | 71,984,952 |
| உள்நாடு- கொள்வனவு | | 375,174,016 | 339,471,456 | | டயலொக் | DIAL.N | 11.80 | 3,731,189 | 44,400,691 |
| விற்பனை | | 632,847,680 | 324,880,512 | | டோக்கியோ சிமேன் | TKYO.X | 66.50 | 436,475 | 31,733,145 |
| வெளிநாடு- கொள்வனவு | | 2,310,850,560 | 156,022,304 | | லாவ் காஸ் | LGL.X | 24.70 | 762,743 | 18,748,434 |
| விற்பனை | | 2,053,176,830 | 170,613,248 | | பிறவுன் இன்வெஸ்மன் | BIL.N | 2.90 | 2,945,192 | 12,977,376 |
| | | | | | ஜனசக்தி இன்சூரன்ஸ் | JINS.N | 16.00 | 813,696 | 12,781,394 |

பங்குச்சந்தைத் தகவல்கள்




- பங்குலாபம் -

சதோசா மேட்டார் - ரூபா 5:00
சிஜசி ஹோல்டிங்ஸ் - ரூபா. 1:00
சிலோன் காடியன் இன்வெஸ்மென் - ரூபா. 4:00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 235 |
| விலை உழைப்பு | 11.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

## ஜப்பான் அரசிடமிருந்து 1.5 பில்லியன் ரூபா நிதி உதவி இலங்கைக்கு

### பொதுப் போக்குவரத்துச் சேவையை சீர்செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தகவல்

இலங்கையில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை சீர்செய்வது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஜப்பான் அரசிடம் இருந்து 1.5 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடைய நிதி உதவி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதான தகவல் போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக போக்குவரத்து செயல்நிலைகளின் போது ஏற்படுகின்ற வாகன நெரிசல்கள் காரணமாக நாளொன்றுக்கு 500 மில்லியன் ரூபா வருமானத்தை இழந்து போகவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளதாகவும், பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுவூட்டுவதன் மூலமே இந்த நிலமைகளை சீர் செய்ய முடியுமெனவும் மொறட்டுவை பல்கலைக்கழக போக்குவரத்து ஆராய்ச்சிப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அமல் குமாரகே சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, "தினமும் கொழும்புக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அண்ணளவாக 5 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் கொழும்புக்குள் பிரவேசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றுள் 4 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானவை தனியார் வாகனங்கள் என்பது அறிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது. பொதுப் போக்குவரத்து சேவை அல்லது தனியார் வாகனங்கள் மூலமாக தினமும் 19 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொழும்பு மாநகரத்தினுள் பிரவேசிக்கின்றனர். இதன் காரணமாகவே மருதானை, பொரளைச் சந்தி, கனத்தை சுற்றுவட்டம், நாரஹேன்பிட்டி பகுதிகள் தொடர்ந்தும் வாகன நெரிசல் நிறைந்த பிரதேசங்களாக காணப்படுகின்றன" என பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தநிலையிலேயே பொது வீதிகளைச் சீர்செய்து விரிவாக்குவதன் ஊடாக வாகன நெரிசலைத் தவிர்த்து தீர்வைக் கண்டுகொள்ள மேற்படி ஜப்பானிடம் இருந்தான 1.5 பில்லியன் ரூபா நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது. அத்துடன் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ரயில் மற்றும் பஸ் சேவைகளை விரிவுபடுத்து வதன் ஊடாக வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும் என்பதான கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

## மக்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் காப்புறுதி முறைமை

### அரசின் நடவடிக்கைகளுக்கு உலக உணவுத் திட்டம் பாராட்டுதல்

நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களதும், சொத்துக்களை பாதுகாக்கும் காப்புறுதி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தும் விதமாக அரசு மேற்கொண்டுள்ளதான நடவடிக்கைகளுக்கு உலக உணவு திட்டம் பாராட்டுதல் தெரிவித்துள்ளது.


உலக உணவு திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் நிதி அமைச்சகத்தினிடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இலங்கை அரசு முன்னெடுத்துள்ளதான மேற்படி காப்புறுதி முறைமை தொடர்பிலான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

தவிர,வெள்ளம், மண்சரிவு மற்றும் வறட்சி போன்றதான இயற்கை அழிவுச் சீற்றங்கள் ஏற்படும் போது அதற்குரித்தான தொழில்நுட்ப உதவி வழங்கல்களை முன்மொழிவதற்குத் தாம் தயாராக உள்ளதாக உலக உணவு திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எல்தரின் கசிம் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்றவகையில் இலங்கையில் இதுபோன்றதான காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்துவது ஓர் சிறப்புத் தேர்ச்சிக்குரியதான நடவடிக்கையாக கருதப்படுகிறது.

மேலும் இவ்வாறான காப்புறுதி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இலங்கை அரசு தனது கொள்கையில் அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளதாக உலக உணவு திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

பா.பாலாஜனி



# அறிவு சார்ந்த கல்வியின் அபிவிருத்திப் போக்கில் இடைவிலகல் தரும் ஞாபக மறதியின் ப(பா)ங்கு

அறிவு சார்ந்த கல்வியின் போக்கு என்பது மிகப் பரந்துபட்ட தொழில்நுட்ப மாற்றங்களோடான முறைமைக்குள் பயணிக்க வேண்டிய காலச் சுழற்சியுள் பயணிக்கின்றது. அந்தவகையிலே 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விப்புலத்தின் மாற்றங்கள் அனைத்துமே நோக்குதற்குரியவை. இன்றைய கல்வி செயற்பாடுகளின் பயணங்கள் புதிய பரிமாணத்தில் புதுமைகளுடன் வளர்ந்து கொண்டிருக்கின்றன. புதிய பரிமாணத்தின் செயலுறுதியாகப் போட்டித்தன்மை என்பது இன்றைய கல்வி நடைமுறையில் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கேற்பவே கல்வியை ஊக்கமாகக் கற்க வேண்டிய ஒரு நிலமை மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஏனெனில் கல்வியில் தனித்திறமைகளை உச்சபட்சமாக வெளிப்படுததும் மாணவர்களுக்கே நிலையான அங்கீகாரம் என்பது தற்காலத்தில் கிடைக்கின்றது. அந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்கள் எல்லோருமே ஆர்வத்தைக் காட்டிவருகின்றனர். அவர்களுடைய முயற்சியின் போக்கில் பல்வேறுபட்ட சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். அவை தவிர்க்க முடியாத ஒன்றாகவும் மாற்றங்கண்டுள்ளன. அவற்றுள் அதிக இடைவிலகலை தரக்கூடிய.எல்லா மாணவர்களும் பொதுவாக எதிர்நோக்குகின்ற அடிப்படை காரண காரிய பிரச்சினையாக மாணவர்களுக்கு ஏற்படுகின்ற ஞாபகமறதி முக்கியத்துவம் பெறுகிறது.

எவ்வளவுதான் நன்றாகப் படித்தாலும் கொஞ்சநாள்களிலேயே எல்லாம் மறந்து போய்விடுகின்றது என்பது தான் பல மாணவர்களின் கூற்றாகவும், ஆழ் மன ஏக்கமாகவும் இருந்து வருகிறது. அப்படியாயின் இந்த ஞாபகமறதியை தவிர்த்துக்கொள்வதற்கும் அதிலிருந்து விடுபட்டுக் கொள்வதற்கும் சில நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் பற்றி நோக்குதல் பயனுள்ளதாய் அமையும். அந்த விடயங்கள் குறித்துப் நாம் இங்கு கதையாடிப் பார்ப்போம்.

## ஞாபகமறதியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள்

### பாடங்களை மீளப் படித்தல்

பாடசாலைகளில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் விடயங்களை வீட்டுக்கு வந்ததும் ஞாபகம் கொள்ளாது இருந்துவிடக்கூடாது. மாணவர்கள் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அங்கு கற்ற விடயங்களை மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்க்க வேண்டும். கணிதம் மற்றும் விஞ்ஞானச் சமன்பாடுகளோடு தொடர்புபட்ட பாட விதானங்களை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து பார்க்க வேண்டும். அவை தொடர்பான விளக்கமின்மை இருப்பின் புத்தகங்கள் மற்றும் இணையத்தள உதவி கொண்டு பெற்று பயிற்சி செய்து பார்க்கலாம்.

### கலந்துரையாடுதல்

ஓய்வு நேரங்களில் நண்பர்களுடன் சேர்ந்து பொழுதை வீண்விரயம் செய்யாது அவற்றை பயனுறுதியாக்கிக்கொள்ள வேண்டும். அந்த நேரத்திலே குறிப்பாக, பாட விதானம் குறித்த விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடலாம். இங்கு பல நாள்களுக்கு முன்பு படித்த விடயங்களை ஒருவருக்கொரு வர் பரிமாறிக்கொண்டு பேசிக் கொள்ளலாம். ஏனெனில் அதிகமாக மறந்து போன விடயங்களாக அவையே அமைந்திருக்கும். சிலருக்கு அவ்வாறான விடயங்களை படித்தது கூட ஞாபகத்தில் இல்லாமல் இருக்கும். எனவே இவ்வாறு செயற்படும் போது மாணவர்கள் அனைவருக்குமான பயன்மிகு மீட்டலாக அவை அமைந்திருக்கும்.



### குறிப்பெடுத்தல்

ஞாபகமறதியை இல்லாது செய்வதற்கு உகந்த நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. அதிகமான பாடவிதானக் குறிப்புகள் உள்ள பாடங்களை ஞாபகம் வைத்துக் கொள்வதென்பது எல்லா மாணவர்களாலும் இயலாத காரியம். ஆக, குறிப்பிட்ட பாடத்தை நன்றாக வாசித்து அதன் கருத்துக்களை நன்றாக மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதிலுள்ள முக்கியமான மையக்கருத்துக்களை ஒரு தாளில் எழுதிக் கொள்ள வேண்டும். அதன் பின்பு அந்தக் கருத்துக்களுக்கு கீழே உள்ளடங்கும் விடயங்களை விளங்கக் கூடிய விதமாக குறித்துக் கொள்ள வேண்டும்.

இவற்றைத் திரும்ப திரும்ப படித்துக்கொள்வதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம். இந்த விடயத்தை மேலும் பயனுறுதியாக்கிக்கொள்ள மாணவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்டதான சிறியகுறிப்புகள் உள்ளடங்கியுள்ள தாளை வீட்டில் அதிகமாக நடமாடும் இடத்திலோ அல்லது தங்கள் தனிப்பட்ட அறையிலோ ஒட்டி வைக்க வேண்டும். அவை கண் பார்வை வெளிக்குள் அகப்படும் போதெல்லாம் வாசித்து மனப்பாடம் செய்து ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அனுபவ ரீதியிலே இவை மிகச் சிறந்த நடைமுறையாகவே உணரப்படுகின்றது.

> பொழுதுபோக்குச் சாதனங்கள் இன்று அதிகமாக பெருகி வருகின்றன. மாணவர்களும் அதன்பால் வெகுவாகவே ஈர்க்கப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாட்டில் ஒரு முகமாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களும் படித்தவற்றை மீட்டிப் பார்ப்பதற்கான காலங்களும் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே இவற்றை விடுத்துக் கல்விச் செயற்பாட்டில் மாணவர்கள் முழுமனதாக ஈடுபட வேண்டும். அப்போது தான் கற்ற, விடயங்களை ஞாபக மறதியின்றி நினைவில் சேமித்து வைத்துக் கொள்ளமுடியும்.

### கேள்வி பதில் முறையில் கற்றல்

கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது தரப்பட்ட குறிப்புகளில் இருந்து கேள்விகளையும் அதற்கான பதிலகளையும்; அவற்றில் இருந்தே உருவாக்கிக் கொண்டு ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். குறிப்புக்களை கற்பதை விடவும் கேள்வி, பதில் முறையில் அவற்றைக் கற்றுக்கொள்வதென்பது இலகுவான நடைமுறைச் செயலொழுங்கென இன்றைய ஆய்வுகளின் முடிவுகள் சொல்கின்றன. கேள்வி, பதில் முறையில் கற்பதற்கு நண்பர்களையும் இணைத்துக்கொள்வது அதிக விளை திறனைத் தரும். கேள்வி பதில் முறையில் கற்கும் போதுதான் சிந்திப்பதற்கான வழி ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

### விரிவாகக் கற்றல்

மேலோட்டமாகப் படிப்பதை விடவும் விரிவாக கற்கும் போது அவை ஞாபகத்தில் இருப்பது அதிகமாக இருக்கும். எனவே நுனிப்புல் மேய்வதை விடுத்து தெளிவாகக் கற்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனடியாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும். இங்கு விரிவாகக் கற்றல் என்று நான் குறிப்பிடுவதை தவறாக எண்ணிவிட வேண்டாம். இங்கு விரிவாகக் கற்றல் என்பது உங்களின் பாடத்திட்டங்களுக்கு உட்பட்டதான விடயங்களை மட்டும் தெளிவாக விளங்கிக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதனையே குறித்து நிற்கின்றது.

### கவனச் சிதறலின்றி இருத்தல்

ஒரே நேரத்தில் இரண்டு தோணியில் கால் வைக்கும் போது ஏற்படும் இடர்களில் இருந்து தப்பித்துக் கொள்வதென்பது இயலாத காரியம். அது போலவே கல்வி கற்கின்ற போதும் அந்த வயதிற்குரித்தான விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

### கற்ற விடயங்களைப் பிரயோகித்தல்

பாடசாலையிலோ அல்லது தனியார் கல்வி நிலையங்களிலோ கற்ற விடயங்களை அன்றாட நிகழ்வுகளில் செயற்படுத்திப் பார்க்க வேண்டும். தனித்துக் கற்றால் மட்டும் போதாது. அதை பிரயோகிக்கவும் வேண்டும். உதாரணமாக வாழ்க்கை சம்பந்தமாக உங்களுக்கு நீங்கள் கற்றுக் கொண்ட விடயங்களை உங்கள் வாழ்க்கையிலேயே பிரயோகித்துக் கொள்வது போலவே அன்றாடம் கற்கின்ற விடயங்கள் மற்றும் அவதானிப்புக்களையும் உங்கள் வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது கற்றவிட்யங்கள் ஞாபகத்தில் இருப்பது அதிகப்படுத்தப்படும்.

### சத்துள்ள உணவுகளை உட்கொள்ளல்

பாடவிதானங்களின் கற்றல் மூலம் மாத்திரம் வாழ்க்கையில் முன்னேறிவிட முடியாது. வாழ்வதற்கு தேவையான உடல் உறுதியும் முக்கியமானதாகும். எனவே நல்ல சத்தான உணவுகளை உட்கொண்டு எமது தேக ஆரோக்கியத்தையும் பேணிக்கொள்ள வேண்டும். இன்றைய மாணவர்கள் உணவு உண்பதில் கவனம் செலுத்துவதில்லை. நான் முந்தி நீ முந்தி என தனியார் கல்வி நிறுவனங்களுக்கும்.ஏனைய சிறப்பு வகுப்புகளுக்கும் ஓடித்திரிகின்றனர். அதனிடை படித்த விடயங்கள் எவையும் ஞாபகம் நிற்பதில்லை என்றும் சொல்லிக் கொள்கின்றனர். இதற்கு பிரதான காரணியாக உணவு பயன்பாடு தொடர்பில் அவர்கள் காட்டுகின்ற அலட்சியப் போக்குகளும் பிரதானம் பெறுகிறது. வல்லாரை, தூதுவளை, பசளிக்கீரை, முருங்கை இலை முதலியவற்றை அன்றாட உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

அதிக நேரத்தை கல்விச் செயற்பாட்டுக்காக ஒதுக்கிக் கொள்ளுவதென்பது இன்றைய மாணவர்களுக்கு தடைக் கற்களாக அமைந்துள்ளன. பொழுதுபோக்குச் சாதனங்கள் இன்று அதிகமாக பெருகி வருகின்றன. மாணவர்களும் அதன்பால் வெகுவாகவே ஈர்க்கப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாட்டில் ஒரு முகமாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களும் படித்தவற்றை மீட்டிப் பார்ப்பதற்கான காலங்களும் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே இவற்றை விடுத்துக் கல்விச் செயற்பாட்டில் மாணவர்கள் முழுமனதாக ஈடுபட வேண்டும். அப்போது தான் கற்ற விடயங்களை ஞாபக மறதியின்றி நினைவில் சேமித்து வைத்துக் கொள்ளமுடியும்.

ஆக,மேற்கூறப்பட்டதான விடயங்கள் அத்தனையும் வெறும் வாசிப்புக்கு மட்டுமானதல்ல. இந்த விடயங்களைப் படித்து விட்டுப் போவதுடன் மட்டும் நின்றுவிடாது நடைமுறையில் செயற்படுத்தினால் மட்டுமே முழுமையான வெற்றியை அடைந்து கொள்ள முடியும். உங்கள் நண்பர்களிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். நற் சிந்தனையுடைய அன்பான மாணவர்களாக இந்த விடயங்களை நினைவிருத்திச் செயற்படுத்திக் கொள்ளுங்கள். நற் பெறுபேறுகளைப் பெற்று வாழ்வில் உயர்ந்திருங்கள்.

# உங்கள் ராசிக்கு எந்த நாள்கள் அதிர்ஷ்டம் துரதிஷ்டம் தெரியுமா?




சோதிடத்தில் ஒருவரது ராசியை வைத்து, ஒரு மாதத்தில் அவருக்கு எந்தெந்த நாள்கள் அதிர்ஷ்டம் மற்றும் துரதிஷ்டமாக அமையும் என்பதைத் தெரிந்துக் கொள்ளலாம்.

**துலாம்**
துலா ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 7, 8, 17, 18, 25, 26. துரதிஷ்டமான நாட்கள் 4, 5, 9, 10, 11, 14, 15, 31 ஆகும்.

**விருச்சிகம்**
விருச்சிக ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 9, 10, 19, 20, 27, 28. துரதிஷ்டமான நாட்கள் 6, 7, 8, 12, 13, 16, 17, 18 ஆகும்.

**தனுசு**
தனுசு ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 2, 3, 12, 13, 21, 22, 29, 30, 31. துரதிஷ்டமான நாட்கள் 9, 10, 14, 15, 16, 19, 20 ஆகும்.

**மகரம்**
மகர ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 4, 5, 6, 14, 15, 23, 24, 31. துரதிஷ்டமான நாட்கள் 11, 12, 23, 17, 18, 21, 22 ஆகும்.

**கும்பம்**
கும்ப ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 6, 7, 8, 17, 18, 25, 26. துரதிஷ்டமான நாட்கள் 14, 15, 19, 20, 23, 24 ஆகும்.

**மீனம்**
மீன ராசி உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான நாட்கள் 9, 10, 11, 19, 27, 28. துரதிஷ்டமான நாட்கள் 16, 17, 18, 21, 22, 25, 26 ஆகும்.

## வரலாற்றில் இன்றைய தினம்



972-செடினியாப் போர் போலந்துப் படைகளால் வெற்றி கொள்ளப்பட்ட, ஆவணப்படுத்தப்பட்ட முதலாவது போர் ஆகும்.

1509-எட்டாம் ஹென்றியும் கதரீனும் இங்கிலாந்தின் அரச, அரசியாக முடிசூட்டப்பட்டனர்.

1717-கற்களை அடுக்கிக் கட்டப்படும் மேசனிக் முறையில் முதன் முதலான இங்கிலாந்தின் பிரிமியர் கிரான் விடுதி கட்டப்பட்டது.

1793-பிரான்சில் முதலாவது குடியரசின் அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1812 -நெப்போலியனின் மிகப்பெரிய இராணுவப் படை ஜேர்மன் ஆற்றைக்கடந்து ரஷ்யாவினுள் புகத் தொடங்கியது.

1821-கரபோபோ போர் இடம்பெற்றது ஸ்பெய்னிடமிருந்து வெனிசுலா சுதந்திரம் பெறும் ஒரு தீர்க்கமான போராக இது அமைந்திருந்தது.

1880-“ஓ கனடா” பாடலின் முதலாவது ஆற்றுகை இடம் பெற்றது. பின்னாளில் இது கனடாவின் தேசிய கீதமானது.

1894 -பிரான்சின் அரசதலைவர் மாரி பிறான் கோயிஸ் சடிகர்நொட் இத்தாலியரான சான்ரி ஜெறோம்மா கசெரிக் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1913 -பல்கேரியாவுடனான கூட்டிலிருந்து கிரேக்கமும், சேர்பியாவும் விலகின.

1916-ஒரு மில்லியன் டொலர் ஒப்பந்தம் பெற்ற முதலாவது பெண் திரைப்பட நடிகை யானார் மேரி பிக்போட்.

1918-கனடாவில் முதலாவது விமானத் தபால் சேவை மொன்றியேலிலிருந்து ரொறன்ரோவுக்கு மேற்கொள்ளப்பட்டது.

1938-பெனிஸ்ல்வேனியா சிகோராவில் 450 மெற்றிக் தொன் கொண்ட விண்கல்லின் பாகம், வளிமண்டலத்தில் வெடித்து வீழ்ந்தது.

1939-கியாம், தாய்லாந்து என மீளப் பெயர் சூட்டப்பட்டது. இது நாட்டின் மூன்றாவது பிரதமர் பிளீக் பிபன்சன் கிறாமல் மேற்கொள்ளப் பட்டது.

1948-கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளிடையேயான தரைப் பயணத்தை சோவியத் யூனியன் தடைசெய்தது.

1950-தென் ஆபிரிக்காவில், முறைப்படி இனங்களை வேறுபடுத்தும் குறூப் ஏரியா சட்டம் நடைமுறைக்கு வந்தது.

1990-40 ஆயிரம் தமிழ் அகதிகள் மடுப்பகுதியில் பரிதவிப்பு.

1990-வவுனியா மருத்துவமனை மூடப்பட்டு நெடுங்கேணியில் இயங்க ஆரம்பித்தது.

1992-தமிழக முகாம்களில 80 ஆயிரம் ஈழ அகதிகள் எனத் தெரிவிப்பு.

2004-ஈராக் இடைக்கால தலைமை அமைச்சருக்கு அல்கொய்தா கொலை மிரட்டல்.

**நாளை**

**ஆனி - 11**
ஞாயிற்றுக்கிழமை -25.06.2017
திதி: பிரதமை கா. 06.57 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் பி.இ. 03.11 வரை
சுபநேரம்:08.55-10.25 வரை
ராகுகாலம்:04.25-05.55 வரை

# எவரிடம் சரணடையப் போகின்றார் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன்?

வடக்கு மாகாணசபையின் அடுத்த முதலமைச்சரைத் தெரிவு செய்வது தொடர்பான கருத்தாடல்கள் இப்போதே இடம்பெற ஆரம்பித்துவிட்டன. அண்மையில் வடக்கு முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பெரும் குழப்பநிலை வடபகுதியில் காணப்பட்டது. வடக்கில் புதிய தொரு அரசியல் சக்தி உருவாகியுள்ளதாகச் சிலரால் அப்போது தெரிவிக்கப்பட்டது. அதேவேளை சி.வி. விக்னேஸ்வரனுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. அவரே தமிழர்களின் அடுத்த தலைவர் என்ற கோசங்களுக்கும் குறைவிருக்கவில்லை. சிலரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட விக்னேஸ்வரனுக்கு ஆதரவான செயற்பாடுகளையெல்லாம் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூற முடியாது. ஏனென்றால் ஒரு சிறிய அளவிலான மக்கள் கூட்டத்தினரே இவற்றில் ஈடுபட்டனர் விக்னேஸ்வரனும் இவற்றைக் கண்டு நெகிழ்ந்து போனார். மக்கள்தான் எனது பலம், நான் இனிமேல் எவருக்குமே அஞ்சமாட்டேன் என அவர் பகிரங்கமாகக் கூறும் அளவுக்குச் சிலர் அவரை மாற்றி விட்டனர் என்றே கூற வேண்டும். ஆனால் உண்மைகள் சிலவற்றை அவர் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் வேடிக்கையாகவுள்ளது.

அண்மையில் முதலமைச்சருக்கு ஆதரவாகத் திரண்ட கூட்டம் முழுக்க முழுக்க அவருக்குச் சார்பானது என்று கூறிவிட முடியாது தமிழரசுக் கட்சிக்கும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருக்கும் எதிரானவர்களையும், தமது சுயநலத்துக்காக முதலமைச்சரைத் துதிபாடியவர்களையும் அங்கு பெருமளவில் காண முடிந்தது இவர்கள் தொடர்ந்து விக்னேஸ்வரனுக்குத் தமது ஆதரவைத் தெரிப்பார்கள் என ஒருபோதுமே கூறிவிட முடியாது இது இப்போது நிதர்சனமாகியுள்ளது.

இதுவரையும் விக்னேஸ்வரன் பக்கம் சாய்ந்து நின்ற கூட்டமைப்பின் ஒரு பங்காளிக்கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். இனர் அடுத்த தடவையும் விக்னேஸ்வரன் வடக்கின் முதல்வராக வருவதைத் தாம் விரும்பவில்லையெனத் தெரிவித்துள்ளனர்.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்தார். தமிழரசுக் கட்சி இனிமேல் எந்த வகையிலும் விக்னேஸ்வரனை ஆதரிக்க மாட்டாது என்பது அனைவரும் தெரிந்த விடயம். கூட்டமைப்பின் ஏனைய பங்காளிகளான ரெலோவும், புளட்டும் கூட்டமைப்பை உடைத்து விடுவதற்கு ஒருபோதுமே விரும்ப மாட்டாதென்பது ஏற்கனவே தெரிந்த செய்தியாகும். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இதை ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

இந்த நிலையில் விக்னேஸ்வரன் தமது தலைமைத்துவக் கனவை நனவாக்குவதற்கு வேறு எவரிடம் சரணடையப் போகின்றார்? என்பதுதான் இன்றைய பிரதான கேள்வியாக எழுந்து நிற்கின்றது.

புதுசா வீடு தேடும் போது சேப்டி இருக்கான்னு பாக்குறவன் மனுசன்...



அக்கம் பக்கத்துல ஏதாவது scooty இருக்கானு பாக்குறவன் பெரிய மனுசன்...

எவ்வளவு மிதி வாங்கினாலும்...



என்கூடவே சுற்றுகிறது என் சைக்கிள்...

உடல்நிலை சரியில்லை என்றால் வசதி படைத்தவர்கள் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள்...



வசதி இல்லாதவர்கள் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்கிறார்கள்!



# தமிழ் பெண்ணாக நடிகை ஹன்சிகா

பொலிவுட்டில் குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்து, பின்னர் தனுஷின் ஜோடியாக மாப்பிள்ளை படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை ஹன்சிகா மோத்வானி.

தன் அழகாலும் தோற்றத்தாலும், அடுத்த குஷ்பூ என அவர் வர்ணிக்கப்பட்டவர். தனுஷ், சூர்யா, ஜெயம்ரவி, கார்த்தி, விஷால், ஆர்யா என இளம் நடிகர்களுடன் நடித்து முன்னணி நடிகையாக தமிழ் சினிமாவில் ஹன்சிகா வலம் வருகிறார்.

தற்பொழுது தமிழில் கைவசம் நிறைய படங்கள் இல்லாத காரணத்தால், இருக்கும் சில படங்களில் நன்றாக நடித்து தனது இடத்தை நிலைப்படுத்த வேண்டும் என பல முயற்சிகளையும் அவர் செய்து வருகிறார். அதன் ஒரு பகுதியாகத் தமிழை சரளமாக பேசக் கற்று வருகிறார்.

நடிகர் சசிகுமாருக்கு ஜோடியாக கொடிவீரன் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார் ஹன்சிகா. இது வரையில் இல்லாத அளவுக்கு இந்த படத்துக்காக ஹன்சிகா 10 கிலோ வரை எடை குறைத்துள்ளார். அதோடு மதுரைப் பெண்ணாக நடிப்பதால் ஒரு மதுரைப் பெண்ணை வைத்து அதற்காக பயிற்சியையும் அவர் மேற்கொண்டு வருகிறார். இதை பார்த்து பொலிவுட்டே ஆச்சரியத்தில் இருப்பதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆளைப் பார்த்து எடை போடக் கூடாது...
பெரிய வெங்காயம் கிலோ 100
சின்ன வெங்காயம் கிலோ 250



இதைச் சொன்னா நம்மள ஒரு மாதிரிப் பாக்குறாங்க...

அமீர் @ameerfaj · 5h
கண்ணீரை மறைத்து
போலியாக சிரித்து
கொடிய தருணத்தை ஒவ்வொருவரும்
கடந்திருப்பர்...



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சுய நலத்துடன் சிலர் உதவி செய்ய முன்வருவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**இடபம்**: முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். பண வரவை விட செலவு அதிகரிக்கும். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடுகிற சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணக்கடனைச் செலுத்துவீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும். பிள்ளையை கண்டிப்பதில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** சொந்த பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய விடா முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பலனை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமையளிக்கும்.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். நண்பரால் உதவி உண்டு. பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**மீனம்:** பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். உடல்நலனுக்காக மருந்து சிகிச்சை தேவைப்படலாம்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 5 | | | | 6 |
| 9 | 2 | | 6 | | | | | 7 |
| 6 | | | 9 | | | | 3 | 1 |
| | | 2 | 8 | | 6 | | | 4 |
| | 9 | | | 1 | | | 6 | |
| 8 | | | | | 3 | 1 | | |
| 4 | 3 | | | | 9 | | 1 | |
| 2 | | | | | 4 | | 7 | 5 |
| | | | | 2 | | 6 | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 9 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 | 7 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 | 2 |

வேண்டாம்னு
போற
உறவுகளை
இடைஞ்சல்
செய்யாதீர்கள்...
பிரிவில்
உங்கள்
நினைவுகள்
நிழலாடுவதை
உணர்ந்தால்
தேடி வரட்டும்
வெறுத்தால்
விலகி
செல்லட்டும்...

# தொட்டில் பழக்கம்...


பீர்பால், அரசர் அக்பரின் நெருங்கிய நண்பர். மிகுந்த புத்தி சாலியும் கூட. பீர்பால் ஒரு நாள் அரசரைக் காண்பதற்கு அரண்மனைக்குப் புறப்பட்டார். அவரது ஐந்து வயது நிரம்பிய மகளும் அவருடன் அரண்மனை செல்ல அடம் பிடித்தாள். அவளோ சரியான குறும்புக்காரப் பெண். சுட்டித்தனம் கூடியவள். அரண்மனையில் அரசன் முன் அவள் குளப்படிகள் செய்து விடுவாள் என நினைத்து பீர்பால் கூடியவரை அவளை அங்கு அழைத்துச் செல்வதை விரும்பவில்லை. இறுதியாக அவர் மனைவியின் பரிந்துரையில் அவளை அழைத்துச் செல்ல சம்மதித்தார். தன் மகளோ இதுவரை அரண்மனைப் பக்கம் சென்றதில்லை; அரசரையும் பார்த்ததில்லை. அங்கு என்ன நடக்கப் போகிறதோ என்று சிந்தித்தபடி பீர்பால் அரண்மனையை அடைந்தார்.

அரண் மனைக்குள் அடி எடுத்து வைத்ததும் பீர்பால் அரசரை வணங்கினார். அவரின் மகளும் தந்தை வணங்கியதைப் போன்று அரசரை வணங்கி விட்டு அமைதியாக தனது தந்தையின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

அரசர் சிறுமியை மிகப் பிரியத்தோடு தன் அருகில் அழைத்தார். பீர்பால் யோசித்தார். அவள் துடிதுடிப்பான பெண்; அரசரது பெரிய தடித்த மீசையை இழுத்துப் பார்த்து விடுவாளோ எனப் பயந்தார். அப்படி எதுவும் நடக்கவில்லை. சிறுமி அரசர் அருகில் சென்றாள். "குழந்தாய் ஏதேனும் பேச முடியுமா உன்னால்"? என்றார். சிறுமி மௌனமாக நின்றாள். மறுபடியும் அரசர் "குழந்தாய் நீ ஏதாவது பேசுவாயா? என்றார். சிறுமி 'அரசரே, என்னை மன்னியுங்கள். நான் இப்போது குழந்தை இல்லை" என்றாள் பணிவாக. அரசர் ஆச்சரியமடைந்தார். சரி நீ குழந்தையில்லை. அப்படியானால் நீ யார்? என்று வினவினார். "நான் இதோ நிற்கிறாரே என் அப்பா. இவரின் மகள்" என்னைச் சிறுமி என்றே கூறுவார்கள்" என்றாள். அரசர் தொடர்ந்தார். சரி என் முன் நிற்கும் சிறுமி பேசுவாரா? என்றார் மரியாதையுடன். ஓ... நான் நிறையவும் பேசுவேன். குறையவும் பேசுவேன்" என்றாள் சிறுமி. சரி... குறையவும் நிறையவும் என்றால் என்ன அர்த்தம்? அரசர் மீண்டும் வினவினார். பீர்பால் நடப்பதையெல்லாம் அதிசயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார். சிறுமியோ "குறைவாகப் பேசுதல் என்றால் பெரியோர் முன் நாம் குறைவாகப் பேச வேண்டும்; என்னோடு ஒத்த சிறுமிகளிடம் நிறையப் பேச வேண்டும்" என்றாள். அரசர் தனக்குள் வியந்த படி" ஏன் பெரியோரிடம் குறையப் பேச வேண்டும் கூறு பார்க்கலாம்?" என்றார். "பெரியவர்கள் நிறைய காலம் வாழ்ந்து வருபவர்கள். அதனால்நல்ல அறிவுரைகள் கூறுவார்கள். அவர்களிடம் நாம் குறைவாகப் பேசினால்தான் அவர்கள் கூறும் அறிவுரைகளை காதால் நிறைய கவனமாகக் கேட்க முடியும்" என்றாள். அரசர் சிறுமியைக் கட்டிமுத்தமிட்டு "புத்திசாலிப் பெண். புலிக்குப் பிறந்தது பூனையாகாதே! தந்தையைப் போல் மகளும்" என்று இருவரையும புகழ்ந்து பாராட்டியதோடு சிறுமிக்கு பரிசுகளும் அளித்து மகிழ்ந்தார்.



**பிள்ளைகள் சிறுவராக இருக்கையிலேயே பெற்றோர் நற்பழக்கங்களையும் நல்ல அறிவுரைகளையும் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். பெற்றோரும் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும்.**



# நான் விரும்பும் பெரியார்

- நான் விரும்பும் பெரியார் சுப்பிரமணிய பாரதியார்
- இவர் தமிழ் நாட்டில் எட்டைய புரத்தில் பிறந்தவர்.
- இவர் முறுக்கு மீசைக்காரர். தலையில் எப்போதும் தலைப்பாகை அணிந்திருப்பார்.
- இவரது நடையிலும் பேச்சிலும் வீரம் துள்ளும்.
- இவர் சிறந்த ஒரு புரட்சிக் கவிஞர்
- இவரது பாடல்களில் புரட்சிக் கருத்துக்கள் உச்சமாக இருக்கும்.
- சோம்பேறிகளையும் இவரது பாட்டுக்கள் சுறுசுறுப்பாக்கும்.
- இந்திய மக்களுக்கு தன் பாட்டுத் திறத்தாலே சுதந்திரதாகத்தை ஊட்டியவர்.
- ஓடி விளையாடு பாப்பா எனப் பாடி சிறுவர்களுக்கெல்லாம் விளையாட்டை முதன்மைப்படுத்தியவர்.
- சோம்பல் மிகக் கெடுதி என்று அறிவுரை கூறியவர்.
- தமிழ் மொழியை விட இனிதான மொழி வேறில்லை என்றவர்.
- நிலை கெட்டுப் போன மாந்தரை எண்ணி நெஞ்சு பொறுக்குதில்லையே எனப்பாடியவர்.
- பண்டிதருக்கே உரித்தான தென்ற தமிழைப் பாமர மக்களும் அறியச் செய்தவர்.
- மானிடரின் சாதி வேறுபாடுகளை நீக்க சாதிகள் இல்லையடி பாப்பா எனப் பாடியவர்.
- இவர் அன்னை பராசக்தியில் மிகுந்த பற்றுள்ளவர்.
- இவர் கண்ணன் பாட்டு. குயில் பாட்டு பாப்பாப் பாட்டுக்கள் பலவற்றையும் சுதந்திர எழுச்சிப் பாடல்களையும் பாடியுள்ளார்.
- இவர் ஔவையாரைப் பின்பற்றி காலத்துக்கு ஏற்றதான புதிய ஆத்திசூடியையும் பாடியுள்ளார்.
- இவர் வாழும் போதே வாழ்த்தாத சமூகத்தில் வாழ்ந்து போன உலக மகா கவி.

# இளமை தரும் மூலிகைகள்

மெக்சிக்கோவில் பல ஆண்டுகள் தங்கி அங்குள்ள மூலிகைகள் பற்றி ஆராய்ந்த கார்லோஸ் காஸ்டனெட்ஸ் என்பவர் எழுதியுள்ள ஒரு நூலில் தான், கண்டு பழகிய மூலிகைகள் பற்றிய சுவையான விவரங்களைத் தந்துள்ளார். அதன்படி சில தாவரங்களின் சாற்றை அருந்தினால் உடனடியாக உடலை விட்டு ஆவி பிரிந்து விடுமாம். சில தாவரங்களை உட்கொள்பவர்கள் முதுமையானவராயின் இளமையானவராகவும், இளமையானவராயின் மேலும் ஆண்மைத் திறன் உடையவராயும் ஆவார்கள். சில தாவரங்களை மாலையில் உண்டால் சுற்றுப் புறங்கள் யாவும் ஒளி மயமாகத் தோன்றுமாம்.

இரவில் அவர் பயணம் செய்வதற்கு இந்த ஒளியே போதுமானது. விளக்குகள் தேவையில்லை. பண்டைக் காலத்தில் தாவரங்களின் இரகசியங்கள் அறிந்த தவயோகிகள் இந்தியாவில் வாழ்ந்திருக்கிறார்கள். பசி தெரியாதிருக்கவும், இமயமலைச் சாரலில் குளிர் தெரியாதிருக்கவும் அவர்கள் சில பச்சை இலைகளைப் புசித்து வந்திருக்கிறார்கள். தேனீக்கடி, பாம்புக் கடி விசங்களை அகற்றவும், காயங்களைக் குணப்படுத்தவும் திறன் வாய்ந்த மூலிகைகள் பல இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகி அங்கு அவை வேதியல் முறையில் உருமாறி புட்டிகளில் அடைக்கப்பட்டு புதுமையான மருத்துவப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு நம்மிடம் வருகின்றன. நமது மருத்துவர்கள் அவற்றைப் பரிந்துரை செய்கிறார்கள்.



# பின்வரும் உரையாடலை வாசிப்போம் பின்னர் விடை எழுதுவோம்

**தொலைபேசி மணி ஒலிக்கின்றது. வீட்டுச் சொந்தக்காரப் பெண் விடையளிக்கிறார்.**

- ★ ஹலோ யார் பேசுகிறீர்கள்?
- ★ அண்ணன் பேசுகிறேன். எங்கள் மகன் இன்று காலை அங்கு வந்தானா?
- ★ இல்லை வரவில்லை. குமார் நேற்று கோவிலில் அவனைச் சந்தித்தேன் எனக் கூறினான்.
- ★ தங்கை, இப்போது குமார் வீட்டில் இருக்கிறானா?
- ★ இல்லை... இன்று பிந்தி வருவேன் எனக் கூறினான். வேலை முடிந்து வரும்போது. பெரியப்பாவைப் பார்க்கச் செல்வேன் என்றும் கூறினான். ஏனென்றால் பெரியப்பா சுகவீன முற்றிருக்கிறார்.
- ★ என்ன சுகவீனம்?
- ★ காய்ச்சல்... ஒரு கிழமையாகிறது.
- ★ மருத்துவரிடம் மருந்து எடுக்கவில்லை யாமா?
- ★ மருந்து எடுத்ததாம். இன்னும் காய்ச்சல் குறையவில்லையாம்.
- ★ சரி.... குமார் வந்ததும் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு தரும்படி கூறுங்கள்.
- ★ சரி... நல்லது இரவு வந்தனம்.

I. இந்த தொலை பேசி உரையாடலில் எத்தனைபேர் தொடர்புபட்டுள்ளனர்?

......................................................................................

II. தொடர்புபட்டோரைக் குறிப்பிடுங்கள்?


......................................................................................

III. இவ் உரையாடல் குறித்த ஒரு நாளில் எந்த வேளையில் நடாத்தப்பட்டது?

......................................................................................



# குறுக்கெழுத்து புதிர்களுக்கு விடை காண்போம்




### இடமிருந்து வலம்

1. இதற்கு இறகுகள் உள்ளன.
4. வெளிச்சமும் காற்றும் தரும்; சுவரில் பொருத்தியிருக்கும்.
5. வாரத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள்.
6. சோற்றுடன் உண்பது.
7. கைது செய்யப்பட்டவர்.
8. பூக்களில் தேன் குடிக்கும்.

### மேலிருந்து கீழ்

1. அன்றாட செய்திகளை அறியலாம்.
2. உலகத்தின் ஒத்த கருத்துச் சொல்.
3. உணவை மென்று உண்ண உதவும்.
6. காட்சிகளை இதனால் காணலாம்.

**'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகம்**

புனித ஜோசப் வாஸ் ஆண்டை முன்னிட்டு திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'வாழ்வுதந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகம் நாளையும் மறுநாள் திங்கட்கிழமையும் மாலை 6.45 மணிக்கு இடம்பெறும். இல.238, முதன்மை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் அந்த நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (4-23)

## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) மற்றும் சபை நிதி (Council Fund) வேலைத்திட்டம் - 2017 மாநகர சபை யாழ்ப்பாணம்.

**23.06.2017 ஆம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் காட்டப்பட்ட 2 ஆவது என இலக்கமிடப் பட்ட பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி சேர்க்கப்படுகின்றது.**

**30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப் படுத்தப் பட்டுள்ளது.**

**அதே கேள்வி அறிவித்தலில் வேலை விவர அட்டவணை யின் 6 ஆவது நிரலில் கோரப்பட்ட கேள்விதாரரின் உரிய CIDA தரத்தில் எவரும் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே அதிலும் கூடிய CIDA தரத்தினைக் கொண்ட கேள்விதாரரின் கேள்விகளை கருத்தில் கொள்ளப்படும்.**

தலைவர் / ஆணையாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு.
மாநகர சபை யாழ்ப்பாணம். 24.06.2017

## விற்பனைக்கு


SHARP போட்டோ, கொப்பி மெசின்
A\C Inverter :-18000 BTU
A/C :-12000 BUT
தொடர்பு 077 917 7477, 077 895 2108

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

German Shepherd, Pomarenian நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 077 6701503, 077 4147463

# மரண அறிவித்தல்

## நடராசா குமரேசன்



ஐயனார் கோயில் ஒழுங்கை கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா குமரேசன் (23.06.2017) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நடராசா - கனகசுந்தரி தம்பதியரின் அன்பு மகனும் கமலாவதியின் அன்புக் கணவரும் குமரவல்லி, குமாரவேல் (ஆஸ்திரேலியா), குமாரதாஸ் (நெதர்லாண்ட்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் லலிதாகினி (கனடா), நிஷாந்தினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிந்துஜா (இலங்கை வங்கி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீபாலன் (கனடா), ஐங்கரன் (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), பவலக்ஷன் (British Council) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீனா, சியாரா, ராதுமி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 835 7220, 077 5170 178**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
**30.06.1930**

உதிர்வு
**28.06.2014**

**அமரர்**

## மயில்வாகனம் இராசரெத்தினம்

**திதி - பிரதமை**

எம் ஐயா எம்மைவிட்டு நீங்கி
நீண்டது மூன்றாண்டுகள்...
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை.

**24.06.2017 சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

84/5, தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சீவரத்தினம்



பிறப்பு 08.04.1949
இறப்பு 23.06.2017

குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சீவரத்தினம் நேற்று (23.06.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரவணமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசாத்தி, இரத்தினேஸ்வரி, அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோஜினிதேவியின் அன்புக்கணவரும் மதனிகா, மயூரன் ( இந்தியா) காலஞ்சென்ற ஆருரன் மற்றும் செந்தூரன் (குட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரகாஸ், மகிழினி ஆகியோரின் மாமனும் மோகனப்பிரியன், டிலக்சனா, டேவிற் அபிசேக், கெவின், ஜெனிபர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குமரகோட்டம், கோண்டாவில்.
மருமகன் (க. பிரகாஸ்)
077 2487 835, 077 9457 481

# மரண அறிவித்தல்

திருமதி

## பரமேஸ்வரி அம்மா சுப்ரமணியம் ஐயர்

பிறப்பு 26 . 07 . 1929



இறப்பு 23 . 06 . 2017

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அம்மா சுப்ரமணியம் ஐயர் நேற்று (23.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு .ஆ. சுப்ரமணியம் ஐயரின் (இலிகிதர் சுகாதாரத் திணைக்களம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் ஐயா பரிபூரணம் அம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற ஆங்கில ஆசிரியர் சிவசங்கரன் , கேதீஸ்வரநாதன் ,கமலாதேவி ,நல்லைநாதன், ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வாஸஸ்தலத்தில் நாளை (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று . நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவஞானப்பிள்ளையார் கோயில் லேன், கல்வியங்காடு.**

தகவல்
**குடும்பத்தினர்.**
**077 423 9887**

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி செல்வராஜா



**செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி செல்வராஜா நேற்று (23.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடேசன்-வள்ளிம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ராஜேந்திரா, கெங்காதரணி (நூலகர், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அஜந்தாவின் அன்பு மாமியாரும் ஹறிஸ்ராகவ், ஹறிஸ்ஆதவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செல்வராசா, அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பூங்கோதை மற்றும் அன்னபூரணம்,சரஸ்வதி, மனோன்மணி, புவனேஸ்வரி, தேவராணி, யோதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
செ. ராஜேந்திரா (மகன்)

**077 396 1163**

## ஐரோப்பிய STUDENT விசா

*Medicine *Engineering *Business Management
* Language Studies * Hospitality & Tourism
*IT & many more...

- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI
No. 44, Vajira Road, Colombo - 04
email : eurounilk@gmail.com
Phone - 077 4796 483

## திருமண சேவை

உங்கள் மனசுக்கு பிடித்த வாழ்கை துணையைகாளிஅம்மன்துணையுடன் நாம் தேடித்தருகின்றோம். வெளிநாடு உள்நாடு டொக்டர், இஞ்சினியர் மண மக்கள் உண்டு. தொடர்பு இலக்கம்
0779464287 +Viber
லண்டன். கொலண்ட். பிரான்ஸ். பெல்ஜியம். தற்சமயம் மணமக்கள் வருகை தந்துள்ளனர்.
பெற்றோர் உரித்துடையோர் தொடர்பு கொள்ளவும்.

## ஆதவன் திருமண தகவல் மையம் திறப்பு விழா

25.06.2017 அன்றைய தினம் மூன்றாம் கட்டை, கல்வியங்காட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆதவன் திருமண தகவல் மையத்தில் உங்கள் பிள்ளைகளின் வாழ்வு பிரகாசிக்க பதிவுகளை மேற்கொள்ளவும். அன்றையதினம் பதிவுகள் முற்றிலும் இலவசம்.

தொடர்புகளுக்கு - 021 223 1364

## மாநகரசபை ,யாழ்ப்பாணம்

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டம்.**

வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2017.03.24 ஆம் திகதிய 2011 \ 25 இலக்க , இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தகமானியின் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட , அத்தியாயம் 1-6 வரையான வடக்கு மாகாண மாநகரசபைகளுக்கான நியமத்துணைவிதிகள் ஏற்றுக்கொள்வது என்றும் மாநகர சபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்து என்றும் யாழ்ப்பாணம் மாநகர சபையால் 2024 ஆம் இலக்கம் 2017.06.16 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்டதற்கு அமைவாக,யாழ்ப்பாணம் மாநகர சபை பொதுமக்கள் சேவையினை வழங்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

அத்துடன் குறித்த நியமத்துணை விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 1989.01.20 ஆம் திகதிய 541 \ 17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை,யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ



மண்ணில் 18.02.1944
விண்ணில் 05.07.2016

அமரர்
**லெ. கெங்காதரன் ஆச்சாரி**
(உலோகத்தொழிலதிபர் (U.N.A)
உலோக்கலைமாமணி உலோகத்தொழில் விற்பன்னர் (ROTARY IN) கலாபூஷணம்.
உலோகத்தொழில் நிபுணர்
மரபுக்கலைச்சுடர். யாழ். ரத்னா.
ஆளுநர் விருது)

திதி – பிரதமை

கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலங்கள்
எங்களது துயரத்துடன் மறைந்த
உங்களைப்பிரிந்த ஓராண்டு
எம் வாழ்வும் மீண்டும் மிளிர்ந்திட வாராயோ
எம்மிடையே அப்பா

314, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
நினைவுகளுடன் குடும்பத்தினர்
077 248 7843

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

கணக்காளர்
சிட்டைஎழுதுனர்
கனரகவாகனசாரதி

தொடர்பு,0779837175,0777111666

## வேலையாள்கள் தேவை

பேபி போட்டோ. நிறுவனத்துக்குப் புகைப்பட தொழில் பயிலுநர் தேவ்வ.
வயது 17 - 18.
ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

**பேபி போட்டோ**
**243, பலாலி வீதி, கந்தர்மடம்**

## வேலை வாய்ப்பு

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு

- விற்பனையாளர்
- காசாளர்.
- கணக்காளர்
- சிட்டை எழுதுநர்
- உதவியாளர் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

076 851 4296

## இரண்டாம் ஆண்டு நினைவு

**கட்டையன் சின்னத்தம்பி**

தோற்றம் 06.05.1931
மறைவு 17.06.2015



நினைவுகளுடன் நீள்கின்ற
நாள்களுக்குள்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டாண்டுகள் சென்றிடினும்
ஆறவில்லை ஐயா
எம் துயர் என்றும்
உங்கள் நினைவுகளுடன்
ஏது செய்வது என்று தெரியாமல்
தவிக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**குடும்பத்தினர்.**
**புதிய செம்மணி வீதி,கல்வியங்காடு.**

## கேள்வி கோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல. 04/2016(i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2233, 021 222 2234 நீடிப்பு 122, 111) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை **மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 24.06.2017 முதல் 14.07.2017 வரை அலுவலக நாட்களில் 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

6. கேள்விகள் 17.07.2017 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

7. கேள்வி தொடர்பான முன்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 07.07.2017 அன்று காலை 10:30 மணிக்கு நடைபெறும்.

8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விபரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/IND/Tour.Mavid./IX/10/2017 | மாவிட்டபுரம் யாத்திரிகர் ஓய்வு மண்டபம் அமைத்தல் | 4.250 | 1,500.00 | C6, C7 & C8 | 42,500.00 | 13.11.2017 | 90 நாட்கள் |
| 02 | JF/ADM/CON.WORK/KARAVEDDY-1/11/02/2017 | கரவெட்டி பிரதேச செயலக மேலதிக நிர்வாகக் கட்டட நிர்மாணம் கட்டம் - I | 11.600 | 4,000.00 | C6 & C5 | 200,000.00 | 13.11.2017 | 120 நாட்கள் |
| 03 | JF/DPS/ONUR/EEP/IV/23/2017 | பொலிகண்டி கிராமிய சுகாதார நிலையம் அமைத்தல் - பருத்தித்துறை | 4.207 | 1,500.00 | C6, C7 & C8 | 42,500.00 | 13.11.2017 | 90 நாட்கள் |

**நா. வேதநாயகன்,**
அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 . 07 . 1974
இறப்பு 05 . 07 . 2016



அமரர் **பண்டா இராசவேல்**
திதி: பிரதமை

நீங்கள் பறந்து போய்
ஆண்டு ஒன்று அசைந்த போதும்
அழியாத ஓவியமாய்-என்றும்
எம் நெஞ்சில் நீங்கள் .......

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவில்....
37/26, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, அன்னசத்திரலேன்.
குடும்பத்தினர்.

## சிவசக்தி ஆனந்தன்...

உறுப்பினர்கள் பலர் அவர் அப்படித் தெரிவித்தார் என்பதை உதயன் பத்திரிகையிடம் நேற்று மீண்டும் உறுதிப்படுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக உதயன் தனது நேற்றைய பதிப்பில் செய்தி வெளியிட்டிருந்தது. அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அனுப்பி வைத்துள்ள விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணசபை விவகாரம் ஒரு வழியாக முடிவுக்கு வந்ததன் பின்னர், 22.06.2017 அன்று காலை 10.30 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு மாகாணசபை குழப்பம் தொடர்பாகவும் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்திருந்தார். மாவை.சேனாதிராசாவும் தனது விளக்கத்தைத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் நான் எனது விளக்கத்தைப் பின்வருமாறு முன்வைத்தேன்.

மாகாண சபைத் தேர்தல் முடிந்தவுடன் பம்பலப்பிட்டியில் அமைந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரியாலயத்தில் முதலமைச்சர் மற்றும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் கலந்து கொண்டிருந்த கூட்டத்தில் மாகாண சபையை வழி நடத்துவதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று நானும் எமது கட்சியின் தலைவரும் வலியுறுத்தினோம். பல்வேறு வாதப்பிரதிவாதங்களின் பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் குழு ஒரு முறைகூட கூடவில்லை.

மாகாண சபையின் முதல் ஒன்றரை வருடங்கள் உங்களது வழிகாட்டலின்படியே முதலமைச்சர் செயற்பட்டார். அப்பொழுது உங்களுக்கு முதல்வர் நல்லவராகத் தெரிந்தார். உங்களது பிழையான இராஜதந்திர அணுகுமுறையும் கள யதார்த்தமும் முதல்வரை மக்கள் நலன்சார்ந்து செயற்படத் தூண்டியிருந்தது. இதனால் உங்களுக்கும் முதல்வருக்கும் இடையில் இடைவெளி அதிகமாகியது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியால் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பிரச்சினை கடந்த ஓராண்டிற்கும் மேலாக நீடித்திருந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர் என்ற நிலையில் நீங்கள் இதனைச் சரியாக அணுகவில்லை. இந்தக் குற்றச்சாட்டை உரிய முறையில் அணுகி, அமைச்சர்களை மாற்றியிருந்தால் மாகாண சபையின் பிரச்சினை இவ்வளவுதூரம் வந்திருக்காது.

புளொட் அலுவலகத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நான்கு அமைச்சர்களையும் மாற்றி சுழற்சி அடிப்படையில் ஏனைய நால்வருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் உட்பட பதினாறு மாகாணசபை உறுப்பினர்களும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தனர். அன்று அவ்வாறு செய்திருந்தால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது.

கடந்த ஓராண்டு காலமாகவே அமைச்சர்கள் தொடர்பாக ஊழல் மோசடிகளும் குற்றச் சாட்டுகளும் ஊடகங்களின் வாயிலாக முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதல்வர் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். அந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டபோது நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னரும் நீங்கள் தலையிட்டு அந்த அறிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதனையும் நீங்கள் செய்யவில்லை. இதனால் முதலமைச்சர் சபையின் மாண்பையும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் தக்க வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அமைச்சர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் அதற்கு ஆதரவானவர்களாகவும் இருந்ததால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கையைக் கைவிடுவதற்கும் இதற்காக முதலமைச்சரை நீக்குவதற்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தீர்கள். மக்கள் செல்வாக்கும், ஈ.பி.ஆர்.எல்எவ், ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் ஆதரவும் முதலமைச்சருக்கு இருந்ததாலும் முதலமைச்சரின் பக்கம் நியாயம் இருந்ததாலும் வேறுவழியின்றி உங்கள் நடவடிக்கையிலிருந்து நீங்கள் பின்வாங்கினீர்கள்.

பிரச்சினை சூடுபிடிக்கத் தொடங்கியதும் இரண்டாம் நாள் நான் உங்களிடம் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் நீங்கள் அன்று நேரம் இல்லையென்றும் அடுத்த இரண்டு தினங்கள் கழித்து கொழும்பில் சந்திக்கலாம் என்றும் கூறி கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்குமாறு என்னிடம் தெரிவித்திருந்தீர்கள். இது தொடர்பாக நான் மாவை அண்ணனைத் தொடர்பு கொண்டபோது அவர், "நான் இப்பொழுது ஆளுநர் அலுவலகத்தில் இருக்கிறேன். நீங்கள் சம்பந்தருடன் கதைத்துவிட்டீர்கள்தானே! அதுவே போதுமானது' என்று சொல்லி தொலைபேசியைத் துண்டித்துவிட்டார். பின்னர் அழைக்கவில்லை. ஏனையவர்களுடனும் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஒரு வழியாக புளொட் கட்சியைச் சேர்ந்த முக்கியமான ஒருவரிடம் கூட்டம் பற்றிய தகவலைத் தெரிவித்தேன். இப்படி ஒரு இக்கட்டான நேரத்தில் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்காக அழைப்பு விடுக்கப்பட்டபோதும் உங்களால் உரியவகையில் செயலாற்ற முடியாமல் போயிருந்தது.

இந்த நிலையில், முதலமைச்சருக்கு ஆதரவாக பங்காளிக் கட்சிகளும், நியாயத்தின் பக்கம் நின்ற மாகாணசபை உறுப்பினர்களும் அணி திரண்டிருந்தனர். நாங்கள் தலையிடாமல் இருந்திருந்தால் நிலைமை மிகவும் மோசமாகிப் போயிருக்கும்.

நாம் கூடிப் பேசியிருந்தால் பிரச்சினையை சுமுகமாக முடித்திருக்க முடியும். இறுதியில் பங்காளிக் கட்சிகள் மதத்தலைவர்கள் ஆகியோரின் முயற்சியாலேயே வடக்கு மாகாண சபையின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரமுடிந்திருந்தது. கூட்டமைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற குறுகிய சிந்தனையே இவ்வளவு பிரச்சினைகளுக்கும் காரணம் என்று எனது விளக்கத்தை முன்வைத்தேன்.

இதன்போது என்னையும் சேர்த்து பன்னிரண்டு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரும் இடைநடுவில் பேசவில்லை. எனது உரையைத் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது நான் வைத்த விமர்சனங்களை ஏற்றுக்கொண்டார். அடுத்தமுறை மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் விக்னேஸ்வரனை வேட்பாளராகத் தெரிவு செய்யாவிட்டால் நீங்கள் போராட்டம் நடத்துவீர்கள். நீங்கள் மூவரும் இணைந்து அவருக்கு ஆதரவளிப்பீர்கள் என்று தெரிவித்தார். ஆம் இந்தமுறை நீங்கள் அறிமுகம் செய்த விக்னேஸ்வரனை அடுத்த முறையும் நாம் ஆதரிப்போம் என்று பதிலளித்தேன்.

தமிழரசுக் கட்சியின் மீதும் கூட்டமைப்பின் தலைவர் மீதும் எம்.ஏ.சுமந்திரன் மீதும் நான் வைத்த விமர்சனங்களை எம்.ஏ.சுமந்திரன் ஏற்றுக் கொண்டதுபோலவே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களும் ஏற்பதாகக் கூறினார்.

உண்மை இவ்வாறிருக்கையில், உதயன் பத்திரிகை 'அடுத்த முறையும் விக்கி சி.எம் மாக ஈபிஆர்எல்எப் எதிர்ப்பு' என்று 23.06.2017 அன்றைய நாளிதழில் முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி தொடர்பாக என்னைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் நான் பதிலளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

என்னைத் தொடர்புகொள்ள முயற்சித்ததாகத் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. செய்தி நாடாளுமன்றக் குழுக் கூட்டம் தொடர்பானது. என்னைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டறிந்து கொண்டிருக்கமுடியும். இதில் மற்றொரு சிறப்பம்சம் அந்தப் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரான ஈ.சரவணபவன் நான் உரையாற்றியபோது கூட்டத்தில் சமுகமளித்திருந்தார். அவரிடம் கேட்டாவது செய்தியை உறுதிப்படுத்தியிருக்க முடியும். மேலும் செய்தியைக் கொடுத்தவர் யார் என்பது குறித்து எத்தகைய தகவலும் வெளியிடப்படவில்லை. இதன் மூலம் செய்தியின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகிறது.

அறிந்தோ அறியாமலோ உதயன் பத்திரிகை ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது. இதுவரை காலமும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்ட விவரங்களை ஈபிஆர் எல்எப்தான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கிறது என்ற குற்றச்சாட்டு எம் மீது சுமத்தப்பட்டிருந்தது. இன்று உதயன் அவசர அவசரமாக ஒரு பிழையான செய்தியை வெளியிட்டதன் மூலம் அந்தக் கருமத்தைத் தானே செய்து வந்துள்ளமை நிரூபணமாகியுள்ளது. பொதுவாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் விடயங்களை பத்திரிகைகளுக்குத் தெரிவிப்பதில்லை என்பது மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

எப்பொழுது தமிழரசுக் கட்சி தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்கியதோ அன்றிலிருந்து யாராவது ஒருவர் செய்திகளை முந்திக்கொண்டு ஊடகங்களுக்குத் தெரிவிப்பது தொடர்கிறது. இந்த விடயத்திலும் நாம் உட்கட்சி விவகாரத்தை கட்சிக்குள்ளேயே தீர்ப்பதற்கு முயற்சித்தோம்.

உதயன் தவறான செய்தியை வெளியிட்டதன் விளைவாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கியமான விடயங்களை ஊடகத்துக்கும் அதன் வாயிலாக மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது என்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

(அ) வெளியிடப்பட்ட செய்தி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறுவது முற்றிலும் பொய் என்பதை உதயன் நேற்று மீண்டும் உறுதிப்படுத்தியது.

(ஆ) செய்தி வெளியிடப்படுவதற்கு முன்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டறிந்து கொண்டிருக்க முடியும் என்று சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருக்கிறார். ஆம், அப்படிக் கேட்டறிந்துகொண்ட செய்தியைத்தான் உதயன் வெளியிட்டது. ஒன்றல்ல மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர்தான் செய்தி வெளியிடப்பட்டது. அவர்களில் ஒருவர் தான் கூட்டத்தில் நடந்தவை பற்றி எதுவும் சொல்லமாட்டேன் என்றார். உதயன் அறிந்திருந்த விடயங்களை அவரிடம்கூறி இவ்வாறு கூட்டத்தில் பேசப்பட்டது உண்மையா என்பதை மட்டுமாவது உறுதிப்படுத்துங்கள் என்று கேட்டபோது, "ஆம்! அப்படித்தான் பேசப்பட்டது" என்று அவரும் உறுதிப்படுத்தினார்.

(இ) வெளியிடப்பட்ட செய்தியை மறுத்து சிவசக்தி ஆனந்தன் நேற்று விளக்கம் அனுப்பி வைத்த பின்னர் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கனளயும் தொடர்புகொண்டு உதயன் வினவியது. அவர்கள் அனைவருமே சிவசக்தி ஆனந்தன் அப்படித்தான் கூறினார் என்று உறுதிப்படுத்தினர். தனது விளக்க அறிக்கையில் அவர் கூறியிருப்பதைப் போல, "ஆம்! இந்த முறை நீங்கள் அறிமுகம் செய்த விக்னேஸ்வரனை அடுத்த முறையும் நாம் ஆதரிப்போம்" என்று அவர் கூறியிருப்பது முற்றிலும் பொய் என்று அவர்கள் கூறு கின்றார்கள். அதற்கு எதிரான கருத்தையே அவர் கூட்டத்தில் தெரிவித்தார் என்றும் அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

(ஈ) தற்போது தனது விளக்க அறிக்கையில் கூறப்பட்டிருப்பதன் சாராம்சத்தை சிவசக்தி ஆனந்தன் கூட்டத்தில் கூறினார் எனினும், அறிக்கையில் அவர் மேலதிகமான ஆலாபனைகள், இடைச் செருகல்கள், மெருகூட்டல்களைச் செய்திருக்கிறார் என்றும் அங்கே அவர் பயன்படுத்தியே இருக்காத சொற்கள் சிலவற்றை அரசியல் இலாபம் கருதி இந்த விளக்கத்தில் தான் கூறினார் எனத் தெரிவித்திருக்கிறார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(உ) முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான விடயத்தில் அவர் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது போன்றல்லாது அதற்கு நேர் எதிர்மாறாக, முதலமைச்சரை மீண்டும் தேர்தலில் நிறுத்தினால் தாம் ஆதரிக்கப்போவதில்லை என்றுதான் கூறினார் என்றும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் உதயன் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினர்.

(ஊ) உதயன் பத்திரிகைக்குத் தகவல் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பெயர் விவரங்களை வெளியிட விரும்பாததன் காரணத்தாலேயே அவை வெளியாகவில்லை. செய்தி மூலங்களைப் பாதுகாப்பது ஒரு பத்திரிகையின் கடமை. அதனைச் செய்வதால் பத்திரிகையின் நம்பகத்தன்மை ஒரு போதும் பாதிக்கப்படுவதில்லை.

(எ) நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் 0714347480 என்ற அலைபேசி எண்ணுக்கு, 22.06.2017 அன்று இரவு 10.10 தொடக்கம் 10.30 மணி வரையிலான நேர இடைவெளியில் உதயன் அலுவலகத் தொலைபேசி இலக்கமான 021 493 0000 இலிருந்து இரு தடவைகள் அழைப்பு எடுக்கப்பட்டது. பதிலளிக்கப்படவில்லை. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்வதற்காகவே அழைப்பு எடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அவர் பதிலளிக்கவில்லை. அதனையே செய்தியில் குறிப்பிட்டும் இருந்தோம்.

(ஏ) இறுதியாக, உதயன் எந்தத் தவறான செய்தியையும் வெளியிடவில்லை என்ற நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. (உ-5)

## அதிகாரங்களை...

நவ சமசமாஜக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. வடக்கு மாகாண சபையின் இந்தச் செயற்பாடு தொடர்பில் கவலை தெரிவித்த அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்ரமரட்ண, தென் மாகாண சபையும் இதுபோன்ற செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண தலைமையிலான நவ சமசமாஜக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

நவ சமசமாஜக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ணவும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சிவாஜிலிங்கம் போன்றோர் சில நேரம் தமிழ் மக்களின் சார்பில் இனவாதப் பேச்சுக்களை வெளியிடுகின்றனர். சில நேரம் இனவாதத்தைத் தூண்டும் கடினமான பேச்சுக்களையும் கூறுகின்றனர். அதில் ஒன்றையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடுநிலைத் தீர்மானத்துக்கு வந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அதனைத் தோற்கடிக்கும் நோக்கில் வடக்கில் சில இனவாதக் குழுக்கள் முயற்சித்து வருகின்றன. இது உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதே அவர்களின் நோக்கம். இதற்கு நாங்கள் முழுமையாக எதிர்ப்பை வெளியிடுகின்றோம். யாழ்ப்பாணத்துக்குச் சென்றும் இதற்கு எதிராக நான் பேசியுள்ளேன். இன்று வடக்கு இனவாதிகள் தென்னிலங்கை இனவாதிகளை பலப்படுத்துகின்ற அதேவேளை, தெற்கு இனவாதிகள், வடக்கு இனவாதிகளைஅ சக்திப்படுத்துகின்றனர்.

தென்மாகாண சபையும் தமக்கு உட்படாத சில பிரேரணைகளை நிறைவேற்றுகின்றது. வடக்கு மாகாண சபையிலும் இது இடம்பெறுகின்றது. வடக்கு மாகாண சபை குறித்து நாங்கள் கவலைப்படுகின்றோம்.ன கடந்த காலங்களில் அதிகாரங்களைச் சரிவர பயன்படுத்தாமல் விக்னேஸ்வரனின் தலைமைத்துவம் சில அரசியல் அறிவிப்புக்களை விடுத்து வருகின்றது. எனினும் அந்தப் பேச்சுக்களால் எந்தவித பயனும் இல்லை. தென் மாகாண சபையும் இருந்திருந்து இதுபோன்ற செயற்பாட்டில் ஈடுபடும் - என்றார். (த)

## வடக்கு...

ஏற்பட்டுள்ள இனவாதச் செயற்பாடுகளை நாம் ஆதரிக்கவில்லை. அரசியல்வாதிகளே இனவாதத்தைத் தூண்டி வருகின்றனர்.

பேருவளையில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் நீண்ட காலமாக சகோதரர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அந்த உறவைக் கொச்சைப்படுத்தும் வகையில் அங்கு கலவரம் தூண்டப்பட்டது. காரணம் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதி. இந்தச் சதியைச் செய்தவர் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

ஞானசாரருக்கும் பேருவளைக்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. அளுத்கமவில் ஞானசாரர் பேசுவதற்கு மேடை அமைத்துக் கொடுத்தது ஜாதிக ஹெல உறுமய.

இவர்கள் இப்போது இந்த அரசுடன் இணைந்து ஞானசாரரை விடவும் மிகவும் மோசமான வகையில் இனவாதம் பேசுகின்றார்கள்.

தெற்கில் அசாத் சாலி, வடக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோர் மிகமோசமான இனவாதத்தைக் கக்கி வருகின்றனர்.

ஞானசார தேரரைக் கைதுசெய்யும் முன் இவர்களைத்தான் கைது செய்ய வேண்டும். அதேபோல் இந்த இனவாதத்தைத் தூண்டி வரும் அரசியல்வாதிகளையும் கைதுசெய்ய வேண்டும் - என்றார்.

த-ய-3)

## மனோகரா – நவஜீவன்ஸ் கால்பந்தாட்டத்தில் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இந்தத் தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆரம்பம் முதலே ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. 18ஆவது நிமிடத்தில் மனோகரா அணியின் மதுசன் கோலொன்றைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியின் 28ஆவது நிமிடத்தில் மனோகரா அணியின் சாருஜன் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 33ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் அணிக்கு மதுசன் மூலம் ஓர் கோல் கிடைத்தது. 38ஆவது நிமிடத்தில் மனோகராவின் சர்வநிதி கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது மனோகரா. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பலம்பொருந்திய அணிகளான உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி. (ம-108)





# இந்துவை வீழ்த்தி ஏஞ்சல் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 33:22 என்று முன்னிலை பெற்றது மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி.

அந்த அணியின் ஆதிக் கம் இரண்டாம் பாதியிலும் தொடர்ந்து சென்றது.

முடிவில் 88:38 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்குச் சென்றது மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

**உதயதாரகை வி.கழக கால்பந்தாட்டத் தொடர்**

கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழக ஏ அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழக'பி' அணியும் மோதவுள்ளன.

**துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மைதானங்களில் நடைபெறவுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வீன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட்கழகஅணிமோதவுள்ளது. (ம-23-108)

## மத்தி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 24


யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 59:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வலுவான ஆதிக்கம் செலுத்தியது. அந்த அணியின் ஆதிக்கம் இரண்டாம் பாதியிலும் விடாமல் தொடர்ந்தது முடிவில் 115:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கராத்தே தொடர் நெல்லியடி மத்திய கல்லூரியில் கடந்த 20, 21 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இருபதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டன. யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறார்கள் 19 பதக்கங்கள் பெற்றனர். இவர்கள் இந்த வருடமே பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தேயில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)



## உடுவில் மகளிர் – கொக்குவில் இந்து இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

காக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதுவதாக இருந்தது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி சமுகம் தராமையை அடுத்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

உடுவில் மகளிரின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் திருக்குடும்ப கன்னியர் மட அணிக்குச் சாதகமாகவே இருந்தது. அந்த அணி முதல் பாதியின் முடிவில் 16:9 என்று முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதியில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திய யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி முடிவில் 41:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# ஆப்கான், அயர்லாந்து அணிகள் டெஸ்ட் விளையாடத் தகுதி பெற்றன

லண்டன், ஜூன் 24

ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து ஆகிய இரு கிரிக்கெட் சபைகளும் பன்னாட்டு கிரிக்கெட் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இரு அணிகளும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் முக்கிய கூட்டம் இங்கிலாந்தின் லண்டன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக அங்கீகரித்து முடிவெடுக்கப்பட்டது.

ஐ.சி.சி.யின் இந்த முடிவுக்கு மற்ற அனைத்து நிரந்தர உறுப்பு நாடுகளும் ஆதரவு தெரிவித்தன. நிரந்தர உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து இரு அணிகளும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட முடியும்.




இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய 10 அணிகள் மட்டுமே பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வந்தன. ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுடன் சேர்த்து இந்தத் தொகை 12ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் ஆட்டங்களில் மாற்றத்தையும் ரசிகர்களை அதிகம் கவர வேண்டும் என்றும் பன்னாட்டு கிரிக்கெட் சபை திட்டமிட்டது. மூன்று மாற்றங்களைப் பரிசீலித்து வந்தது. முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள், இரண்டாவது டெஸ்ட் ஆட்டங்களில் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை. இவை இரண்டும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மூன்றாவதாக டெஸ்ட் அணிகளை புதிதாக இணைக்கும் முயற்சி நீண்ட காலமாக பரிசீலிக்கப்பட்டு வந்தது. இந்த அடிப்படையிலேயே இந்த இரு அணிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டன.

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில், தமக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தால் தமது முதலாவது ஆட்டம் இந்திய அணியுடன் அமைய வேண்டும் என்று விரும்புவதாக ஆப்கானிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சரஸ்வதி வி.கழக அரையிறுதி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 24

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் என்பன அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கரவெட்டி ஸ்பேஸ் அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதவுள்ளது. இரண்டாவதாக இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் மல்லாகம் சிறிமுருகன் அணியை எதிர்த்து குருநகர் கார்மேல்போய்ஸ் அணி மோதவுள்ளது. இந்த அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் மோதும். (ம-23)

## துடுப்பாட்ட உபகரணம் வழங்கும் நிகழ்வு

வவுனியா மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் வவுனியா மாவட்டத்தில் கடினப் பந்து துடுப்பாட்ட அணிகளைக் கொண்ட சில பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கும் வவுனியா நெல்லிஸ்ரார் விருந்தினர் விடுதியில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், பண்டாரிக்குளம் விபுலாந்தாக் கல்லூரி, செட்டிக்குளம் மகா வித்தியாலயம், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், பூவரசன்குளம் மகா வித்தியாலயம், மடுகந்த மகா வித்தியாலயம், கோவில்குளம் இந்துக் கல்லூரி, புதுக்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே அவ்வாறு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் வைத்து, மேற்குறிப்பிட்ட பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட அணிகள் பங்குபற்றவுள்ள தொடருக்கான கிண்ண அறிமுகமும் நடைபெறவுள்ளது. (ம-23)

## இந்தியாவுக்கு 405 மில்லியன் டொலர்கள் வழிக்கு வந்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் வருமானப் பகிர்வில் இந்தியாவிற்கு 405 மில்லியன் டொலர் கிடைக்க இருக்கிறது.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் வருமானப் பகிர்வில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கிரிக்கெட் சபைகளே அதிகளவில் வருமானம் பெற்று வந்தன. இதனால் கிரிக்கெட் உலகின் மும்மூர்த்திகள் என்றும் அவை அழைக்கப்பட்டன. ஆனால் இதில் மாற்றம் கொண்டுவர பன்னாட்டு கிரிக்கெட் சபை திட்டமிட்டது. இதற்கு இந்தியா கடும் எதிர்பைத் தெரிவித்தது. பன்னாட்டுக் கிரிக்கெட் சபைக்கு அதிகளவில் வருமானம் வழங்குவது நாமே. இதனால் கூடுதல் வருமானம் எமக்கே கிடைக்கவேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வாதிட்டது. இது தொடர்பான இழுபறிகள் நீடித்துவந்த நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கோரிக்கைக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது.

இதன்படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 405 மில்லியன் டொலர்கள் கிடைக்கவுள்ளன. இங்கிலாந்துக்கு 139 மில்லியன் டொலர்கள் கிடைக்கவுள்ளன. இதுவே இரண்டாவது அதிகபட்சம். ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகளுக்கு தலா 128 மில்லியன் டொலரும், சிம்பாப்வே அணிக்கு 94 மில்லியன் டொலரும் வழங்க பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒப்புக் கொண்டுள்ளது. (ம)






## ஒரு வீரராக கும்ளே மீது நிறைய மரியாதை உண்டு

### கோக்லி தெரிவிப்பு

அனில் கும்ளே தனது தலைமைப் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய பின்னர் தன்னுடைய கருத்தைக் கூறுவதற்கு பின்னடித்து வந்த கோக்லி, ஓர் வீரராக அவர் மீது மரியாதை உள்ளது என்று தெரிவித்தார்.

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருக்காக அங்கு சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"அனில் கும்ளே தன்னுடைய பார்வைகளை வெளிப்படுத்தி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். அவருடைய முடிவை நாங்கள் மதிக்கிறோம். மினி உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டது. மினி உலகக்கிண்ணத் தொடரின் போது நான் 11 செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டேன். கடந்த 34 ஆண்டுகளாக நாங்கள் வளர்த்தெடுத்த பண்பாடு என்னவெனில் ஓய்வறையில் எது நடந்தாலும் ஓய்வறையின் புனிதத்தைக் காப்பதாகும். இதைத்தான் முழு அணியும் நம்புகிறது. எங்களுக்கு இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை மதிக்கிறேன். எனவே ஓய்வறை விவகாரங்களைக் கூற இயலாது" என கோக்லி தெரிவித்தார்.

தனது பயிற்சி முறையில் உங்களுக்கு கருத்து மாறுபாடுகள் இருந்தது என்று கும்ளே தெரிவித்துள்ளாரே என்று கேட்ட போது, "அது அவரது கருத்து, அவரது பார்வை. அதனை நான் மதிக்கிறேன். ஒரு கிரிக்கெட் வீரராக அனில் மீது எனக்கு முழு மரியாதை உள்ளது. நாட்டுக்காக அவர் செய்த சாதனைகளையும் பெரிதும் மதிக்கிறேன். இதனை அவரிடமிருந்து எடுத்து விட முடியாது. நாங்கள் அனைவருமே அவரை மிகவும் மதிக்கிறோம்"- என்றார். (ம)


## 15 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை கூடைப்பந்தாட்டத்திடலில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து காலை 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசலை அணி மோதவுள்ளது. (ம)



# மொனாக்கோவில் மின்னும் மின்னல்

மொனாக்கோவில் அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெற இருக்கும் டைமண்ட் லீக் தடகளத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்க வீரர் உசைன் போல்ட் கலந்துகொள்வது உறுதியாகியுள்ளது.

உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரர் என்ற பெருமையை பெற்றிருப்பவர் உசைன் போல்ட். கடந்த மூன்று ஒலிம்பிக் தொடரிலும் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார். இதன் காரணமாக மின்னல் வேக மனிதர் என்று அவரை அழைக்கின்றனர். கடந்த வருடம் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடருடன் ஒலிம்பிக் தொடரில் இருந்து விடைபெற்றார். சில தினங்களுக்கு முன்னர் ஜமைக்காவில் நடைபெற்ற பந்தயத்தில் கலந்துகொண்டார். அதுவே அவர் தனது தாய் மண்ணில் கலந்துகொண்ட இறுதிப் பந்தயமாக அமைந்தது. இவ்வாறு ஒவ்வொரு தொடரிலும் கலந்துகொண்டு அவற்றுக்கு விடைகொடுத்துவரும் போல்ட் மொனாக்கோவில் அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள தொடரிலும் கலந்துகொள்கிறார். இதுவே அவர் இறுதியாகக் களமிறங்கும் மொனாக்கோ தொடராக (டைமன்ட் லீக்) அமையும். (ம)

## பெண்களுக்கான உலகக்கிண்ணம் இன்று நியூசிலாந்தை எதிர்க்கிறது இலங்கையணி



பெண்களுக்கான உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் இன்று ஆரம்பமாகிறது. இன்று இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்தை எதிர்த்து இலங்கை அணி மோதவுள்ளது.

இந்தத்தொடரில்மொத்தம்எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன. நியூசிலாந்து, இலங்கை, ஆஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய எட்டு அணிகள்பங்குபற்றுகின்றன. இன்று ஆரம்பமாகும் லீக் ஆட்டம் அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை நடைபெறும். ஜூலை 18ஆம் திகதி முதலாவது அரையிறுதி ஆட்டமும், ஜூலை 20ஆம் திகதி இரண்டாவது அரையிறுதி ஆட்டமும், ஜூலை 23ஆம் திகதி இறுதியாட்டமும் நடைபெறவுள்ளன. (ம)

## அறிமுகமானார் குல்தீப் யாதவ்



ஒருநாள் ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இளம் வீரர் குல்தீப் யாதவ் அறிமுகமானார்.

மினி உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பிற்பாடு இந்திய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் சார்பாக குல்தீப் யாதவ் அறிமுகம் செய்யப்பட்டார்.

இந்தத் தொடரில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோகித், வேகப்பந்து வீச்சாளரான பும்ரா இருவருக்கும் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. பும்ராவின் இடம் குல்தீவ் யாதவால் பிரதியீடு செய்யப்பட்டது. முன்னதாக முடிவடைந்த ஐ.பி.எல். தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதன் அடிப்படையிலேயே இந்த வாய்ப்பு குல்தீப் யாதவுக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

**அரிசி ஆலை விற்பனைக்குண்டு**
இயங்கிக் கொண்டிருக்கும் அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 0773786647, 0774013959

கொவிபதி
சீட்டிழுப்பு வாரம்: 153
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 91,354,776/-
சீட்டிழுப்பு திகதி 23.06.2017
W 01 05 06 58

சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம்: 576
சீட்டிழுப்பு திகதி: 23.06.2017
வெற்றி இலக்கங்கள்
19 32 39 42 K
ரூ. 29,413,019/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.06.2017
வெற்றி வாரம் 2149
வர்ணம் சிவப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள் 44 57 58 59
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
25.06.2017 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை

**VACANCIES**
Customer Service Executive
(Part time / Full time)
Requirements:
1. Fluent in English (writing & Speaking)
2. Computer Skills (Internet and Email)
3. Ability to work in Day & Night Shift
Benifits
1. Accommodation provided
2. Attractive remuneration
Apply - careers. penguin @gmail.com
Interview - 25.06.2017, 9.00AM
076 8578 474, 021 222 7077

மலிவா? எங்கே?
ST.ANTONY'S (10%)
~~49 990/=~~ 45 990/=
10% கழிவு
HP Quad Core
4GB RAM, 500 GB HDD
15.6" LED WIFI / BT/ CAM
FREE - 8GB PEN/ H.PHONE
187, K.K.S. ROAD, JAFFNA TOWN. 021 222 4865 075 069 8608
கையிருப்பு உள்ளவரை

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 01 . 07 . 1983

ஆண்டவன் அடியில் 25 . 05 . 2017

## அமரர் அனுராதா சுரபாஸ்கரன்

உன் நினைவுகளைச் சுமந்திருப்போம்!
நேற்று வரை இருந்த நீ இன்றில்லை
தேற்றும் வகை தெரியாது தவிக்கிறது மனதிங்கே
அனுதினமும் நாமிங்கே உன் நினைவில்
அழுவதினை அறிவாயோ அனுவே நீயங்கே...
குஞ்சுகளும் உனைத்தேடி அழுகின்றனவே
அஞ்சுகமே அவர்கள் முகம்காண வாராயோ நீயிங்கே
மாதமொன்றானாலும் மாறிடுமோ உன் நினைவு
மீதம் எம்காலம் இம்மண்ணில் இருக்கும் வரை
மரித்த உன் வாழ்வின் நினைவுகளை
மனம் முழுக்கச் சுமந்த வண்ணம் வாழ்த்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துர்க்காபுரம்
ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலயம்
படித்த மகளிர் திட்டம் மிருசுவில்.

குடும்பத்தினர்.

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
July 22 திறந்த பரீட்சையும் 23 ஆம் திகதி மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம் - ஞாயிறு 10 மணி. ஞாயிறு (25/6) திங்கள் (26/6) காலை 10.00 - 3.30 மணிவரை
தொடர்புக்கு -076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கி அருகில்)

**கோட்டா மில் விற்பனைக்கு**
பிரதான வீதி முகப்புடன் கோட்டா மில் காணியுடன் சகல வசதியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 0776001701

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.